[redacted]

# சன்சோனி ஆணைக்குழு

## முன் அளிக்கப்பட்ட

# சாட்சியங்கள்

## பாகம் 3

[redacted]

# ஆவணி அமளி

சன்சோனி ஆணைக்குழு முன்
தமிழ் அகதிகள் மறுவாழ்வுக் கழகம்


தமிழ்த் தொகுப்பு:

**க. சச்சிதானந்தன்**



விற்பனை உரிமை:

**காந்தளகம்**

*213, காங்கேசன் துறை வீதி,*
*யாழ்ப்பாணம்.*



க. குகனேந்திரன்
பூநாறி மரத்தடி

நூல்: ஆவணி அமளி - 3
தமிழ்த் தொகுப்பு: க. சச்சிதானந்தன்
முதற்பதிப்பு: 20-6-1978
அச்சுப்பதிவு: ஸ்ரீ காந்தா அச்சகம்,
213, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
வெளியீடு: தமிழ் அகதிகள் மறுவாழ்வுக் கழகம்,
676, காலி வீதி,
கொழும்பு-3.
விற்பனை உரிமை: காந்தளகம்,
213, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
விலை: 4-50

நூலின் நிகரவருவாய் அகதிகள் மறுவாழ்வுக்குப் பயன்படுத்தப்படும்.

## தமிழ் அகதிகள் மறுவாழ்வுக் கழகம்

தலைவர்: திரு. க. கு. நித்தியானந்தா
இணைச் செயலாளர்கள்: திரு. க. கந்தசாமி
திரு. க. நடராசா
இணைப்பொருளாளர்கள்: திரு. வி. எஸ். துரைராசா
திரு. ஆர். யோகராசா

க. குகனேந்திரன்
பூநாறி மரத்தடி
கொக்குவில்

# மூன்றாம் நாள்

1978 பெப். 10 வெள்ளிக்கிழமை காலை 9-30 மணி.

**சட்டத்தரணி இ. பாலசுப்பிரமணியம்:**

இலங்கை இந்து இளைஞர் பேரவை சார்பில் நான் உங்கள் முன் தோன்றுகிறேன். இந்நாட்டில் எழுபத்து ஐந்துக்கு மேற்பட்ட இந்து இளைஞர் மன்றங்கள் உண்டு. இந்த நாட்டில் உள்ள ஏறத்தாழ இருபத்தைந்து லட்சம் இந்துக்களின் சார்பில் நான் தோன்றுகின்றேன். இந்து சமயத்தின் பூர்வ வரலாற்றை மகாவம்சத்திலும் காணலாம். தேவைப்படும் பொழுது நான் நிபுணத்துவ சாட்சியங்களை அழைப்பேன். இந்துக்கோவில்கள் இந்துக்களுக்கு மட்டும் உரியவையல்ல. ஏனைய சமயத்தவர்களும் அங்கு வழிபடுகின்றனர். இந்துக்களோ, அவர்களின் கோவில்களோ, வடக்குக் கிழக்கு மாகாணங்களில் மட்டும் இருக்கவில்லை. இந்த நாட்டின் ஒன்பது மாகாணங்களிலும் அவை உள. தமிழரின் தெய்வமான கதிர்காமத்தை, துட்டகைமுனுவும் வழிபட்டான் என்பது அனைவரும் அறிந்தது.

இலங்கையில் ஐந்து ஈஸ்வரங்கள் உண்டு. அவையாவன: கோணேஸ்வரம், முன்னேஸ்வரம், கேதீஸ்வரம், நகுலேஸ்வரம், மாமாங்கேஸ்வரம் என்பன. இவை வரலாற்றுப் பெருமை உடையவை. இந்தியாவிலும் ஏனைய நாடுகளிலும் உள்ள மக்கள் இங்கு வந்து வழிபடுகின்றார்கள். சிவனொளிபாத மலைக்கும் இந்துக்கள் போய் வழிபடுகின்றார்கள்.

உங்களுடைய பணி முக்கியமான பணி. இந்த நாட்டில் உள்ள இந்துக்களுக்கும், இந்துக்கோவில்களுக்கும்

[illegible library stamp]



ஏற்பட்ட துன்பங்களையும், சேதங்களையும் நீங்கள் விசாரிக்க வேண்டும். மனிதனில் இறைவனைக் காண்பது இந்து சமயம். புனிதமான இந்த மனிதன் ஏன் மிருகமாயினான் என ஆராயவேண்டும். உலகெங்கும் இந்துக்கோவில்கள் கட்டப்படும் இவ்வேளை இங்குள்ள ஒருசிலர் இவற்றை உடைக்க முயற்சிப்பது ஆச்சரியமானது. முட்டையைக் கூட உடைக்க விரும்பாத மக்கள் மக்களைக் கொலை செய்வது ஆச்சரியமல்லவா? இந்த நாட்டிற்கு வெளியே உள்ள பலர் இக் கேள்விகளைக் கேட்கின்றார்கள். புத்த பகவான் அன்பைப் போதித்தார். அகிம்சையைப் போதித்தார். புத்தசமயத்திற்கு முதலிடம் கேட்பவர்கள் புத்தரின் கொள்கையைக் கடைப்பிடிப்பவர்களாகக் கூறுபவர்கள் இக்கொடுமைகளைச் செய்தார்கள். இவர்கள் ஏன் புத்ததர்மத்தை மீறினார்கள்?

இந்துக்கோவிற் குருமார்கள் மீதும் நடைபெற்ற காடைத்தனமானதாக்குதல்கள், இந்துக் கோவில்கட்கு ஏற்பட்ட சேதங்கள் என்பனவற்றைக் கண்ட சாட்சியங்களை அழைப்பேன். புகைப்படங்களைத் தருவேன். பிற ஆவணங்களையும் தருவேன். உலகின் இந்தப் பகுதியில் மக்கள் ஏன் இவ்வாறு நடந்து கொண்டார்கள்? இலங்கை இந்து இளைஞர் பேரவைத் தலைவர் திரு. சிவநேசராசாவும், செயலாளரும் சாட்சியமளிக்க உங்களிடம் அனுமதி கோருகின்றேன்? இந்தநிகழ்வுகள் ஏன் நடைபெற்றன? யார் இதைச்செய்தார்கள்? என்பனவற்றைக்கண்டு பிடிப்பதில் உங்கட்கு உதவுவது எமது கடமை. உங்களது அறிக்கை இந்நாட்டு மக்களின் கண்களைத் திறக்கவேண்டும். ஆணையாளர்: நீங்கள் மகஜர் அனுப்பியதாகக் கூறினீர்களா? செயலாளர்: ஆம். திரு. ஜீ. பீ. எஸ். சில்வா. நான் ஒன்றும் சொல்ல விரும்பவில்லை.

திரு. கதிர்காமர்: நான் திரு. யோகேஸ்வரனை அழைக்கிறேன். யாழ்ப்பாணத்துப் பாராளுமன்ற உறுப்பினர் அவர்தாம்.

வெற்றிவேலு யோகேஸ்வரன்: (உறுதியுரைகூறினர்)

1977 ஆகஸ்ட் 13-ம் நாள் சென்பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் களியாட்டுவிழா ஒன்றினை மருத்துவர் பிலிப்ஸ் ஒழுங்குசெய்திருந்தார். 13-ம்நாள் இவர் என்னிடம் வந்தார். 12-ம் நாளிரவு பொலிசார் களியாட்டு விழாவிற்குப் போனதாகவும், குழப்பம் விளைவித்ததாகவும் கூறினர். பொலிசாரிடம் தலையிட்டு, இறுதி நாளாகிய 13-ம் நாளிரவு பொலிசார் களியாட்டு விழாவிற்கு வராமல் பார்த்துக் கொள்ளும்படி கேட்டுக்கொண்டார். நான் எஸ். பியிடம் தொடர்பு கொள்ள முயற்சித்துத் தோல்வியுற்றேன். தொலைபேசியில் அவருடன் தொடர்பு கொள்ள முடியவில்லை. தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் திரு. குணசேகராவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டேன். களியாட்டுவிழா மைதானத்தினுள் பொலிசார் அனுப்பப்படாது இருப்பது நல்லது என மருத்துவர் பிலிப்ஸ் கருதுவதாக நான் அவரிடம் கூறினேன். நான் சொன்னதை ஏற்றுக்கொண்ட அவர், எஸ். பி. யிடம் இதற்கான கட்டளையைப் பெறுவதாகக் கூறினர்.

13-ம் நாளிரவு களியாட்டு விழாவில் கலாட்டா நடந்ததாகப் 14-ம் நாள் காலை எனக்குத் தெரிவிக்கப்பட்டது. இக்கலாட்டாவில் பொலிசாரும் ஈடுபட்டிருந்தனராம். நான் தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டருடன் தொடர்பு கொண்டு விசாரித்தேன். பொலிசார் தடையை மீறி எவ்வாறு களியாட்டு விழாவிற்குச் சென்றார்கள் எனக்கேட்டேன். அவர்கள் தனது பிரிவில் உள்ளவரல்லர் எனவும் ஆனைக்கோட்டை, சாவகச்சேரி ஆகிய நிலையங்களில் இருந்து வந்தவர்கள் எனவும் கூறினர்.

14-ம் நாள் முழுவதும் பொலிசார் அங்கும் இங்கும் மக்களைத் தாக்கிக் கொண்டிருந்ததைப் பற்றி எனக்குத் தகவல் கிடைத்துக்கொண்டிருந்தது. 15-ம் நாள் காலை

5-45 மணியளவில் ஐந்தாறுபேர் வந்து என்னை எழுப்பினார்கள். இலங்கைப் போக்குவரத்துச் சேவையைச் சேர்ந்த திரு. யேசுதாசன் என்பவரைப் பொலிசார் தாக்கிக் குளத்தினுள் போட்டார்கள் என இவர்கள் கூறினார்கள்.

பொலிசார் வேறு இருவரையும் தாக்கினார்கள் என அறிந்தேன். பொலிஸ் நிலையத்தின் தொலைபேசியில் பேச முயற்சித்தேன். மணி அடித்துக் கொண்டிருந்தது. யாரும் பதில் தரவில்லை. என்னிடம் வந்தவர்களில் எவராவது காயப்பட்டிருப்பின் மருத்துவமனை செல்லுமாறு கூறினேன். ஏனையோரைத் தத்தம் வேலைக்குச் செல்லுமாறு கூறினேன். 7 மணியளவில் மருத்துவமனை சென்று காயமடைந்தோரைப் பார்த்தேன். தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டரின் வீட்டுக்குத் தொலைபேசியில் கதைத்தேன். விபரம் கூறினேன். பிரதிப் பாதுகாப்பு அமைச்சருக்குத் தந்திச் செய்தி அனுப்பினன். தந்தியின் வாசகம் இதுதான்.

யாழ்ப்பாணக் குடிமக்கள்மீது காரணமின்றி அடாத்தாகப் பொலிஸ் தாக்குதல், காயமுற்ற மூவர் மருத்துவமனையில் உடன் விசாரணைக்குக் கட்டளை இடுக. சூழ்நிலை பதட்டமாக உள்ளது. எஸ். பி. நிலைமையைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர உதவுக.

திரு. கதிர்காமர்

X 6 எனக் குறியிட்டு இத்தந்தியை இணைக்கிறேன்:

வெ. யோகேஸ்வரன்:

கொழும்பு பொலிஸ் மாஅதிபருக்கு வேறொரு தந்தி அனுப்பினேன், ''பொதுமக்கள் மீது பொலிஸார் தூண்டுதலற்ற தாக்குதல் — மூவர் படுகாயத்துடன் மருத்துவமனையில், இவர்களுள் ஒருவர் இ. போ. ச. ஊழியர்.....

நிலை பதட்டமாக உள்ளது'' ஆகஸ்ட் 15-ம் நாள் இத்தந்தி அனுப்பப்பட்டது. அன்று ஒரு மணிக்கும் மருத்துவமனை சென்றிருந்தேன், அடுத்தநாள் ஆகஸ்ட் 16-ம் நாள் காலை 50 பேரளவில் எனது வீட்டுக்கு வந்தனர். காக்கிக் காற்சட்டையும் சட்டையும் அணிந்த பத்துப்பொலிசார், அதிகாலை 1-40 மணியளவிற் பழையசந்தையில் உள்ள பாய்க்கடைக்குத் தீவைத்தனர். நல்லெண்ணெய்ப் போத்தல்களையும் கடையில் உள்ள பிற போத்தல்களையும் உடைத்தனர். சுபாஸ் கபே, அட்டன் நாஷனல் வங்கிப் பக்கத்தில் உள்ள ஐந்தாறு கடைகள், ஆகியவற்றின் பெயர்ப் பலகைகளை உடைத்தனர். சிலகளை உடைத்தனர். முன்னேஸ்வரம் வீதியில் கராச்சுகளில் நின்ற கார்களைச் சேதப்படுத்தினர்'' என என்னிடம் வந்தவர்கள் கூறினார்கள்.

நான் உடன் எஸ். பியுடன் தொடர்புகொள்ள முயன்று தோல்வி கண்டேன். பின்னர் கொழும்பில் உதவிப் பொலிஸ்மாஅதிபர் திரு. அனு செனிவிரட்னவுடன் தொடர்பு கொண்டேன். அவர் அங்கு இல்லை. அவர் வடக்கே, அலுவலகப் பணிக்காக வந்துள்ளதாக அவரின் மனைவி கூறினார்.

அதிகாலை 5-15 மணிக்கு அரசாங்க அதிபர் திரு. லால் விஜயபாலா அவர்களுடன் தொடர்பு கொண்டேன். 50 பேர் வீட்டுக்கு முன் நிற்பதையும், பொலிசார் சேதம் விளைவிப்பதையும் பழைய சந்தைக்குத் தீவைக்க முயன்றமை பற்றியும் நான் கூறினேன். பதட்டநிலை உருவாகி வருவதையும், அதைக் கட்டுப்பாட்டினுள் கொண்டுவர உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கூறினேன். முழங்காவிலுக்கு அலுவலகக்கடமை காரணமாகச் செல்வதாகவும், எனது செய்தியை உரிய அதிகாரிகளிடம் சொல்லிய பின் என்னை அழைப்பதாகவும் அவர்கூறினர். பழைய சந்தைக்கு உடனடியாக நான் செல்கிறேன். எனவே நான் வீட்டில் இருக்கமாட்டேன் என அவரிடம் தெரிவித்தேன்.

க. குகனேந்திரன்
பூநாறி மரத்தடி

எனினும் 5-30 மணியளவில் அரசாங்க அதிபர் எனது வீட்டிற்குத் தொலைபேசியிற் தொடர்பு கொண்டு எனது மனைவியிடம் செய்தி தெரிவித்தார். அதாவது தமக்கு பொலிஸ் சுப்பிரிண்டனுடன் தொடர்பு கொள்ள முடியவில்லை எனவும், உதவிப் பொலிஸ் சுப்பிறின்டன் திரு. நூர்தீனுக்கு இதுபற்றி அறிவித்திருப்பதாகவும் கூறினார். காலை 5-30 மணிக்கு எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கத்துடன் நான் தொலைபேசியிற்கதைத்து நகரில் உள்ள நிலைமை பற்றி விளக்கினேன். தான் பிரதமருடன் தொடர்பு கொள்வதாகவும், என்னைக்காண யாழ்ப்பாணம் வருவதாகவும் கூறினார். கமிஷனர்: அவர் எங்கே இருந்தார். திரு: யோகேஸ்வரன்: அவர் வட்டுக்கோட்டையில் வசித்தார்? யாழ்ப்பாணத்திலிருந்து பத்து மைல் தொலைவில் அவர் வீடு உள்ளது. காலை 6-15 மணிக்கு நான்பழைய சந்தைக்குச்சென்றேன். நொருக்கப்பட்ட கடைகள், ஒரு பகுதி எரிக்கப்பட்ட பழைய சந்தை, உடைக்கப்பட்ட பெயர்ப் பலகைகள், சேதப்படுத்தப்பட்ட சிலைகள், என்பனவற்றைக் கண்டேன். சந்தையை அடைந்தபின் ஏழு மணியளவில் எனது காரை அனுப்பிக் கோப்பாய் பா. உ. திரு. கதிரவேற்பிள்ளை அவர்களை அழைப்பித்தேன். முன்னேஸ்வரம் வீதி வழியாக இருவரும் சென்று சேதப்படுத்தப்பட்ட கார்களைக்கண்டோம். 23 ஸ்ரீ 3977 பதிவு எண் உடைய டிரக் ஒன்றில் பொலிசார் வந்ததாகப் பழைய சந்தையில் உள்ள ஒருவர் கூறினார். நானும் கோப்பாய் பா. உ. வுமாகச் சேதங்களைப் பார்வையிட்டோம். இதற்கிடையில் அங்கு சிறு கூட்டம் கூடிவிட்டது. தேவையான நடவடிக்கைகளை எடுப்போம் எனக் கூறிக் கூட்டத்தைக் கலையுமாறு கேட்டுக் கொண்டேன். எட்டு மணியளவில் வீடு திரும்பினேன். ஆயுதந் தரித்த பொலிசார் இருவர் மக்களால் விரட்டப்பட்டதாகவும் இதைத்தொடர்ந்து குழப்பம் நடந்ததாகவும், பின்னர் கேள்விப்பட்டேன். இப்பொலிசார் ஒருவரிடம்

இருந்து கைப்பற்றிய துவக்கின் அடியினுல் தனது ஜீப்புக்குச் சேதம் விளைவித்ததாக ஏ. எஸ். பி. திரு. நூர்தீன் என்னிடம் கூறினுர். எட்டு மணியளவில் நானும் திரு. கதிரவேற்பிள்ளையும் வீடு திரும்பினேம்.

ஒன்று மறியாத மக்களைப் பொலிசார் விரட்டிக் கொண்டிருந்ததை வீடுபோகும் வழியில் நான் கண்டேன். வீட்டிலோ இருநூறு அல்லது முந்நூறு பேர்வரை புகலிடம் தேடி வந்திருந்தார்கள். சிலர் அச்சத்தினுல் அங்கு வந்திருந்தார்கள். பொலிசார் மக்களைத் தாக்குவதைக் கூறச் சிலர் வந்திருந்தார்கள். வளவிற்குள் நிற்குமாறும், வெளியே நிற்கவேண்டாம் எனவும் அவர்களிடம் கூறினேன். காலை 8-40 மணியளவிற் பிரதமருடன் தொலைபேசியிற் தொடர்பு கொள்ள கோப்பாய் பா. உ. முயற்சித்துத் தோல்வி அடைந்தார். பழைய சந்தை முழுவதும் எரிந்துகொண்டிருப்பதையும், புதிய சந்தையில் ஒருபகுதி எரிந்துகொண்டிருப்பதையும், பொலிசாரே இவற்றுக்குத் தீவைத்தார்கள் எனவும், இரண்டொருவர் சுடப்பட்டு அவர்களின் உடல்கள் மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும் மக்கள் என்னிடம் கூறினுர்கள்.

காலை 9-30 மணியளவில் எனது அலுவலகத்தில் நான் இருந்த பொழுது பதினைந்து இருபது ஆயுதந் தாங்கிய பொலிசார் எனது விருந்தைக்கு வந்தனர். அவர்களை வீட்டிற்குள் என்ன செய்வதற்காக வந்தீர்கள் எனக்கேட்டேன். அவர்கள் என்னை இழித்தனர், திட்டினர். நான் பிரதமருடன் பேச இருந்ததால் அவர்களை வீட்டைவிட்டு வெளியேறுமாறு கேட்டேன். அவர்களுள் ஒருவரான சார்ஜன்ட் அலோஷியஸை எனக்குத் தெரியும். பொலிசாரை வெளியே அழைத்துச் செல்லுமாறு அவரிடம் சொன்னேன். பொலிசார் அவ்விடத்தை விட்டு நீங்கச் சார்ஜன்ட் அலோஷியசும் அவ்விடத்தை விட்டு நீங்கினுர். காலை 9-45 மணியளவில் நான் இளைப்

பாறிய மாவட்ட நீதிபதி திரு: தம்பித்துரை, முன்னுள் மாநகராட்சி உறுப்பினர் திரு. கந்தையா ஆகியோருடன் மருத்துவ மனைக்குச் சென்றேன். இறந்த இருவரின் சடலங்கள் மருத்துவமனைக்குக் கொண்டுவரப்பட்டதாக மருத்துவ அத்தியட்சகர் எம்மிடம் கூறினுர்.

மின்சார நிலைய ஒழுங்கையில் முதியவர் ஒருவர் திடீரென விழுந்து இறந்தார் எனவும், அவரின் சடலம் அங்குள்ள வீடு ஒன்றில் உள்ளது எனவும், வீட்டில் உள்ள குழந்தைகள் அஞ்சுவதால், அச்சடலம் அகற்றப் பட வேண்டும் எனவும் மருத்துவமனையில் இருந்த மக் கள் என்னிடம் கூறினர். அந்த ஒழுங்கை வழியாக நான் அந்த வீட்டிற்குச் சென்றேன். மருத்துவ மனையு டன் தொடர்பு கொண்டு சடலத்தை மருத்துவ மனைச் சவக்காலைக்கு அனுப்பிவைத்தேன்.

காலை 10-30 அல்லது 11 மணியளவில் திரு. அமிர்த லிங்கம் வீட்டிற்கு வந்தார். அரைமணி நேரத்தின் பின் திரு. அமிர்தலிங்கம், திரு. தர்மலிங்கம், முன்னுள்மேயர் திரு. நாகராசா ஆகியோர் பழைய சந்தைப் பக்கம் போனுர்கள். அங்கு நடைபெறுவதைப் பார்க்கப் போனுர்கள். உயர்மட்டக்குழு ஒன்று கொழும்பிலிருந்து வருவதாகத் தகவல் கிடைத்ததால் நிலைமையைத் தெரிந்து கொள்ள நாம் விரும்பினேம். முழுமையான விபரத்தைத் தெரிந்து பின்பு அக்குழுவிடம் உரைக்க விரும்பினேம். திரு. கதிரவேற்பிள்ளையின் காரில் நாம் சென்ருேம். மருத்துவ மனைக்கு முன்பாக வெளிநோயா ளர் பகுதிக்கு எதிரே கூட்டம் ஒன்று இருந்தது. கற்கள் குவிக்கப்பட்டு வீதி தடுக்கப்பட்டு இருந்தது. டயர் ஒன்று எரிந்து கொண்டிருந்தது. இவற்றைக் கடந்து நாம் சென்ருேம். பதினைந்து யாருக்கு அப்பால் இருபது முப்பது பொலிசார் வரிசையாக நின்றுகொண்டிருந் தனர். கார் அவர்களை அண்மித்தது. அவர்கள் எம்மைப் பார்த்தனர். நாம் காரை நிறுத்தினேம். திரும்ப

முயற்சித்தோம். பொலிசாரைத் தடைசெய்தவாறு தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் திரு. குணசேகரா ஓடிவந்தார். ''அவர்கள் பா. உ. க்கள் அவர்கள் வரட்டும்'' எனஅவர் கூறினார். காரை விட்டிறங்கிப் பொலிசாரை அணுகினோம். உயர் தரப் பொலிஸ் அதிகாரிகள் சீருடை அணிந்திருந்தார்கள். ஏனையோரும் சீருடையில் இருந்தனர். ஆனால் பதிவு எண்கள் இருக்கவில்லை. சிலர் பனியனும், காற்சட்டையும் அணிந்திருந்தனர். நிலைமையை நேரடியாகப் பார்த்து அறிய விரும்பினோம். பொலிசார் மீது கைக்குண்டுகள் வீசப்படுவதாக ஏ. எஸ். பி திரு. நூர்தீன் கூறினார். குண்டுகள் எறியப் பட்டதைக் கண்டீரா? எனத் திரு. அமிர்தலிங்கம் அவரிடம் கேட்டார். ''நான் காணவில்லை. தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் அவ்வாறு சொல்கிறார்'' என்றார். குண்டுகள் எறியப்பட்டனவா எனத் தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டரைத் திரு. அமிர்தலிங்கம் கேட்டார். இல்லை, என அவர் கூறினார். தான் அவ்வாறு ஏ. எஸ். பி. யிடம் கூறவில்லை என்றும் கூறினார். இத்தகைய பொறுப்பற்ற பேச்சுத்தான் உயிர்க்கொலைகளுக்குக் காரணமாக உள்ளது என ஏ. எஸ். பி. யிடம் திரு. அமிர்தலிங்கம் கூறினார். உயர் அதிகாரிகளுடன் இது பற்றிப் பேசுவதாகவும் திரு. அமிர்தலிங்கம் கூறினார்.

ஐம்பது யார் தூரத்தில் மக்கள் கூட்டம் வரிசையாக றோட்டில் நின்றது. நான் அவர்களிடம் கலைந்து செல்லுமாறு சென்று கேட்க எண்ணி அவர்களை நோக்கி இரண்டடி எடுத்து வைத்தேன். அப்பொழுது திரு. அமிர்தலிங்கம் சத்தமிட்டுப் பேசியதைக் கேட்டேன். ''எதிர்க்கட்சித் தலைவருக்கு இவ்வாறு செய்து விட்டுத் தப்பமுடியாது. கொழும்பு சென்றதும் பிரதமருடன் இதைப்பற்றிப் பேசுவேன்'' என்றார். திரு. தர்மலிங்கம் அவருக்குப் பக்கத்தில் நின்றுகொண்டிருந்தார். என்ன தொல்லை என அவரிடம் கேட்டேன்.

பொலிசார் திரு. அமிர்தலிங்கத்தைத் தாக்கியதாக அவர் சொன்னார்.

பார்த்துக் கொண்டு நின்ற கூட்டத்தினர் பரபரப் படைந்தனர். சத்தமிட்டனர். கைகாட்டினர். கூட்டத் தினரைநோக்கி நான் நடந்தேன். அப்பொழுது துப்பாக் கியாற் சுட்டஒலி கேட்டேன். மக்களிடம் சென்று, அவர் களைக் கலைந்து செல்லுமாறு கேட்டேன். அமிர்தலிங்கம் தாக்கப்பட்டதாக மக்கள் கூறினார்கள். நான் அதை மறுத்தேன். மக்கள் கூட்டம் நகரவில்லை. பதினைந்து இருபது நிமிடங்கள் வரை அவர்களிடம் மன்றாடிவிட்டு திரு. அமிர்தலிங்கம், திரு. தர்மலிங்கம் ஆகியோர் இருந்த இடத்துக்கு வந்தேன். அப்பொழுது திரு. அமிர்தலிங்கம் பொலிசார் தமது தலைக்கு மேலாக மக்கள் கூட்டத்தை நோக்கிச் சுட்டதாகக் கூறினார். இதைத் தொடர்ந்து நாம் அனைவரும் வீடு சென்றோம். யாழ்ப் பாணத்தில் எழுந்துவரும் பதட்டநிலைபற்றிக் கொழும் பிலுள்ள அதிகாரிகட்குத் தொலைபேசியில் விபரங்களைக் கூற விரும்பினோம். மத்தியானம் பன்னிரண்டு மணியள வில் திரு. அமிர்தலிங்கம் தொலைபேசிக்காகக் காத்துக் கொண்டிருந்தபொழுது பரபரப்படைந்த மக்கள் எனது வீட்டு விறுந்தைக்கு வருவது கண்டேன். வெளியேசென்று பார்த்தபொழுது காக்கிக் காற்சட்டையும், பனியனும் அணிந்த நான்கு பொலிசார் ஜீப்பில் வந்து, ஜீப்பை நிறுத்தி விட்டு என்னை நோக்கி வந்தனர். "கெட்ட நாயே, இவற்றிற்கெல்லாம் நீதானே காரணம்" என அவர்களுள் ஒருவர் கூறினார். வீட்டை விட்டு வெளி யேறுமாறும் இதுபற்றி எஸ். பி. யிடம் பேசுவேன் என வும் அவர்களிடம் கூறினேன். அவர்கள் போகும்பொழுது மக்கள் சத்தமிட்டனர். ஜீப்பினுள் இருந்த பெரிய கல் ஒன்றைத் தூக்கி என் வீட்டினுள் எறிந்து விட்டுப் பொலி சார் சென்றனர்.

லீலா பேக்கரி எனது வீட்டிற்கு அண்மையில் உள் ளது, இங்கு மக்கள் கூடியிருந்தனர் எனக் கேள்விப்பட்

டதும். கலைந்து செல்லுமாறு அங்கு சென்று அவர்களிடம் கூறினேன். அந்த பேக்கரி உரிமையாளரை எனக்குத் தெரியும். ஒரு துன்பமும் வராதென்றும், வந்தால் எனக்கு உடனடியாக அறிவிக்குமாறும் கூறிச் சென்றேன். அடுத்து நாகவிகாரைக்கு அண்மையிலுள்ள ஆரியகுளம் சந்திக்குச் சென்றேன். நாகவிகாரைக்கு அண்மையிலுள்ள அவ்விடத்திற் கூட்டம் நின்றதைக் கண்டேன். கலைந்து போகச் சொன்னேன். கலவரம் நடைபெறுது கண்காணிக்கும்படி அயலவரிடம் கூறினேன். இரண்டு மூன்று மணிநேரம் நான் பேசியிருப்பேன். பொலிசாரின் அத்துமீறல் பற்றி அங்கு பலர் என்னிடம் கூறினர்கள்.

நான்கு அல்லது ஐந்து மணியளவிற் பொலிஸ் மாஅதிபரும், பாதுகாப்புப் பிரதி அமைச்சரும் அரசாங்க அதிபரின் இல்லத்திற்கு வருவார்கள் எனப் பிற்பகல் இரண்டு மணியளவில் எனக்குத் தகவல் கிடைத்தது. எதிர்க்கட்சித் தலைவர், கோப்பாய் பா. உ., மானிப்பாய் பா. உ, ஆகியவர்களுடனும், பிறருடனும் நான் அரசாங்க அதிபரின் இல்லத்திற்குச் சென்றேன். அங்கு நடந்த மாநாட்டிற் பொலிசாரின் அத்துமீறல் பற்றிப் பாதுகாப்புப் பிரதியமைச்சரிடம் தெரிவித்தேன். ஊரடங்குச் சட்டம் வேண்டாம் எனவும் அங்கு நாம் தெரிவித்தோம். ஊரடங்குச் சட்டம் வரின் பொலிசாரின் அத்துமீறலுக்கு உதவியாகும் எனக் கூறினோம். மாலை 7 மணிக்கு மாநாடு முடிந்ததும் வீடு திரும்பினோம்.

காயமடைந்தவர்களையும். அகதிகளையும் கொண்டு புகைவண்டி ஒன்று யாழ்ப்பாணம் வருவதாகப் பதினேழாம் நாள் காலை எனக்குத் தகவல் கிடைத்தது. மக்களைக் கொண்டு செல்வதற்குப் பேருந்துகளை அனுப்புமாறு இ. போ, ச. டிப்போ சுப்பிறிண்டனிடம் கூறிவிட்டு நானும் கோப்பாய் பா. உ. வும் புகைவண்டி நிலையம்

சென்றோம்: அங்கு சென்ற பொழுது மக்கள் கூடி நின்றனர்: நாங்கள் இருவரும் மக்களைக் கலைத்தோம். சிலர் அங்கிருந்து அகன்றனர். புகைவண்டி நிலையத்தில் மக்கள் கூடியிருந்ததால், பதட்ட நிலை அடைந்திருந்ததால் நாவற்குளிப் புகைவண்டி நிலையத்திற்குத் தொலைபேசியிற் பேசினோம். அந்நிலையம் யாழ்ப்பாணத்திலிருந்து இரு புகைவண்டி நிலையங்கட்கு அப்பால் இருந்தது. புகைவண்டியை அங்கு நிறுத்திப் பிரயாணிகளை அங்கு இறக்குமாறு கேட்டோம். பேருந்துகளை அங்கு அனுப்பினோம். பயணிகளைப் பேருந்துகளில் ஏற்றி அவரவர் வீடுகளுக்கு அனுப்பிவைத்தோம்.

யாழ்ப்பாணத்திலுள்ள இணைப்புச் செயலகத்திற் பணிபுரிந்த ஏ. எஸ். பி. திரு. தர்மராசா ஆகஸ்ட் 18-ம் நாளோ, 19-ம் நாளோ என்னுடன் தொலைபேசியிற் கதைத்தார். கோட்டைக்குள்ளிருக்கும் அரசர் விடுதியில் மாநாடு ஒன்று நடப்பதாகவும், எம்முட் சிலரை அங்கு வருமாறு இணைப்பு அதிகாரி அழைத்துள்ளதாகவும் கூறினார். அரசர் விடுதி பொலிஸ் நிலையத்திற்கு அப்பால் இருப்பதால் அவ்வழி செல்ல விருப்பமில்லை என நான் அவரிடம் கூறினேன். ஏனெனில், ஏழெட்டு மாதங்கட்கு முன் திரு. அமிர்தலிங்கம் அவர்களுடன் சிறைச்சாலைக்குச் செல்ல முயன்ற பொழுது அரசர் விடுதியிலிருந்த பொலிசாரால் தாக்கப்பட்டுக் கல்லெறிக்குஉள்ளானேன். எனவேதான் அங்கு போவதில்லை எனத் தர்மராசாவிடம் கூறினேன், எமது காரை அழைத்துச் செல்லப் பொலிஸ் ஜீப்வண்டியை அனுப்புவதாகத் திரு. தர்மராசா தெரிவித்தார்: எப்படி இருப்பினும் நான் அங்கு வருகின்றேன் எனத் தர்மராசாவிடம் கூறினேன். பொலிசாரைப் பற்றிய எனது கருத்துச் சரியாக இருந்தது. சாவகச்சேரி பா. உ. திரு, நவரத்தினம் தனது காரில் தமிழர் கூட்டணிக் கொடியைப் பறக்கவிட்டிருந்தார் அக்காரில் நாம் இருவரும் போய்க் கொண்டிருந்த பொழுது

பொலிஸ் நிலையத்திலிருந்த பொலிசார் பலர் ஓடிவந்த னர். சத்தமிட்டனர். அச்சுறுத்தினர். இணைப்பு அதிகாரியின் கவனத்திற்கு இதைக் கொண்டுவந்தோம். இவ்வாறு நடைபெறுதென அவர் உறுதி கூறினர். ஒரு மணி நேரத்தின்பின் மாநாட்டைவிட்டு நாம் மீளும் பொழுது சீருடையணிந்த பொலிசார் எங்கள் பாதையின் இருபக்கமும் வரிசையாக நின்று கொண்டிருந்தனர். அரசர் விடுதியிலிருந்து பொலிஸ் நிலையம் வரை இரு மருங்கிலும் வரிசையாக நின்றனர்: திட்டமிட்டு செய்யப்பட்ட இந்தச் செயல்பற்றிப் பொலிஸ் எஸ். பி. திரு. சுந்தரலிங்கம் அவர்கட்கு அறிவித்தேன்.

1977 ஆகஸ்ட் 26-ம் நாள் அதிகாலை 1-40 மணியளவில், மின்சார நிலையத்தைச் சேர்ந்த சில ஊழியர்கள் தொலைபேசியில் அழைத்தார்கள். எதிரேயுள்ள கடைகள் தீயிட்டப்பட்டுள்ளதாகக் கூறினர்கள். அன்று ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தது. நான் மருத்துவ மனையினருடன் தொலைபேசியிற் தொடர்பு கொண்டு என் வீட்டுக்கு எதிரேயுள்ள தாதிமார் விடுதிக் கதவைத் திறக்கச் சொன்னேன். பின் அவ்வழியாக மருத்துவ மனைக்குப் போய்க் கடைகள் எரிவதைப் பார்த்தேன். தீ மருத்துவமனைக்குப் பரவலாம் எனப் பயந்தேன். இராணுவ வீரர்களும், பொலிசாரும் தீயை அணைக்க முயன்று அதிகாலை 4 அல்லது 4-30 மணியளவிற் தீயைக் கட்டுபபாட்டிற்குள் கொண்டு வந்தனர். நான் வீடு திரும்பினேன்.

தமிழ் மக்கள் இந்நாட்களில் மிக நிதானமாக நடந்து கொண்டார்கள். யாழ், மாவட்டத்தில் சிறப்பாக யாழ். தொகுதியில் சிங்களவர்கள் ஒருவராவது கொலை செய்யப்படவில்லை. ஒரு சிங்களப் பெண்ணுவது இழிவுபடுத்தப் படவில்லை. திரு. கதிர்காமர்: யாழ்ப்பாணத் தொகுதியின் பரப்பளவு, அங்கு வாழ்கின்ற சிங்கள மக்களின் எண்ணிக்கை ஆகியவற்றை இப்பொழுது தந்தாற் பயனுள்

க. குகனேந்திரன்
பூநாறி மரத்தடி

ளது. திரு. யோகேஸ்வரன்: உடனே சொல்ல முடியாது பின்னர் கூறுகின்றேன். யாழ்ப்பாண வளாகத்தில் 300 அல்லது 400 சிங்கள மாணவர் இருந்தனர். தமிழ் மாணவர் இவர்களை நன்றாகப் பாதுகாத்தார்கள். வளாகத்தில் எந்த நிகழ்வும் நடைபெறவில்லை. எனினும் அவர்களை யாழ்ப்பாணத்திலிருந்து அழைத்துச் சென்ற பேருந்துகள் மீது இருகற்கள் வீசப்பட்டன என அறிந்தேன். பட்டதாரி மாணவர்கள் பலர் தமது நண்பர்கட்கும், தம்மைப் பேணிய வீட்டுக்காரர்களுக்கும், நன்றிகூறி எழுதிய கடிதங்கள் பல உண்டு.

இந்நிகழ்வுகளின் காரணங்கள் பற்றியும், இதற்கான தீர்வு பற்றியும், தாங்கள் கூற அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளீர்கள். சாட்சியங்கள் முடிந்த பின்பு தீர்வுகள் பற்றிய எமது கருத்துக்களைத் தெரிவிக்க எமக்கு வாய்ப்பளிக்க வேண்டும். உரிய காலத்தில் எனக்குத் தெரிந்த தீர்வினைக் கூறுவேன். இந்தநாட்டில் வாழ்கின்ற இரு இனங்கட்கும் இடையேயுள்ள எதிர்ப்பு உணர்வுகள் பற்றி அறிந்தாற்றான் காரணங்களைத் தெரிந்து கொள்ளலாம். இந்தத் தீவில் வாழ்கின்ற இரு இனங்களும் சமாதானமாக எப்பொழுதும் வாழ்ந்ததில்லை. அதிகாரத்திலுள்ளவர்களின் சில செயல்களாலும், சில செயற்பாடின்மையாலும், 1947 தொடக்கம் இவ்விரு இனங்களுக்கு இடையேயுள்ள தொடர்புகள் சீரழிந்தன. இதுதான் இந்நிகழ்வுகளின் அடிப்படைக் காரணம். பொலிசாரின் நடத்தைதான் உடனடிக் காரணம். வடக்கில் இருந்த பொலிசாரில் எண்பது சதவிகிதமானோர் வடபகுதி மக்களின் மொழியைத் தெரியாதவர்களாக இருந்தார்கள். உயரம், எடை, நன்னடத்தை என்பன நோக்கப்படாது இனம் மட்டுமே நோக்கப்பட்டு இவர்கள் ஆள் அணியிற் சேர்க்கப்பட்டார்கள்.

எதையும் செய்துவிட்டுத் தப்பிக்கொள்ளலாம் என்ற கருத்து இவர்கள் உள்ளத்தில் இருந்தது. 1974 ஜனவரி

10-ம் நாள் யாழ்ப்பாணப் பொலிசாரால் ஒன்பது பேர் கொலை செய்யப்பட்டனர். ஆனால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இச்சம்பவத்திற்கு பொறுப்பான ஏ. எஸ். பி. பதவி உயர்வு கொடுக்கப்பட்டார். செம்மணியில் ஒரு இளைஞர் சுடப்பட்டார், இது தொடர்பாக வழக்கு உண்டு. எனினும் ஒரு விடயத்தைக் குறிப்பிட விரும்புகின்றேன். இறந்தவர் சார்பாகப் பேசிய சட்டத்தரணிகள் சிலர் நீதவானுடன் ஜீப்பிற் தங்கள் வீடுகளுக்குச் சென்றனர். நீதவான் இரு பொலிஸ் கான்ஸ்டபிள்களையும் விளக்க மறியலுக்கு அனுப்பிய பின்பு இது நடந்தது.

களியாட்டுவிழா உடனடிக் காரணமாக இருந்திருக்கலாம். பொலிசாருக்கும், பொதுமக்களுக்குமிடையே உள்ள தொடர்புகள் சீரழிந்து வந்தமை முதற்காரணம். யாழ். வளாகத்தைச் சார்ந்த சிங்கள மாணவர்கள் இங்குள்ள தமது நண்பர்களுக்குப் பல கடிதங்கள் எழுதினார்கள். அவற்றுள் இரண்டை நான் இப்பொழுது வைத்திருக்கின்றேன்.

திரு. கதிர்காமர்: ஐயா! அவரின் உள்ளத்தில் என்ன நினைக்கிறார் என்பதை நான் கூறுகின்றேன். திருமதி. சதாசிவம் அவர்கட்கு சிங்கள மாணவர் ஒருவர் கடிதம் எழுதியுள்ளார். அதை நான் வைத்திருக்கின்றேன். அந்த மாணவர் அவ்வம்மையாருடன் தங்கியிருந்தவர் என நான் நினைக்கிறேன். யாழ்ப்பாணத்தை விட்டு அவர்கள் புறப்பட்ட பஸ் புறப்பட்டபொழுது கல் எறியப்பட்டதை அவர் குறிப்பிடுகின்றார். அவரது கடிதத்தில் "நாம் அநுராதபுரம் சென்றதும், யாழ். வளாக மாணவர்களைத் தமிழர்கள் கொலை செய்துவிட்டார்கள் என்ற வதந்திபற்றிக் கேள்விப்பட்டோம். எனவேதான் அஞ்சற் புகைவண்டியில் வந்த தமிழர்கள் தாக்கப்பட்டார்களாம். தாம் செய்ததுபற்றி இங்குள்ளவர்களுட் சிலர் வருந்துகின்றார்கள். கொலை செய்யவும்,

கொள்ளையடிக்கவும் மக்களை வேண்டு மென்றே சிலர் தூண்டியுள்ளார்கள் என்பது தெளிவு. யாழ். வளாகச் சிங்கள மாணவர்கள் பற்றித் தவறான வதந்திகளைப் பரப்பினார்கள். அன்புள்ள ஆசிரியை, திருமதி. சதாசிவம் அவர்களே! யாழ்ப்பாணத்தில் நடந்தவை பற்றி நான் மிகவும் வருந்துகிறேன், இக்காலத்தில் நீங்கள் மிகவும் உதவியாக இருந்தீர்கள். உங்களுக்கு நன்றி'' என எழுதினார். பாலதேவனுக்கு, வசந்த டி. சில்வா எழுதிய இன்னும் ஒரு கடிதத்தில், ''எம்மவர்கள் ஐவரின் பொருட்களைப் பொறுப்பேற்று அவை கொள்ளையடிக்கப் படுவதிலிருந்து காப்பாற்றியமைக்காக நாம் நன்றி யுடையோம். பூட்டியிருந்த அலுமாரிகளைத் திறந்து உணவுப் பண்டங்கள் வீணாகாமல் எடுத்துப் பயன்படுத் துக'' என எழுதினார். சிங்கள மாணவர்கள் தாக்கப் பட்டதாக வதந்திகள் இவ்வாறு பரப்பப்பட்டன.

திரு. ஜி. பி. எஸ். சில்வா: சில கேள்விகளை நான் கேட்கலாமா? ஆணையாளர்: ஆம். வினா: அரசநிறுவனங் கள் சேதமடைந்தனவா? விடை: ஆம். 16-ம் நாள் மாலை சலுசலா கொள்ளையடிக்கப் பட்டுத் தீவைக்கப்பட்டதாக நான் கேள்விப்பட்டேன். கூ. மொ. விற்பனவு நிலையமும் கொள்ளையடிக்கப்பட்டுத் தீயிடப்பட்டது. எம். டி. குண சேன கம்பனி புத்தகக்கடையும் கொள்ளையடிக்கப்பட் டது. கட்டிடப் பொருள் கூட்டுத்தாபனமும் இவ்விதம் சேதப்படுத்தப்பட்டது. 17-ம் நாள் காலை நிகழ்வுகள் நடந்த இடங்களை நான் போய்ப் பார்வையிட்டேன். சேதம் ஏற்பட்டிருந்தது.

வினா: பெருமளவு கடும் சேதமா? விடை: ஆம். வினா: 5-ம் நாள் இரவு கொள்ளையடித்தவர்களாகச் சந்தேகிக்கப்பட்ட சிலரைப் பொலிசார் கைது செய்தது பற்றிக் கேள்விப்பட்டீர்களா? விடை: அப்படியானவர் களைக் கைது செய்ததாக ஒருபோதும் கேள்விப்படவில்லை. ஆனால் சினிமா பார்த்து விட்டு வந்த சிலரைப்

பொலிசார் அடித்ததாகவும், அங்கு கைதுசெய்ததாகவும் கேள்விப்பட்டேன்; கைதுகள் நடந்திருப்பின், கைது செய்யப்பட்டவர்கள் என்னைவந்து கண்டிருப்பார்கள்.

வினு: கடைவீதிப் பக்கம் தெருக்கள் 16-ம் நாளன்று தடை செய்யப்பட்டனவா? விடை: கடை வீதி வாசலில் அல்ல, அங்கு மிங்குமாகத் தெருக்கள் தடைசெய்யப்பட்டன. காலை பதினொரு மணியளவில் நான் போயிருந்த பொழுது எரியும் டயர்கள் அங்குமிங்குமாகப் போடப்பட்டிருந்தன. வினு: சுடப்பட்டதால் இருவர் இறந்தமைபற்றி விசாரணை நடாத்திய நீதவான் தனது தீர்ப்பில் பின்வருமாறு கூறுகின்றார். ''எரியும் டயர்களின் தீப்பந்தங்கள் சந்திகளில் வைக்கப்பட்டிருந்தன. ஏன் வைக்கப்பட்டிருந்தன என எனக்கு விளங்கவில்லை''. தீப்பந்தங்கள் இருந்தனவா என்பது உங்களுக்கு நினைவில் உள்ளதா? விடை: தீப்பந்தங்கள் இருந்தன. அவை நகருக்கு அண்மையில் இருக்கவில்லை. வினு: சிங்களவர் எவரும் துன்புறுத்தப்படவில்லை எனச் சொன்னீர்களா? விடை: கொல்லப்படவில்லை எனச் சொன்னேன். வினு: துன்புறுத்தப்பட்டுக் காயப்படுத்தப்பட்டார்களா? விடை: துன்புறுத்தப்படவில்லை, காயப்படுத்தப்படவில்லை என்றே நினைக்கிறேன். எவரும் கொல்லப்படவில்லை என்பது உறுதி. வினு: வர்த்தக நிலையங்கள் பற்றிக் கூறுங்கள். விடை: சந்திரா பேக்கரி சேதப்படுத்தப்பட்டதை அறிவேன். அது புகைவண்டி நிலைய வீதியில் உள்ளது. ஆஸ்பத்திரி வீதியில் உள்ள சிற்றி பேக்கரி சேதப்படுத்தப்பட்டது எனவும் அறிந்தேன்.

16-ம் நாள் காலை 5-15 மணிக்கு யாழ். அரசாங்க அதிபர், தான் அரச அலுவல் காரணமாக வெளியே செல்வதாக எனக்குக் கூறியது உண்மை. வினு: அதற்கு முதல் நாளே இச் சுற்றுலாவுக்கு ஒழுங்கு செய்ததாக உங்களிடம் கூறினரா?

விடை: எனக்குச் சரியாகத் தெரியாது. நினைவில் இல்லை. வினா: 16-ம் நாள் சில பொலிசார் உங்கள் வீட்டிற்கு வந்ததாகக் கூறினீர்கள். என்ன நேரம் வந்தார்கள். விடை: காலை 9-30 மணியளவில் வந்தார்கள். மத்தியானம் 12 மணிக்கு வந்தார்கள். மறுநாளும் வந்தார்கள். என் வீட்டிற்கு அண்மையில் நின்ற இளைஞர்கள் பொலிசாரைக் கண்டதும் தமது சயிக்கிள்களை விட்டுவிட்டு வீட்டினுள் வந்தார்கள். அப்பொழுது நான் அங்கு இல்லை. பொலிசார் வந்து துப்பாக்கியின் பின்பக்கத்தினால் ஒரு இளைஞரைத் தாக்கினர். என் வீட்டில் இருந்தவர்களைக் கொண்டு செல்வதற்காக அங்கிருந்த பேருந்துகளின் ஓட்டுநர்களை அழைத்துப் பேருந்துகளைச் சயிக்கிள்களின்மேல் ஏற்றி ஓட்டுமாறு கூறினர். வினா: புங்கங்குளம் புகைவண்டி நிலையத்தில் நின்ற அஞ்சற் புகைவண்டியின் உணவுச்சாலை 16-ம் நாள் இரவு தாக்கப்பட்டதைக் கேள்விப்பட்டீர்களா? விடை: ஆம். ஏதோ தொல்லை இருந்ததெனக் கேள்விப்பட்டேன்.

திரு. அண்டர்வூட்: வினா: வீதியில் உள்ள தடைகள் பற்றித் திரு. சில்வா வினவினார். ஏன் அவை வைக்கப்பட்டன என அறிந்தீர்களா? விடை: ஆம். பொலிசார் நடமாடிச் சேதம் விளைவிக்காமல் இருப்பதற்காக எரியும் டயர்கள் தடைகளாக வைக்கப்பட்டன என அறிந்தேன்.

திரு. கதிர்காமர்: வினா: பேக்கரிகளைப் பற்றிக் கூறினீர்கள். அவற்றின் பெயரைச் சொல்ல முடியுமா? விடை: புகைவண்டி நிலையத்தில் உள்ள சந்திரா பேக்கரி ஒன்று. வினா: எப்பொழுது சேதப்படுத்தப்பட்டது. நினைவிலுண்டா? விடை: 18-ம் அல்லது 19-ம் நாளிலாயிருக்கலாம். வினா: மற்றைய பேக்கரி? விடை: ஆஸ்பத்திரி வீதியில் உள்ள சிற்றி பேக்கரி. வினா: இந்தச் சேதங்கள் எப்பொழுது நடந்தன என்பதைக் கமிஷனுக்கு சொன்னால் உதவியாயிருக்கும். விடை: எனக்குச் சரியாகக் கூறமுடியாது. 18-ம் அல்லது 19-ம் நாளில் நடந்தது.

வினு: யாழ்ப்பாணத்திலுள்ள சிங்கள மக்களின் எண்ணிக்கை, யாழ்ப்பாணத் தொகுதியின் வாக்காளர் எண்ணிக்கை, மக்கள் தொகை என்பன பற்றித் தேனீர் இடைவேளைக்குப் பின் கூற முடியுமா? விடை: ஆம். வினு: உங்கட்குத் தெரிந்தவரையிற் சிங்களவர் எவரும் அக் கால எல்லைக்குட் கொல்லப்படவில்லை. விடை: ஆம். வினு: சிங்களவர் துன்புறுத்தப்பட்டார்கள் என்று உங்களுக்குத் தகவல் அல்லது அறிக்கை கிடைத்ததா? விடை: ஆம். ஆனுல், யாழ்ப்பாணத்திலல்ல. வினு: அப்பொழுது பளையிலா? விடை: ஆம். வினு: ஒருவரா? விடை: ஆம். இ. போ. ச. ஓட்டுநர் மீது சுடப்பட்டது. வினு: எந்நாளில்? விடை: 19-ம் நாளளவில். வினு: அந்த ஒரு நிகழ்வு மட்டும் தானு? விடை: ஆம்.

திரு. அண்டலூட்: பௌத்த கோவில்கள், வழிபாட்டு இடங்கள் ஏதாவது தாக்கப்பட்டதா? அல்லது சேதப் படுத்தப்பட்டதா? விடை: இல்லை. வினு: இந்துக்கோவில்கள் ஏதாவது சேதப்படுத்தப்பட்டதா? விடை: இல்லை.

திரு. டீ சில்வா: (பதில் சொலிசிட்டர் ஜெனரல்) வினு: 26-ம் நாள் வரிசைக்கடைகள் எரிக்கப்பட்டபோது ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்ததா? விடை: ஆம்.

(சில நிமிட இடைவேளை)

திரு. கதிர்காமர்: சாட்சிகளை விரைவில் முடிக்க விழைகின்றேன். முழுச் சாட்சிகளையும் நான் கூப்பிடவில்லை. ஒரு பகுதியை மட்டுமே கூப்பிடுவேன். சாட்சிகளினுற் தயாரிக்கப்பட்ட அறிக்கையின் அடிப்படையில் யாழ்ப்பாணத்து நிகழ்வுகளின் அடிப்படைத் தன்மைகள் பற்றிய விபரங்களை முன்வைக்க உள்ளேன். என்னிட்முள்ள சத்தியக் கடதாசிகளைக் கம்பியூட்டரில் இட்டுத் தொகுத்துள்ளேன். என்னிடம் உள்ள ஏறத்தாழ அறுபது சாட்சிகளுள் எல்லாரையும் கூப்பிட்டுக் காலத்

தைப்போக்காமற் சிலரை மட்டுமே கூப்பிடுவேன். ஏனைய சட்டத்தரணிகள் விரும்பின் தமது சாட்சியங்களைக் கூப்பிடலாம். முக்கிய சாட்சிகள் நிகழ்வுகளை விபரித்துள்ளார்கள். விபரங்களை நான் சுருக்கமாகக் கூறினால், நீங்கள் வேறு இடங்களிலும் விசாரணையை நடத்தலாம். நான் தந்த படத்தில் யாழ்ப்பாணத்தின் விபரம் தரப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட இடங்களை ஆணைக்குழு சுற்றிப் பார்த்தாற்றான் சந்தை எங்கே? வீதித் தடைகள் எங்கே? என்பதைத் தெரிந்து கொள்ள முடியும்.

ஆணையாளர்: அதைச் செய்யலாம். யாழ்ப்பாணத்துச் சாட்சியங்களை விரைவில் முடிக்க விரும்புகின்றேன். எப்பொழுது யாழ்ப்பாணத்தைச் சுற்றிப் பார்க்கலாம்.

திரு. டீ. சில்வா: நாளை (11-ம் நாள்) மாலை 4 அல்லது 5 மணியளவிற் சுற்றிப் பார்க்கலாம். (ஆணைக்குழுவும் ஏனையோரும் ஒப்புதல் அளித்தனர். அரச விடுதியிலிருந்து சுற்றுலாத் தொடங்கும்.)

(நாளை சாட்சியமளிப்பதற்கு யாழ்ப்பாணத்தில் முன்பு இருந்தவரும், இப்பொழுது சுன்னாகத்தில் இருப்பவருமான பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. தாமோதரம் அவர்கட்கு அழைப்பாணை அனுப்புமாறு திரு. கதிர்காமர் முன்மொழிந்தார். அனுமதிக்கப்பட்டது.)

திரு. வெ. யோகேஸ்வரன் (தொடர்கிறார்)

கோவிற் சொத்துக்களுக்குச் சேதம் விளைவிக்கப்பட்டதா? எனப் பிரதிசொலிசிட்டர் ஜெனரல் டி. சில்வா கேட்டிருந்தார். சிறிதளவு சேதம் ஏற்பட்டது. கோவிலிற் தேர் கவிழ்க்கப்பட்டிருந்தது. உண்டியலும் உடைக்கப்பட்டது. பனையிற் காயமடைந்தவர் முஸ்லிமா? சிங்களவரா? தெரியவில்லை. 25 அல்லது 26-ல் இது நடந்தது. 18-ம் நாள் இரவு அம்பாள் கபேயும், சிற்றி பேக்கரியும் உடைக்கப்பட்டன. பொலிசாரோ அல்லது படைவீரரோ

உடைத்தார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை. பெரும்பாலும் பொலிசாரே இதற்குப் பொறுப்பாக இருந்திருக்கவேண்டும்.

(திரு. உருத்திரமூர்த்தி முன்வைக்க விரும்பும் ஆவணங்களைக் கொழும்பில் வைத்து முன்வைக்க அனுமதி அளிக்கப்பட்டது.)

**மருத்துவர் யோசெப் பற்றிக் பிலிப்ஸ்:** உறுதிமொழியப்பட்டது. மருத்துவர், யாழ்ப்பாணம் பிரதான வீதியில் வசிப்பவர். சாட்சியின் அறிக்கை ஆணைக் குழுவுக்குக் கையளிக்கப்பட்டு X 8 எனக் குறியிடப்படுகின்றது.

யாழ்ப்பாணம் பிரதானவீதி 106-ம் எண்ணில் நான் மருத்துவராகப் பணி புரிகின்றேன். தட்டெழுத்துச் செய்யப்பட்ட எனது அறிக்கையிலிருந்து எனது சாட்சியத்தைக் கூறுகின்றேன். (சாட்சி வாசிக்கின்றார்) சென்பற்றிக்ஸ் கல்லூரி பழையமாணவர் சங்கமும், ஹெரட்டரிக் கழகமும் இணைந்து யாழ். ஹெரட்டரிக் களியாட்டு விழாப் பொருட்காட்சியை அமைத்தன. நான் சென். பற்றிக்ஸ் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் துணைத் தலைவராக இருக்கின்றேன். களியாட்டுவிழாக் குழுவில் இணைத் தலைவராக இருக்கின்றேன். 1977 யூலை 30-ம் நாள் தொடங்கிய களியாட்டு விழாவும், பொருட்காட்சியும் ஆகஸ்ட் 10-ம் நாள் வரை நீடித்தது. மேலும் மூன்று நாள் நீடிக்க யாழ்ப்பாணம் எஸ். பி. யிடம் அனுமதி கேட்டோம். அவர் பொலிஸ் உதவிமா அதிபரிடம் ஒப்புதல் பெற்றுப் பின் அவரின் அனுமதியுடன் 1977 ஆகஸ்ட் 13-ம் நாள்வரை களியாட்டு விழா நீடித்தது.

ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையங்களைச் சேர்ந்த பொலிசார் 1977 ஆகஸ்ட் 12-ம் நாளன்று சாதாரண உடை அணிந்துகொண்டு களியாட்டு விழா மைதானத்துள் அனுமதிச் சீட்டு இன்றி நுழைய முயன்றனர். நுழை வாயிலில் திரு. புலேந்திரன் பொறுப்பாக

இருந்தார். களியாட்டு விழா நல்ல நோக்கத்திற்காக நடத்தப்படுகின்றது என்பதைப் பொலிசாருக்கு விளக்கினார். றொட்டரிக் கழகச் சமூக நலத்திட்டங்கட்கும், யாழ்ப்பாணத்தில் ஒரு புற்று நோய் மருத்துவ நிலையத்திற்கும், யாழ்ப்பாணம் சென், பற்றிக்ஸ் கல்லூரி வளர்ச்சிக்கும், களியாட்டுவிழா நிதி பயன் படுவதாகக் கூறினார். அனுமதிச் சீட்டுப் பெற்று உட்செல்லுமாறு வேண்டினார். ஆகக் குறைந்ததான குழந்தைகளுக்குரிய கட்டணமான ஒரு ரூபாவை யாவது பெற்றுச் செல்லுமாறு கேட்டார்.

ஒருவாறு இவர்கள் அனுமதிச் சீட்டைப் பெற்று மைதானத்தினுள் நுழைந்தனர். எனினும் நுழைவாயிலில் நின்றவர்மீது இழிசொல் கூறினர். மைதானத்தினுள் இவர்கள் தாம் கொண்டுவந்த மதுவைக் குடித்தார்கள். மைதானத்தில் நின்றவர்களுடன் வீண்வாதம் தொடக்கினார்கள். அவரை அடித்தார்கள். பரபரப்பு அடைந்த மக்கள் பொலிசாரைத் தாக்க முயன்றனர். எனினும் அடிபட்டவர் அவ்வாறு செய்ய விடாமற் தடுத்தார்.

அடுத்தநாட் காலையில் நான் எஸ். பியுடன் தொடர்பு கொள்ள விரும்பினேன். இந்நிகழ்ச்சியைத் தெரிவிக்க விரும்பினேன். எஸ். பி. திரு. ஏ. எஸ். செனவிரத்தின யாழ்ப்பாணத்தில் இல்லை. நான் யாழ்ப்பாண பா. உ. வுடன் தொடர்பு கொண்டு நிகழ்வுகள் பற்றிக் கூறினேன். தான் யாழ்ப்பாண எஸ். பி. யைச் சந்திப்பதாக என்னிடம் தெரிவித்தார். தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் திரு. கொட்பிறி குணசேகராவுடன் நான் தொடர்பு கொண்டேன். நிகழ்ந்தவை பற்றிக் கூறினேன். கடைசி நாளன்று பொலிசார் விளையாட்டு மைதானத்திற்கு வந்தால் ஏதாவது விபரீதம் நடக்கலாம் எனக் கூறினேன். யாழ். மாவட்டத்திலுள்ள பொலிசார் எவரும் களியாட்டு விழா மைதானத்திற்கு உள்ளோ, அண்மையிலோ செல்லவேண்டாமென யாழ்ப்பாண எஸ். பி.

ஏற்கனவே கட்டளைகள் அனுப்பியுள்ளார் என என்னி டம் திரு. குணசேகரா கூறினர். இதனை நினை வூட்டி மீண்டும் தாம் செய்திகள் அனுப்புவதாகவும் கூறினர்.

கடைசி நாளான 13-ம் நாள் சனிக்கிழமை இரவு களியாட்டு விழா முடியும் நேரம் வரை வழமைக்குப் புறம்பாக எதுவும் நடைபெருமல் இருந்து வந்தது. களியாட்டு விழா நிறைவு எய்தும் நேரமான நள்ளிரவு 12 மணியளவிற் திடீரெனச் சத்தம் கேட்டது. நுழை வாயிலுக்கும், வெளிச்செல்லும் வாயிலுக்கும் மக்கள் ஓடிக்கொண்டிருந்தனர். அப்பொழுது நான் அலுவலகத் தில் இருந்தேன். என்னுடன் பல அலுவலர்கள் இருந் தனர். அலுவலகத்திலிருந்து நாம் வெளியே வந்த பொழுது இரத்தம் தோய்ந்த சட்டைகளுடன் இருவ ரைக் கண்டோம் மைதானத்தின் கோடியிலுள்ள விற் பனை நிலையங்களுள் ஒன்ருன பிளவ்ஸ் விற்பனை நிலையத் திற் சாதாரண உடையணிந்த பொலிசாருக்கும், களி யாட்டு விழா பார்க்க வந்தவர்கட்குமிடையே சண்டை நடைபெற்றதாக விசாரித்து அறிந்தோம். அவ்வளவு தான் நடந்தது. தொடர்ந்து கூட்டம் கலைந்தது. களி யாட்டுவிழா நிறைவெய்தியது.

திரு. ஜி. பி. எஸ், சில்வா: வினு: 12-ம் நாள் ஆனைக் கோட்டைப் பொலிசார் அங்கு வந்தனர். யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்திலிருந்து வரவில்லை என்று கூறுவது சரியாகுமா? விடை: ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம் ஆகிய இரு பொலிஸ் நிலையங்களிலிருந்தும் வந்தார்கள் என நான் கேள்விப்பட்டேன். திரு. கதிர்காமர்: இச் சாட்சியிடமிருந்து இவ்வளவுதான். எனது அடுத்த சாட் சியாகத் திரு. தம்பித்துரை அவர்களை அழைக்கின்றேன்.

சின்னப்பர் தம்பித்துரை: (உறுதி மொழியப்பட் டது) இளைப்பாறிய மாவட்ட நீதிபதி. திரு. கதிர்காமர்: அவரின் அறிக்கையை X 9 எனக் குறியிடுகின்றேன்.

வினா: உயர்நீதி மன்றத்தின் வழக்குரைஞராக உள்ளீர்களா? விடை: ஆம். வினா: நீதிபரிபாலனச் சேவையின் உறுப்பினராக இருந்தீர்களா? எப்பொழுதிலிருந்து? விடை: 1947-ன் பிற்பகுதியிலிருந்து இருந்தேன். 1966-ல் ஓய்வு பெற்றேன். வினா: ஓய்வு பெற்றபோது நீங்கள் மாவட்ட நீதிபதியா? விடை: கொழும்பு மாவட்ட நீதிபதிகளுள் ஒருவராக இருந்தேன். வினா: உங்கள் அறிக்கையை வாசிக்கவும். விடை: (வாசிக்கின்றார்)

1977 ஆகஸ்ட் 16-ம் நாள் நடைபெற்ற சில நிகழ்வுகள் பற்றி நான் கூறமுடியும். 1977 ஆகஸ்ட் 17-ம் நாள் எனக்கு ஏற்பட்ட தனிப்பட்ட அனுபவங்கள் பற்றியும். கூற முடியும். 16-ம் நாள் காலை 8-30 மணியளவில் யாழ்ப்பாண பா. உ. திரு. யோகேஸ்வரன் அவர்களின் இல்லத்திற்குச் சென்று கொண்டிருந்த பொழுது அவரின் வளவிற்குள் பெருங்கூட்டமிருப்பதைக் கண்டேன். பொலிசாரின் துன்புறுத்தலாலும், தாக்குதலாலும் பாதிக்கப்பட்ட இம்மக்கள் பரபரப்படைந்திருந்ததைக்கண்டேன். அவர்களின் முறைப்பாடுகளைக் கேட்டுக் கொண்டிருந்த பொழுது முப்பது அல்லது நாற்பது பேருள்ள பொலிஸ் படை டிரக்கில் அங்கு வந்தது. யோகேஸ்வரன் வளவிற்கு முன் நின்றது. பொலிசாருட் சிலர் வளவிற்குள் வந்து முற்பகுதியில் நின்று கொண்டு திரு. யோகேஸ்வரனைத் தகாத முறையிற் சிங்களத்தில் ஏசினர். சிங்களம் எனக்குத் தெரியாது. எனினும் ஏசுகின்ற தொனி அவர்களிற் தெரிந்தது. யோகேஸ்வரன் வெளியே வந்தார். பிரதமருடன் தான் தொடர்பு கொள்வதாகக்கூறினர். வீட்டை விட்டு வெளியேறுமாறு அவர்களிடம் கூறினர். யோகேஸ்வரன் உறுதியாக இருந்தபடியால் அவர்கள் பின் வாங்கித் தம் வாகனத்தில் ஏறினர். பொலிசார் வீட்டிற்கு வந்த சமயம் மக்களும் நெருக்கிக்கொண்டு ஓடிவந்தனர். பின்னர் நிகழ்வுகள் நடந்த இடங்களைப் பார்ப்பதற்காகத் தன்னோடு வரும்படி திரு. யோகேஸ்வரன் என்னை அழைத்தார்.

17-ம் நாள் எனக்குப் பின்வரும் அனுபவம் ஏற்பட்டது. ஏ. எஸ். பி. திரு. திஸ்ஸநாயக்காவிற்கு இது பற்றிய அறிக்கை ஒன்றைக் கொடுத்திருந்தேன். வீட்டிற்கு வந்து எனது அறிக்கையை அவர் பதிவு செய்தார். இவ்வறிக்கையின் படி என்னிடம் இல்லை. எனது அனுபவத்தை நினைவிற்கு எட்டியவாறு சொல்லுகின்றேன்:

அன்று காலை 10 அல்லது 10-30 மணியளவிற் சட்டத்தரணி திரு. நவரத்தினம் தனது மொறிஸ் மைனர் காரை வெளியே எடுத்து, அநுராதபுரத்திலிருந்து காயமுற்று வந்தவர்களைப் பார்ப்பதற்காக மருத்துவ மனைக்குப் புறப்பட்டார். கூடவே வருமாறு என்னை அழைத்தார். நானும் ஒத்துக்கொண்டு அவருடன் சென்றேன். காணிப் பதிவாளர் திரு. அன்னலிங்கமும் எம்முடன் வந்தார். காரின் பின் இருக்கையில் அவர் இருந்தார். மருத்துவமனையிற் காயமடைந்தவர்களைப் பார்த்தபின் வீடு திரும்ப எண்ணிப் பலாலி வீதி வழியாக வந்து கொண்டிருந்தோம். முன் இருக்கையில் நான் இருந்தேன். நாக விகாரைச் சந்தியைத் தாண்டி இருபது யார்கள் சென்றிருப்போம். அங்கு 5 அல்லது 6 ஆயுதந் தாங்கிய பொலிசார் வீதியில் நின்றனர். போய்க்கொண்டிருந்த எங்கள் மீது துப்பாக்கியை நீட்டினர். ஏன் அவ்வாறு செய்தார்கள் என்பது எமக்கு விளங்கவில்லை. திரு. நவரத்தினம் தமது காரை நிறுத்தினார். பொலிசார் காருக்குள் பார்த்தனர். காரின் பின் பக்கம் பல முறை தாக்கப்படுவதை நான் கேட்டேன். காரின் பின் புறக் கண்ணாடி நொருக்கப்பட்டது. சிறு துண்டுகள் மேல் அங்கியிலும், உடலின் பிற பகுதிகளிலும் விழுந்தன. இச்சட்ட மீறலால் நான் திடுக்குற்றிருந்தேன். நான் முன்னாள் மாவட்ட நீதிபதியாக இருந்தமையைத் திரு. நவரத்தினம் பொலிசாரிடம் கூறினார். எனினும் பொலிசார் தொடர்ந்து தாக்கினர். பின்னர் அவர்களுள் ஒருவர் எம்மைப் போகுமாறு கைகாட்டினார்.

கியரை மாற்றித் திரு. நவரத்தினம் காரை நகர்த்தத் தொடங்கியபொழுது பொலிசார் ஒருவர் வந்து காரின் முன்பக்கக் கண்ணுடியைத் தனது துப்பாக்கி அடியினுல் நொருக்கினுர். கண்ணுடித் துகள்கள் என்மீது விழுந்தன. மயிரிழையில் நான் துப்பாக்கி அடியிலிருந்து தப்பினேன். திரு. நவரத்தினம் காரை ஓட்டிச் சென்ருர். நாங்கள் அதிர்ச்சியடைந்திருந்தோம். நான் வீடு சென்றடைந்தேன்.

மேல் நீதிமன்ற நீதிபதி திரு. காதர் அவர்களையும், மாவட்ட நீதிபதி திரு. ஆசீர்வாதம் அவர்களையும் அடுத்தநாள் சந்தித்தேன். எனது அனுபவங்களைக் கூறினேன். அதற்கு அடுத்த நாளோ பின்னரோ பொலிஸ் ட்ரக் ஒன்று வீட்டுக்கு வந்தது. ஏ. எஸ். பி. திஸ்ஸநாயக்கா வீட்டுக்கு வந்தார். எனது வாய் மூலத்தைப் பதிவுசெய்தார். திரு. ஜீ. பி. எஸ். சில்வா: கேள்வி இல்லை. திரு. கதிர்காமர்: கேள்விகள் இல்லை.

திரு. தம்பித்துரை: எனக்கு வயதாகிவிட்டது. எனது இனம் தொடர்பாக இரு அனுபவங்கள் எனக்கு உண்டு. எனது கருத்து என்ன என்பது பற்றியும், இதற்குரிய தீர்வு பற்றியும் கூற விழைகின்றேன். அனுமதி தருக.

''சிங்களவரும், தமிழரும் பிரிகின்ற வழிக்கு வந்துள்ளனரா?'' என்ற கேள்வியைத் தனது நூலின் இறுதியில் திரு. தார்சி வித்தாச்சி கேட்டிருந்தார். ''அவசரகால நிலை 1958'' என்ற புகழ்பெற்ற நூலில் இவ்வாறு கூறியிருந்தார். இப்புத்தகம் கைவசம் என்னிடம் இல்லை. திரு. தார்சி வித்தாச்சி எழுப்பிய இக்கேள்விதான் 1977-ல் இந்நிகழ்வுகளைப் பார்க்கும்பொழுது எனக்கு நினைவிற்கு வருகின்றது. 1958 தொடக்கம் 1977 ஆகஸ்ட் வரை பிரிந்து செல்ல வேண்டிய சூழ் நிலை எழமாட்டாதென்ற உயர்ந்த அவாவுடன், ஒரே நாடாக, ஒற்றுமையாய்த், திருப்தியாய் வாழ்வோம் என்ற நம்பிக்கை

எனக்கு இருந்தது. தார்சி வித்தாச்சியின் பயம் உண்மையான நிகழ்வாக மாறிவிடுமோ என 1977-ன் நிகழ்வுகள் என்னை எண்ண வைக்கின்றன. பிரிந்து செல்ல வேண்டும் என்ற நிலை வந்து விட்டது. இக்கருத்து உங்களுக்கு ஏற்றதோ தெரியாது. என் இனத்தைச் சார்ந்தவர்கள் உடல் நோவைப்பற்றி அவ்வளவு அக்கறைப் படவில்லை. ஆனல் மானபங்கம் ஏற்பட்டதைப்பற்றி மனம் நொந்துள்ளார்கள். ஏதாவதொரு தீர்வுவேண்டும் என்பதால் இதை உங்களிடம் கூறுகின்றேன்.

ஆணையாளர்: இச்சிக்கலைத் தீர்ப்பதற்குரிய வேறு வழிகளையும், வாய்ப்புக்களையும் நீங்கள் தெரிவிக்க முடியுமா? திரு. தம்பித்துரை: 1977-ல் நடந்தவற்றை அடிப்படையாகக் கொண்டு நான் சிலவற்றைக் கூறுவதில் மகிழ்ச்சி அடைவேன். தமிழர்களின் மனத்தில் உள்ள அச்சத்தைவிடச் சிங்களவர்களின் மத்தியில் எழுந்துள்ள எதிர்ப்புணர்வு மிகையானது. தமிழராயிருந்ததாற்ருன் தாக்கப்பட்டனர் என்பதை 1977 நிகழ்வுகள் எமக்குக் காட்டுகின்றன.

நான் உங்கள் முன் சட்டத்தரணியாகத் தொழில் புரிந்திருக்கின்றேன். உங்களின் கீழ்ப் பணி புரிவதில் மகிழ்ச்சியடைந்திருக்கின்றேன். எனவே இச்சிக்கலுக்கு உரிய தீர்வு பற்றிய எனது கருத்தையும் உங்களுக்குக் கூறுவதில் மகிழ்கின்றேன். தமிழர்கள் தன்மானத்துடன் வாழவேண்டும். தமிழர்க்கான வரலாற்றுப் பாரம்பரியம் உடைய நிலங்கள் உண்டு. தாமாகத் தனி இனமாகத் தனிநாட்டு இனமாக வாழ்வதில் அவர்கள் மகிழ்வார்கள். இதன் மூலம் தான் இந்த நாட்டில் வாழும் பல்வேறு இனங்களிடையே சமத்துவத்தை ஏற்படுத்தலாம். எம்மைத்தனியாக விட்டாற் சிங்களவர்கள் பெரும் வசதி அடைவார்கள். இது எனது கருத்து. ஆணையாளர்: வேறு ஏதாவது கருத்துக்கள் தெரிவிக்க விரும்பின் எனக்கு அறிவிக்கவும்: விடை: ஆம். நன்றி.

திரு. கதிர்காமர்: நான் எல். ஏ. சவரிமுத்து அவர்களைச் சாட்சியமளிக்க அழைக்கிறேன். அவரின் அறிக்கையை X 10 எனக் குறியிடுகிறேன்.

லூர்டஸ் அந்தோனி அகஸ்தீன் சவரிமுத்து: (உறுதிமொழியப்பட்டது) டைம்ஸ் செய்தி நிறுவனத்தின் செய்திச் சேகரிப்பாளராக யாழ்ப்பாணத்திற் கடமை புரிகின்றேன். யாழ்ப்பாணம் சுபாஸ் சுற்றுலா விடுதிச் செயலாளராகவும் உள்ளேன். உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் எழுது வினைஞராகப் பத்து ஆண்டுகள் கடமை புரிந்தபின் 1962-ல் வயது வரு முன்பு ஓய்வு பெற்றேன். 1977 ஆகஸ்ட் 15-ம் நாள் காலை எட்டு மணிக்கு எஸ். பி. திரு. ஏ. எஸ். செனவிரத்ன அவர்களுடன் தொலைபேசியிற் கதைத்தேன். யாழ்ப்பாணத்து நிகழ்வுகள் பற்றி விபரம் அறிவதற்காக அவரை வந்து சந்திக்கவேண்டும் எனக் கூறினேன். தான் யாழ்ப்பாணத்திற்கு வெளியே இருந்ததாகவும் கொழும்பிலிருந்து முதல்நாள் மாலை வந்ததாகவும் நடந்த நிகழ்வுகள் பற்றித் தனக்குத் தெரியாதென்றும் அவர் கூறினர். அவசரமாக அலுவலகத்திற்குப் போவதால் அன்று மாலை மூன்று மணிக்குத் தன்னைச் சந்திக்குமாறு கூறினர்.

மூன்று மணிக்கு அவரிடம் சென்று நான் மூன்றரை மணிக்கு அவரைச் சந்தித்தேன். களியாட்டுவிழா நிகழ்வு பற்றி அவரிடம் கேட்டபொழுது சீருடை அணிந்த பொலிசார் களியாட்டு விழாவிற்குப் போகக்கூடாதெனக் குறிப்பிட்டுக் கட்டளை அனுப்பியிருப்பதாகச் சொன்னர்: எனினும் சாதாரண உடையணிந்த பொலிசார் களியாட்டு விழாவிற்குச் சென்று கலாட்டாசெய்து காயமடைந்தமைபற்றிக் கூறினர். முனியப்பர் கோவில் நிகழ்ச்சி பற்றியும், இ. போ. ச. ஊழியர் பொலிசாரால் தாக்கப்பட்டது பற்றியும் அவரிடம் கேட்டேன். இந் நிகழ்வுபற்றித் தனக்கும் புகார் கிடைத்துள்ளது எனவும், எனினும் தாக்குதலுக்குக் காரணமாயிருந்த

பொலிசாரை எவரும் அடையாளம் காட்டவில்லை எனவும் கூறினர். துப்பாக்கிச் சூட்டினால் கையிற் காயம் அடைந்த பொலிசார் பற்றி அவர் வலியுறுத்தினர். இந்நிகழ்வு கோப்பாயில் நடந்ததாம். இத்தகைய செயலுக்காகத் தமிழர்கள் கஷ்டப்படப் போகின்றார்கள் எனவும் கூறினர். அவர் கூறியதன் தாற்பரியத்தை நான் அப்பொழுது உணரவில்லை. எனினும் நாட்டில் கலவரம் ஏற்படலாம் என நினைத்தேன். வேறு தகவல்களை நான் எஸ். பி. யிடம் எதிர்பார்க்கவில்லை. தொடர்பு ஆதங்கமாக இருந்தமையால் அவரை விட்டு நீங்கினேன்.

யாழ். மருத்துவ மனையை நோக்கிச் சென்றேன். பொலிசாராற் தாக்கப்பட்ட இ. போ. ச. ஊழியரைக் காண விரும்பினேன். மருத்துவ மனைப்பகுதிகளிலும் பதட்ட நிலை இருந்தது. பொலிசாரின் தூண்டுதலினுற் சண்டை நடைபெறலாம் எனக்கருதிய நான் வீடு செல்வது நல்லது எனக் கருதினேன்.

16-ம் நாள் காலை ஏழு மணியளவில் சுபாஸ் கபே உரிமையாளரும், சுபாஸ் சுற்றுலா விடுதி முகாமை இயக்குநருமாகிய திரு. ஏ. சங்கரன் தனது காரில் எனது வீட்டிற்கு வந்தார். அன்று அதிகாலை 2 மணிக்கு நடைபெற்ற நிகழ்வுகள் பற்றிக் கூறினர். சந்தை சேதப் படுத்தப்பட்டது பற்றிக் கூறினர். சில பாராளுமன்ற உறுப்பினர்கள் அங்கு இருப்பதாகவும், வெளிக்கிட்டுத் தன்னுடன் சந்தைக்கு வருமாறும் கேட்டார்.

வெளிக்கிட்டு அவரின் காரிற் சென்றேன். சுபாஸ் கபேக்கு அண்மையாகக் காரை நிறுத்திவிட்டுச் சேதப் படுத்தப்பட்ட பழைய சந்தைக்குச் சென்று சேதங்களைக் கண்டோம். யாழ்ப்பாணப் பா. உ. திரு. யோகேஸ்வரன், கோப்பாய்ப் பா. உ. திரு. கதிர்வேற்பிள்ளை ஆகியோரைக் கண்டோம். அவர்களுடன் சென்று சேதங்களைச் சுற்றிப் பார்த்தோம். சிறிது நேரத்தின்பின் பழைய சந்தையில்

அவர்களை விட்டு விட்டு யாழ். மருத்துவ மனையை நோக்கிச் சென்றோம். வழியில் நின்று சுபாஸ் கபேக்கு ஏற்பட்ட சேதத்தை மதிப்பிட்டோம். சுபாஸ் கபேக்கு முன்பாகக் கூட்டம் இருந்தது. யாழ். மருத்துவமனைப் பக்கத்திலிருந்து றிசேர்வ் பொலிசார் இருவர் சந்தைப் பக்கம் வருவதைக் கண்டேன். அவர்கள் சாதாரண துப்பாக்கிகள் இரண்டைத் தம்முடன் வைத்திருந்தார்கள். கூட்டத்தில் இருந்தவர்கள் அவர்களைக் கலைத்தார்கள். அடித்தார்களோ தெரியவில்லை. எனினும் கூட்டத்தில் இருந்தவர் ஒருவர் பொலிசாரிடமிருந்த துப்பாக்கியைப் பறித்திருக்கவேண்டும். வைத்திருந்ததைக் கண்டேன். துப்பாக்கியை வைத்திருந்தவர் சுபாஸ் கபேக்கு முன்னுக்கு நின்றார்.

சிறிது நேரத்தின்பின் மருத்துவமனைப் பக்கத்திலிருந்து பொலிஸ் ஜீப் வண்டி ஒன்று வந்தது. ஏ.எஸ். பி. திரு. நூர்தீன் அவ்வண்டியில் இருந்ததைக் கண்டேன். அவர் சாதாரண உடையணிந்திருந்தார். கோபம் கொண்ட கூட்டத்தினர் ஜீப்வண்டிமீது கற்களால் எறிந்தனர். சுபாஸ் கபேக்கு முன்பாகத் துப்பாக்கியோடு நின்றவர் துப்பாக்கியினை ஜீப்பினை நோக்கி வீசி, ஜீப்பின் கதவைத் தாக்கினார். துப்பாக்கி நிலத்தில் விழுந்தது. தப்பும் நோக்கத்துடன் திரு. நூர்தீன் ஜீப்பை வேகமாக ஓட்டிச் சென்று விட்டார்.

அங்கு நிற்பது பாதுகாப்பு இல்லை எனவும், வீட்டிற்குப் போகலாம் எனவும் திரு. சங்கரன் அவர்களிடம் கூறி, நாம் இருவரும் காரில் ஏறித் திரு. சங்கரன் வீடு சென்றோம். அங்கிருந்து எஸ். பி. திரு. செனவிரத்தினவுடன் தொலைபேசியிற் கதைக்க முயன்றேன். முதல்நாள் மாலை சொன்னதற்கும், அன்று காலை நடந்ததற்கும் தொடர்புண்டா என அறிய முயன்றேன். அவரது அலுவலகத்தில் அவர் இல்லையெனக் கூறினார்கள். பொலிஸ் நிலையத்தினுள் இருப்பதாகக் கூறினார்கள். பொலிஸ்

நிலையத்துடன் தொலைபேசியிற் பேசி எனது பெயரையும் பதவியையும் தெரிவித்து எஸ். பி. யுடன் கதைக்க விரும்புவதாகத் தெரிவித்தேன். சிறிது நேரத்தின் பின் எஸ். பி. அங்கிருந்து சென்று விட்டதாக எனக்குத் தெரிவித்தார்கள்.

திரு. செனிவிரத்தின எனக்குச் சொன்னது பற்றிச் செய்தி அனுப்ப நான் விரும்பவில்லை. ஏனெனில் அதைத் தொடர்ந்து பல நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றிருந்தன. அந்தச் செய்தியை அனுப்பினல் நாட்டிற் பதட்டநிலையும், குழப்பமும் உருவாகலாம் என எண்ணினேன். (சட்டத்தரணிகள் கேள்விகள் எதையும் கேட்கவில்லை)

திரு. சாம். கதிர்காமர்: சுங்கப்பகுதி துணைக் கலக்டர் திரு. சேனரட்னவை அடுத்து அழைக்கவுள்ளேன். இன்று அவர் வருவார் என எதிர்பார்க்கப்படுகின்றது; படத்தை வரைந்தவரையும் அழைக்கவுள்ளேன்; கொழும்பைச் சேர்ந்த அவர் நாளை வருவார். பின்பு பொலிஸ் இன்ஸ்பெக்டரைக் கூப்பிடுவேன். இத்துடன் நேரடிச் சாட்சியங்கள் முடிவடையலாம். கம்பியூட்டரில் போட்டு வந்த விபரங்களும் உண்டு. யாழ்ப்பாண மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இணைப்பு அதிகாரி, படைத்தளபதி, கடற்படைத் தளபதி, பொலிசார் ஆகியோரைக் கூப்பிடவேண்டும். அதன்பின்பு திருகோணமலையிலும், அநுராதபுரத்திலும், வவுனியாவிலும் நடைபெறும் விசாரணைகளில் உங்களுக்கு உதவுவோம். இ. போ. ச. கோண்டாவில் டிப்போ சுப்பிரின்டன் திரு. என். தியாகராசா அவர்களை நாளைய தினம் ஆணைக்குழுமுன் தோன்றுமாறு கட்டளை அனுப்பவேண்டுகின்றேன்.

(நாளைக் காலை 9-30 மணிவரை ஆணைக்குழு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.)

## நான்காம் நாள்

1978 பெப். 11 சனி காலை 9-30 மணி.

ஆணையாளர்: திரு. கதிர்காமர் அவர்களே, நீங்கள் அழைக்க விரும்பிய சாட்சியான திரு. சேனரட்ன ஏதோ விசாரணை செய்வதற்காக வேறு இடம் போய் விட்டார். அடுத்த வெள்ளியன்றுதான் அவருக்கு வசதியாக இருக்கும். அவர் இரகசிய சாட்சியமளிக்க விரும்புவதாகத் தெரிகின்றது.

திரு. கதிர்காமர்: ஆம். ஐயா, எனினும் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. தாமோதரத்திற்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. சட்டத்தரணி திரு. சோமசுந்தரம் அவருடன் தொடர்பு கொண்ட பொழுது அவர் இன்று சாட்சியமளிக்க இசைந்துள்ளார். திரு. தாமோதரத்தின் சாட்சியை ஒழுங்கு படுத்தி உங்களுக்குத் தந்தாற்றான் உதவியாக இருக்கும். இதற்காக நான் அவரிடம் சில விடயங்களைக் கேட்டு அறிய வேண்டும். எனவே வார இறுதியில் அவருடன் கதைக்க உள்ளேன். குற்றவியல் வழக்குத் தொடர்பாக வவுனியா மேல் நீதிமன்றத்தில் திங்களன்று, திரு. தாமோதரம் சாட்சியமளிக்கவுள்ளார் என எனக்குத் தகவல் கிடைத்துள்ளது. ஆணையாளர்: இன்று அவருக்கு வசதியாக உள்ளதா? திரு. கதிர்காமர்: 10 அல்லது 15 நிமிடங்கள் அவருடன் பேசினாற் போதும் உடனே அவரை அழைக்கலாம். ஆணையாளர்: நீங்கள் ஆயத்தமாகும் வரை விசாரணையை ஒத்திவைக்கிறேன்.

(15 நிமிடங்களுக்கு ஆணைக்குழு ஒத்திவைக்கப் பட்டது.)

திரு: கதிர்காமர் : இன்ஸ்பெக்டர் தாமோதரத்தைச் சட்டத்தரணி திரு. சோமசுந்தரம் இன்று காலை சந்தித்த பொழுது வாய்மூல அறிக்கையை எழுத்திற் பெற்ருர். அறிக்கையிற் சில திருத்தங்கள் செய்யவேண்டும். திருத்திய பிரதியைப் பின்னர் தருகின்றேன். அவரின் அறிக்கையை இப்பொழுது உங்களுக்குத் தருகின்றேன். புள்ளி விபரங்கள் சிலவற்றைத் தருவதாக நேற்றுக் கூறியிருந்தேன். அவற்றை இப்பொழுது உங்களுக்குக் காட்டுகின்றேன். திருத்தமான படி ஒன்றைப் பின்னர் தருகின்றேன்.

நேற்றுச் சாட்சியமளித்த மருத்துவர் பிலிப்ஸ் சென்.பற்றிக்ஸ்கல்லூரிக்களியாட்டுவிழா நுழைவாயிலில் நின்றவரான திரு. புலேந்திரனைப் பற்றிக் குறிப்பிட்டார். அனுமதிச் சீட்டு வாங்கிக்கொண்டு நுழையுமாறு பொலிசாரிடம் கூறியவர் இவர்தான். ஆணைக்குழு முன் இவர் சாட்சியமளிக்க வேண்டும் எனக் கருதுகிறேன். அவர் இங்கு வருவதற்குத் தயாராக உள்ளார். எனினும் சாட்சியம் அளிப்பதன் விளைவாகப் பொலிசார் அவரைத் தாக்கக் கூடுமென அஞ்சுகின்ருர். இரகசியமாகச் சாட்சியமளிக்க வருமாறு அவருக்கு அழைப்பாணை அனுப்ப வேண்டும். அவர் தாக்கப்படுவார் எனப் பயமுறுத்தப்பட்டதால் அஞ்சுகின்ருர். ஆணையாளர்: அவருக்கு அழைப்பாணை அனுப்புவோம். திரு. உருத்திரமூர்த்தி விமானப்படை வீரர்கள் எமது சாட்சிகளுள் ஒன்றைப் பயமுறுத்தி உள்ளார்கள் என்பதைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன். மூன்று நான்கு தடவை அவர்களால் இச்சாட்சி தேடப்பட்டுள்ளார். சாட்சி இப்பொழுது ஒளித்திருக்கின்ருர். பாதிக்கப்பட்டவர்கட்குப் பாதுகாப்பு வழங்கியதே அவர் செய்ததாகும். அதுவும் விமானப் படையைச் சேர்ந்த ஒருவருக்குப் பாதுகாப்புக் கொடுத்தார். ஆணையாளர் : அவரை இங்கு அழைத்து வருக. திரு. உருத்திரமூர்த்தி: கொழும்பில் இரகசியமாகச் சாட்சியமளிக்க அழைத்து

வருகின்ருேம். நிகழ்வுகளோ எண்ணிலடங்காதவை. முழுமையான விபரங்களைப் பெறவேண்டின் எமது சாட்சிகள் அச்சமின்றி ஆணைக்குழுமுன் வரவேண்டும்.

திரு. கதிர்காமர்: மக்கள் தொகை, இனக்குழுக்கள் என்பன பற்றிய புள்ளி விபரத் தொகுப்புக் கச்சேரியில் உள்ளது. அதை இரவலாகக் கச்சேரியிலிருந்து பெற்று வந்துள்ளோம். பிரதியைத் தட்டச்சுச் செய்கின்ருேம். யாழ்ப்பாண மாவட்டத்திற்கும், யாழ்நகர் வட்டத்திற்கும் உரிய 1976-ம் ஆண்டிற்குரிய புள்ளி விபரங்கள் இவை. 1976-ல் யாழ். மாவட்டத்திலுள்ள 5233 கீழ் நாட்டுச் சிங்களவருள் 1780 பேர் யாழ்நகர் வட்டத்திலுளர். 1976-ல் யாழ். மாவட்டத்திலுள்ள 16,608 கண்டியச் சிங்களவருள் 3877 பேர் யாழ்நகர் வட்டத்தில் உளர். இதன் கூட்டுத் தொகையைப் பெறலாம்.

இப்பொழுது திரு. தாமோதரம் அவர்களை அழைக்கிறேன்.

தில்லையம்பலம் தாமோதரம்: (உறுதியுரை மொழியப்பட்டது) உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் சுன்னுகம் பொலிஸ் நிலையம்.

திரு. கதிர்காமரால் விளங்கப்படுகின்ருர்: ஆணைக்குழுவின் அழைப்பாணைக்கமைய நான் இங்குற்றேன். நேற்று எனக்கு அழைப்பாணை கிடைத்ததும் எனது சட்டத்தரணி திரு. சோமசுந்தரத்தை இன்று காலை சந்தித்தேன். என்னிடமுள்ள அறிக்கையை ஆணைக்குழுவிற்குத் தருவேன். (அறிக்கை X 11 எனக் குறியிடப்பட்டது) சாட்சியமளித்து முடிந்ததும் அறிக்கையிற் கையொப்பமிடுவேன். 56 வயதினனுகிய யான் 1942-ல் பொலிஸ் கான்ஸ்டபிளாகச் சேர்ந்தேன். 1957-ல் சார்ஜன்ட் ஆகப் பதவி உயர்த்தப்பட்டேன். 1971-ல் உதவி

இன்ஸ்பெக்டராக உயர்வு பெற்றேன். கொழும்பு, அநுராதபுரம், பொலனறுவை, ஹட்டன், மஸ்கெலியா, இரத்தினபுரி ஆகிய இடங்களிற் பணி புரிந்தேன். வினா: பல மாவட்டங்களிற் பணி புரிந்த தாங்கள் சிங்கள மக்கள் பெரும்பான்மையாகவும், இந்தியத் தமிழர் ஓரளவும், மலைநாட்டுச் சிங்களவர் இருந்த இடங்களிலும் பணிபுரிந்தீர்களா? நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் பணிபுரிந்தீர்களா? விடை: ஆம். யாழ்ப்பாணத்தில் இரண்டாவது முறையாக 1973 ஜனவரி முதல் பணிபுரிகின்றேன். 1967-ல் முதல் முறை பணிபுரிந்தேன். வினா: 1973-ல் யாழ்ப்பாணத்திற்குக் கடமைபுரிய வந்த பொழுது எவ்வெப் பொலிஸ் நிலையங்கட்கு அனுப்பப்பட்டீர்கள்? விடை: குருநகரிற் பொறுப்பதிகாரியாக இருந்தேன். 1-7-74 தொடக்கம் 7-10-77 வரை யாழ்ப்பாணக் குற்றத்தடுப்புப் பிரிவுக்குப் பொறுப்பதிகாரியாக இருந்தேன். சிறப்புப்பணிக்காக கோப்பாய்க்கு 1977 அக்டோபரில் அனுப்பப்பட்டேன். மூன்று மாதம் அங்கிருந்தபின் 1978 ஜனவரி தொடக்கம் சுன்னாகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாகச் சென்றேன்.

1977 ஆகஸ்ட்டில் யாழ்ப்பாணக் குற்றத்தடுப்புப் பொறுப்பதிகாரியாகஇருந்தேன். எனதுமேலதிகாரியாகத் தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் திரு. குணசேகராவும், ஏ. எஸ். பி. யாக திரு. ஹென்றி சில்வாவும், எஸ். பி. யாகத் திரு. ஏ. எஸ். செனவிரத்னவும், டி. ஐ. ஜீ. யாகத் திரு. அனுசெனவிரத்னவும்இருந்தனர். வினா: யாழ்ப்பாண மாவட்டம் எங்கே தொடங்குகின்றது? எங்கே முடிகின்றது? அதன் பரப்பு என்ன? விடை: பருத்தித்துறையிற் தொடங்கி ஆனையிறவு வரையுமுள்ள பரப்பு, பொலிஸ் மொழியில் யாழ்ப்பாணப் பிரிவு எனப்படும். வினா: யாழ்ப்பாணப் பிரிவில் எத்தனை பொலிஸ் நிலையங்கள் உண்டு? விடை: 9 அல்லது 10. வினா: திங்களன்று சரியான புள்ளி விபரத்தைத் தரமுடியுமா? விடை: ஆம். வினா: யாழ்ப்பாணப் பிரிவில் எல்லா நிலையங்களிலுமுள்ள

க. குகனேந்திரன்
பருத்தி மாக்குடி

பொலிசாரின் எண்ணிக்கை எத்தனை? விடை: ஏறத்தாழ 600 அல்லது 700. வினா: இந்த 600 அல்லது 700 பேரில் சிங்களவர், தமிழர், முஸ்லீம்கள் விகிதாசாரம் என்ன? விடை: 90 சதவீதமானவர்கள் சிங்களவர்கள். சிங்களவர்கள் பெரும்பான்மையாக உள்ளார்கள். எஞ்சியவர்கள் மற்றச் சமூகங்களைச் சேர்ந்தவர்கள்.

## திரு. எம். அண்டர்வூட்.

வினா: யாழ்ப்பாணத்தில் எத்தனை ஏ. எஸ். பி. க்கள் இருந்தனர்? திரு. சில்வாவைப்பற்றிக் குறிப்பிட்டீர்கள். விடை: அவர் தவிர ஏ. எஸ். பி. திரு. நூர்தீனும் இருந்தார். திரு. சாம். கதிர்காமர்: வினா: அவரின் அலுவலகம் யாழ். நகரில் இருந்ததா? விடை: ஆம். ஆகஸ்ட் மாதத்தில் வேறிடத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்ட, சார்ஜன்ட் பதவிக்கு மேற்பட்ட பதவியுடைய அலுவலர் பற்றித் தெரியுமா? விடை: இடமாற்றங்கள் நடந்தன. பெயர்கள் எனக்குத் தெரியாது. மதவாச்சியிலிருந்து ஒருவர் வந்தது தெரியும். வினா: எப்பொழுது வந்தார்? ஆகஸ்டிலா? விடை: எனக்குச் சரியாகத் தெரியாது.

தேர்தல் முடிவுகள் வெளியான இரவோ, மறுநாளோ மாநகரசபை வளவுக்குள் இருந்த காலஞ்சென்ற திரு. ஆனந்த குமாரசுவாமி அவர்களின் சிலையைப் பொலிசார் உடைத்ததாகக் கூறப்பட்ட நிகழ்வு நடந்தது. நிகழ்வை நான் பார்க்கவில்லை, எனினும் நடந்த மறுநாட் கேள்விப்பட்டேன். காரியவாசமும், பிறரும் இதைச் செய்ததாகப் பொலிஸ் நிலையத்திற் கதை வந்தது. சப். இன்ஸ்பெக்டர் காரியவாசமும், சப். இன்ஸ்பெக்டர் பெரமுனையும் இதைச்செய்தார்கள் என நான் அறிகின்றேன். வேறு ஒருவரின் பெயரும் கூறப்பட்டது. எனக்கு அது நினைவில் இல்லை. ஆஸ்பத்திரி வீதியில் உள்ள வூட்லண்ட்ஸ் ஹோட்டலுக்கு இவர்கள் சென்று உணவு அருந்தியபின் பணம் கொடுக்கவில்லை எனவும் அறிந்தேன்.

ஆகஸ்டில் களியாட்டு விழா தொடங்கியது: தொடக்க நாள் நினைவில் இல்லை. ஆகஸ்ட் 12-ம் நாள் இரவும், 13-ம் நாள் காலையும் களியாட்டு விழா மைதானத்தில் ஆனைக்கோட்டைப் பொலீசார் சிலருக்கும் அங்குள்ள தொழிலாளருக்கும் இடையே கலாட்டா நடைபெற்றதாக அறிந்தேன். இதுதொடர்பாக ஆனைக்கோட்டைப் பொலிஸ் நிலையப் பொலிசாரைத் தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் அழைத்தார். அவரின் கட்டளைக்கமைய அவர்களின் வாக்குமூலங்கள் குற்றத்தடுப்புப் பிரிவுப் பதிவுப் புத்தகத்திற் பதியப்பட்டன. 14-ம் நாள் காலை தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் என்னை அழைத்துக் களியாட்டு விழாவிற் சாவகச்சேரிப் பொலிசார் தாக்கப்பட்டமை குறித்து விசாரிக்கச் சொன்னார். யாழ். மருத்துவமனை சென்று பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரின் வாக்குமூலத்தைப் பெற்றதுடன் சாவகச்சேரி மருத்துவ மனையிலுள்ள பொலிஸ் கான்ஸ்டபிளின் வாக்குமூலத்தைப் பதியுமாறு சாவகச்சேரிப் பொலிசாருக்கும் வானொலிச் செய்தி அனுப்பினேன். இதைத் தொடர்ந்து சப். இன்ஸ்பெக்டர் குருசாமி விசாரணையைப் பொறுப்பேற்றார். 14-ம் நாள் இரவு சூடுபட்ட பொலிசார் பற்றி விசாரிப்பதில் நான் மூழ்கியிருந்தேன். 15-ம் நாள் காலை நான் விடுதியிலிருந்த பொழுது சார்ஜன்ட் துரைசிங்கம் தொலைபேசியில் என்னுடன் கதைத்தார். பேருந்து நடத்துனர் ஒருவரும், பிறரும் தாக்கப்பட்டதாகவும், முனியப்பர் கோவிலடியில் லாரி ஒன்று சேதப்படுத்தப்பட்டதாகவும் கூறினார். உடனடியாகப் பொலிஸ் நிலையம் வந்த நான் விசாரிக்கச் சென்றேன்.

முனியப்பர் கோவிலடியிற் கற்கள் பரப்பப்பட்டிருந்தன. லாரிக் கண்ணாடியின் உடைந்த துண்டுகள் கிடந்தன. தாக்கியவர்களைத் தேடினேன். காணமுடியவில்லை; பேருந்து நடத்துனரைத் தாக்கியது தொடர்பாக விசாரிக்க முனீஸ்வரம் வீதிக்குச் சென்று காயமடைந்த

வரைத்தேடினேன். காணவில்லை; மருத்துவமனை சென்று கண்டேன். அவரின் சட்டையும், காற்சட்டையும் சேற்றில் தோய்ந்திருந்தது. தனது பெயர் யேசுதாசன் எனக் கூறினார். மருத்துவ சிகிச்சை செய்யப்பட்டதெனினும் நோ இருப்பதாகக் கூறினார். புத்தூர்ச் சந்தியில் சூடு வாங்கிய பொலிஸ் கான்ஸ்டபிள் பண்டாரராவை அங்கு கண்டேன். படுக்கையில் இருந்தார். முதல் நாள் இரவு மூன்று இளைஞர்கள் பொலிசாரைச் சுட்டதால் காயமடைந்ததாகக் கூறினார்.

திரு. ஹென்றி சில்வாவுக்குப் பதிலாகக் கடமையாற்றிய ஏ. எஸ். பி. திரு. நூர்தீன் புத்தூரில் நடைபெற்ற இச் சூட்டுச் சம்பவம் பற்றி அச்சமயம் என்னிடம் கட்டளையிட்டிருந்தார். கோப்பாய் செல்லுமாறு பணிக்கப்பட்டேன். நிகழ்வு நடைபெற்றதாகக் கூறப்பட்ட இடத்திற்கு உடனடியாகச் சென்று விசாரணை செய்தேன். 15-ம் நாள் முழுவதும் இதில் ஈடுபட்டு 8 மணிக்கு அல்லது அதற்குப் பின் வீடு திரும்பினேன்.

16-ம் நாள் காலை பொலிஸ் நிலையம் வந்தேன். கோப்பாய்க்குப் போவதாகப் பதிவு செய்து விட்டு விசாரிக்கச் செல்ல ஆயத்தமாகிக் கொண்டிருந்த பொழுது, பாதுகாப்பு ஊழியர் ஒருவர் சீருடையில் நின்றதைக் கண்டேன். அவரிடமிருந்த கடதாசியில் ஜீப் ஒன்றின் எண் இருந்தது. அந்த எண் உடைய ஜீப் யாழ். பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்தது. முதல் நாள் இரவு பொலிசார் தாக்கியதாற் சேதமடைந்த அல்லது எரிந்த கட்டிடம் பற்றி அவர் முறையிட வந்திருந்தார். துப்பாக்கிச் சூட்டு விசாரணையில் நான் ஈடுபட்டிருந்ததால் இந்த விசாரணையையும் நான் மேற்கொள்ள விரும்பவில்லை. எனவே தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டரிடம் அவரை அனுப்பினேன். நான் புறப்பட்டுக் கொண்டிருந்த பொழுது திரு. நூர்தீன் பொலிஸ் நிலையத்தினுள் வந்ததைக் கண்டேன். வாசலில் வரும்பொழுதே சத்தமிட்டுக் கொண்டு வந்தார். ''நகரத்தினுள் பொலிசார் தாக்கப்படுகின்

றார்கள். இங்கு நீங்கள் என்ன செய்கின்றீர்கள்'' இவ்வளவும்தான் அவர் சொன்னார். ரிசேர்வ் படையினரை அபாயச் சங்கை ஊதுமாறு தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் கட்டளை இட்டார். பொலிசார் சிவில் உடையில் வந்தனர். ஆயுதபாணிகளாக்கி ஜீப் வண்டியிலிட்டு அனுப்பப்பட்டனர்; அவர்களுள் திரு. இரணசிங்காவையும் கண்டேன். அவர் துப்பாக்கியுடன் ஜீப்பினுள் ஏறினார். திரு. இரணசிங்க வேலையிலிருந்து இடை நிறுத்தப்பட்டிருந்தவர். அப்பொழுது காலை 9 அல்லது 9-30 மணி இருக்கும். அவர்கள் ஒவ்வொருவராகப் போனார்கள்.

எஸ். பி. திரு. செனவிரத்தின பொலிஸ் நிலையம் வந்தார். பொலிஸ் விடுதிப்பக்கம் 30 அல்லது 40 பேர் வந்ததாக எஸ். பி. யிடம் ஒரு கான்ஸ்டபிள் கூறினார். சேதம் விளைவிக்க அவர்கள் வந்திருக்கலாம் எனவும் கூறினார். என்னைப்போய் அதைப் பார்க்குமாறு கூறிய எஸ். பி. தனியாகப் போகவேண்டாமெனவும், கூட யாரையாவது அழைத்துப் போகுமாறும் சொன்னார். வேறு ஒரு கான்ஸ்டபிளுடன் சென்றநான், அங்குசென்று ஒருவரையுங் காணாததால், அத்தகவல் தவறானது என எஸ். பி. யிடம் கூறினேன். பொலிஸ் நிலையத்திற்கு வரச் சொன்னதால் மீண்டும் திரும்பினேன். மீண்டும் பண்ணைக்குச் சென்று அங்குள்ள கட்டிடங்களைக் கவனித்துக் கொள்ளுமாறு எஸ். பி. என்னிடம் கூற நான் அங்கு சென்றேன். இரவு 8-30 மணிவரை அங்கு நின்றேன். மாற்றுப் பொலிசார் அங்கு வந்ததும் நிலையத்திற்குத் திரும்பிக் குறிப்பு எழுதிவிட்டு வீட்டுக்குச் சென்றேன். துப்பாக்கிச் சூடு ஒன்று நிகழ்ந்துள்ளதாற் பொலிஸ் நிலையத்திற்கு வருமாறு அழைப்புவந்து சென்றேன்.

தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டரின் அலுவலகத்தில் எஸ் பி. நின்றுகொண்டிருந்தார். அன்று ஆகஸ்ட் 16-ம் நாள் இரவு 10 அல்லது 10-30 மணியிருக்கும்.

பொலிஸ் வண்டி ஒன்றைக் காட்டி அதை நன்ருகக் கவனிக்குமாறு எஸ். பி. என்னிடம் கூறினர். அந்த வண்டி துப்பாக்கிச் சூட்டு சம்பவம் நடைபெற்ற நிகழ்வு தொடர்பாகப் போகவில்லை. பொலிசார் இருவருக்குத் துப்பாக்கிச் சூட்டுக் காயம் ஏற்பட்டிருந்தது. அவர்களுள் ஒருவர் என்னுடைய அலுவலகக் கான்ஸ்டபிளான திரு. அல்விஸ். அவர்களிடம் விபரம் கேட்டேன். 16-ம் நாளன்று பொதுமக்களாற் தாக்கப்பட்டுக்காயமடைந்த றிசேர்வ் பொலிசார் ஒருவரை மானிப்பாயிலுள்ள அவர் வீட்டில் விட்டு விட்டு இவர்கள் திரும்பும் பொழுது யாரோ ஒட்டுமடத்தடியில் வைத்துச் சுட்டதால் இருவர் காயமடைந்தார்களாம். பொலிஸ் வண்டியை அவதானிக்குமாறு என்னிடம் கூறி இருந்தமையால் நான் அவதானித்து விட்டு வீடு திரும்பினேன். பண்ணையில் பொலிசாரின் குடும்பங்கள் இருக்கும் விடுதிக்கு அருகிற் பொலிஸ் வண்டி சுடப்பட்டதாக அவர்கள் குறிப்பு எழுதியிருந்ததைப் பின்னர் தெரிந்து கொண்டேன். நடந்த இடத்திற்கு ஏன் போனீர் எனப் பொலிஸ்க் கான்ஸ்டபிளை நான் கேட்டபோது எஸ். பி. யின் கட்டளைக்கமையச் சென்றதாக அவர் கூறினர்.

ஆகஸ்ட் 17-ம் நாள் காலை நான் பொலிஸ் நிலயம் வந்து அன்று முழுவதும் அங்கு தங்கியிருந்தேன். நாகவிகாரை தாக்கப்பட்டதாக அங்கு கதை வந்தது. தெருவுக்கு எவரையும் வரவிடவேண்டாமென்றும், அதுபற்றி உறுதியாக இருக்குமாறும் எஸ். பி. திரு. செனவிரத்ன கூறியது என் காதில் விழுந்தது.

உள்ளூர் மருத்துவரின் ஆலோசனைப்படி நான் முப்பது நாளுக்குத் தொடர்ந்து வல்லாரை சாப்பிடவேண்டியிருந்தது. ஆகஸ்ட் 17-ம் நாள்வரை பத்து நாட்களுக்குச் சாப்பிட்டிருந்தேன். ஆகஸ்ட் 16-ம் நாளன்று வல்லாரை என்னிடம் இருக்கவில்லை. எனவே 17-ம் நாள் மாலை வல்லாரை வாங்கி வருமாறு சின்னக்கடைக்கு எனது

மகனை அனுப்பினேன். பொலிஸ் நிலையத்திற்குப் பின் பக்கக் கதவு அருகாகப் போய்க்கொண்டிருந்தபொழுது பொலிசார் தன்னைத் தாக்கியதாக எனது மகன் கூறினான். தன்னை மட்டுமல்ல அவ்வழி போய்வந்த அனைவரும் தமிழர் என்ற காரணத்தாற் தாக்கப்பட்டதாக மகன் தெரிவித்தான். வல்லாரை வாங்க நான் அனுப்பியதால் எனது மகன் தாக்கப்பட்டான். எனவே மனம் வருந்தினேன். ஏ. எஸ். பி. நூர்தீனிடம் இதுபற்றி முறையிட்டபொழுது தான் கவனிப்பதாகக் கூறினார். தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டர் திரு. குணசேகரா 17-ம் நாள் காலை 9-30 அல்லது 10 மணியளவில் என்னிடம் வந்தார். முதல் நாள் இரவு தான் கண்விழித்ததால் பொலிஸ் நிலையத்தில் என்னைக் கடமைபுரியுமாறு கேட்டார். நான் ஏற்றுக்கொண்டு அங்கு கடமை புரிந்தேன். அங்கு இருந்த எஸ். பி. திரு. செனவிரத்ந என்னை அழைத்தார். பிரதி அமைச்சர் திரு. வேரப்பிட்டிய பாம்கோட் விடுதியில் நிற்பதாகவும் பொலிஸ் நிலையத்திற்கு எந்நேரமும் வரலாம் எனவும், எனவே கடமையில் ஈடுபட்டிருந்த பொலிசார் அனைவரும் தமது எண்களை அணியவேண்டும் என அறிவிக்குமாறு என்னிடம் கூறினார். பொலிஸ் நிலையத்தின் முன் கதவுகளிலும், பின் கதவுகளிலும் கடமை புரிந்து கொண்டிருந்த பொலிசாரிடம் இச்செய்தியைத் தெரிவித்தேன். சிலர் எண்களை அணிந்திருந்தனர். சிலர் தமது பைகளில் இருந்து அதனை எடுத்து அணிந்தனர். சிலர் தமது வீட்டில் எண்பட்டிகளை விட்டு விட்டு வந்ததாகக் கூறினர். எடுத்து அணியுமாறு அவர்களிடம் கூறினேன். கோட்டைக்குப் போகும் சந்தியில் மூன்று பொலிசார் நின்றனர். அவர்களிடம் இதனைக் கூறியபோது அவர்கள் மகிழ்ச்சியடையவில்லை. ஒரு மணியளவில் நான் மீண்டும் எல்லாம் சரியாக இருக்கின்றனவா எனப் பார்த்து வரச் சென்றேன். முன் கதவிலும், பின்கதவிலும் நின்ற பொலிசார் எண்களை அணிந்திருந்தனர். சந்தியில் நின்றவர்களைக் காணவில்லை.

நிலைய வளவுக்குள் தேடினேன் காணவில்லை; ஒரு கான்ஸ் டபிளை அனுப்பித் தேடினேன். அவர் அம் மூவருடன் வந்தார். எங்கு சென்றீர்கள் என அம் மூவரையும் கேட்டேன். வீடுசென்றதாகக் கூறினர். வீடு செல்வதற்கு இது நேரமல்ல என ஆலோசனை கூறினேன். குறிப்பு எதுவும் எழுதவில்லை. அம்மூவரும் கோபமாக இருந்த துடன், போகும்போது கிண்டலாகப் பேசிக் கொண்டு போனார்கள். என்ன சொன்னார்கள் என்பது நினைவில் இல்லை.

மறுநாட்காலை இதனை எஸ். பி. செனவிரத்தினவிடம் கூறினேன். காலையோ, மாலையோ நினைவில் இல்லை. மாலை யாகவும் இருக்கலாம். நிலையக் கடமையில் ஈடுபட்டிருக் கும் போதுதான் கூறினேன். தமிழ்ப்பொலிசார் தாக்கப் படலாம் எனக்கூறினேன். பொலிசாரின் நடத்தை ஒழுங் காக இல்லையெனக் கூறினேன். குறிப்பாக அந்த மூன்று பொலிசாரைப் பற்றியும் கூறினேன். அவர்களின் பெய ரையும், இலக்கத்தையும் கேட்டார். நினைவில்லை எனக் கூறிய நான் பதிவுப்புத்தகத்தைப் பார்த்து எண்களைத் தெரிவித்தேன். வழமையாகவே தொல்லை கொடுக்கும் இயல்பு உள்ளவர்கள் இவர்கள் எனவும் கூறினார். தண் டிப்பதாகவும் கூறினார். எனது மகன் தாக்கப்பட்டது பற்றிக் கூறினேன். "நிலைமையைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தால் என்ன. வெளியே அனுப்பும்போது வெளியே அனுப்பும் பொலிஸ் படையில் ஒன்றிரண்டு தமிழரும் இருந்தால் தொல்லை இராதே. பொலிஸ்ப் படைக்குக் கெட்ட பெயர் வராதே" என்றேன். எல் லாரையும் தமிழராக அனுப்ப முடியாதெனக் கூறினார். திரு. என். சி. பெரேராவின் பெயரைக் குறிப்பிட்டேன். அவரை எனக்குத் தெரியும். அவர் பொறுப்புள்ள ஒரு வர். அவரைப் போன்றவர்களாற் பொலிஸ் படைக்குக் கெட்ட பெயர் வரமாட்டாது. பொறுப்பான மூத்த அலுவலர்களை அனுப்புமாறு ஆலோசனை கூறினேன். அதற்கு அவர் ஒன்றும் கூறவில்லை;

ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. பொலிசாரின் ஒழுங்கற்ற, பொறுப்பற்ற நடத்தை பற்றி அங்கு சாட்சியம் அளிப்பேன் என எஸ். பி. யிடம் பின்பு ஒரு முறை கூறினேன். இதுபற்றி அவர் பொருட்படுத்தாமற் கதைத்தார். அரச விசாரணைக்குழு உட்பட்ட பல விசாரணைக்குழுக்களைச் சந்தித்திருப்பதாகக் கூறிய அவர் அது பற்றி நான் கவலைப்படக் கூடாது என்றார். என்னிடம் வந்து ஒருமுறை ''என்னைச் சுடச் சிலர் திட்டமிடுகின்றனர்'' என்று கூறி அவர்களுக்கு எதிராகக்கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். சிலர் கைது செய்யப்பட்டு அறையில் அடைக்கப்பட்டிருப்பதாக நான் விளங்கிக்கொண்டேன். அவர்களை நான் காணவில்லை. ''அவர்கள் எதையும் செய்யட்டும்'' என்றேன். குற்றப் பதிவுப் புத்தகத்தில் சார்ஜன்ட். சம்சுதீனைக்கொண்டு பதிவு செய்தார். தாமாகத் தகவல் பெற்று பதிவு செய்தாரா சார்ஜன்ட் சம்சுதீன் என்பது எனக்குத்தெரியாது. தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டரின் அலுவலகத்தில் என்னைச் சந்தித்தார். தன்னை யாரோ சுட உள்ளதாகவும், அவர்மீது கடும் நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் கூறினார்.

ஆகஸ்ட் 16-ம் நாள் சிவன்கோவிலடியிற் பொலிசார் சென்று சுட்டார்கள் எனப் பொலிஸ் வண்டி ஓட்டுநர் கிருஷ்ணபிள்ளை கூறினார். தான் ஓட்டுநராக இருந்தமையால் இதைக் கவனித்ததாகக் கூறினார். எம். டி. குணசேன புத்தகக் கடையைப் பொலிசார் தாக்கியதாகப் பொலிஸ்வண்டி ஓட்டுநர் சிவஞானம் கூறினார். உண்மை பொய் தெரியாது. அவர் கூறியது மட்டும் தெரியும்.

ஜெராட் என்பவர் ஒரு பொலிஸ் கான்ஸ்டபிள். குற்றத் தடுப்புப் பிரிவிலிருந்த இவர் பின்னர் நெடுந்தீவிற்கு மாற்றலாகிச் சென்றார். அந்தப் பொலிஸ் நிலையம் மூடப்பட்டதும் சிறப்புக் கடமைக்காக இங்கு வந்தார். 5-ம் நாள் இரவு கடைசிப் படக்காட்சி பார்க்கச்

சென்றுவிட்டு கோட்டைப் பொலிஸ் விடுதியிற் படுத்திருந்ததாகவும், அதிகாலை ஒன்றரை அல்லது ஒன்றே முக்கால் மணியளவில் சாரம் அல்லது காற்சட்டை அணிந்த பொலிசார் தலையிற் துவாயினாற் தலைப்பாகை கட்டிக்கொண்டு தன்னை எழுப்பியதாகவும், தன்னை அடையாளம் கண்டபின்பு படுக்கச் சொல்லிவிட்டு வேறொரு பொலிஸ் கான்ஸ்டபிளை எழுப்பி அழைத்துச் சென்றதாகவும் என்னிடம் ஜெராட் கூறினார். ரோந்துக்காகத் தன்னை எழுப்புகிறார்கள் என நினைத்த இவர் பொலிசார் துவாய்த் தலைப்பாகையுடன் ஏன் போனார்கள் என வியந்தார். சந்தையிலுள்ள கடைக்காரர் தமது கடைகளைப் பொலிசார் பதினைந்தாம் நாள் இரவு சேதப்படுத்தியதாகவும் பின்னர் என்னிடம் முறையிட்டுள்ளனர். **ஆணையாளர்:** அதைப் பதிவுசெய்தீர்களா? **விடை:** நான் நேரடியாகப் பதிவுசெய்யவில்லை. அப்பிரிவுக்குப் பொறுப்பாக இருந்தேன். அவர்களின் முறைப்பாடு கச்சேரியிற் பதிவு செய்யப்பட மறுக்கப்பட்ட பொழுது எம்மிடம் வந்தார்கள். பதிவு செய்தோம். நிகழ்வு நடந்து 2 அல்லது 3 கிழமைக்குப்பின் பதிவுசெய்தோம் என நினைக்கிறேன்.

எஸ். பி. திரு. செனவிரத்தின இடமாற்றலாகிப் போனபொழுது நான் அவரைப் போய்ப் பார்க்கவில்லை. பார்க்க விரும்பவில்லை. பார்த்துப்பேசிவிட்டுப் பின் அவருக்கு எதிராக முறைப்பாடு கொடுக்க விரும்பவில்லை. அவர் இடமாற்றலாகிச் சென்ற உடனேயே எனக்கு ஒரு கடிதம் வந்தது. நான் கடுமையான இனவாதம் உள்ளவன் என்பதைக் கவனிக்குமாறு அதிற் கூறப்பட்டிருந்தது. என்னைப் பற்றி அவர் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பிய இரகசிய அறிக்கை அது. இதே எஸ். பி. தான், நான் இன்ஸ்பெக்டராகப் பதவி உயர்வு பெற வேண்டும் எனக் கடந்த ஆண்டு மே மாதத்தில் விதந்துரைத்திருந்தார். எஸ். பி. யின் இரகசிய அறிக்கைபற்றி நான் தலைமை அலுவலகத்திற்கு முறையீடு செய்துள்

ளேன். இந்நிகழ்வுக்கு இருநாட்கட்கு முன்புதான் மூன்று சம்பள உயர்வுகளைத் தரப்போவதாக இப்பிராந்திய டி. ஐ. ஜீ. எனக்கு உறுதி கூறியிருந்தார். இத் திணைக் களத்தில் 36 ஆண்டுகள் சேவையில் இனவாதியென ஒருவரும் இதுவரை என்னை அழைக்கவில்லை. பல அலுவலகர்களின் கீழ் வேலை செய்திருக்கின்றேன். இன்றும் அவர்கள் இருக்கின்றார்கள். என்னைப் பற்றி நன்றாகவே சொல்வார்கள். எஸ். பி. செனவிரத்தின தவிர வேறு எவரும் எனக்கெதிராக எதுவும் சொன்னதில்லை. ஆணையாளர் : வினா: எஸ். பி. யின் பெயரென்ன? விடை: திரு. ஏ. எஸ். செனவிரத்தின. வினா: டி. ஐ. ஜீ. யின் பெயரென்ன? விடை: திரு. அன செனவிரத்தின.

அதேமுறையீட்டில் நான் இந்த ஆணைக்குழு முன் சாட்சியம் அளிப்பேன் எனக் குறித்தேன். 1977 டிசம்பர் முற்பகுதியில் இம் முறையீட்டை அனுப்பினேன். சட்டத்தரணி திரு. சோமசுந்தரம் : வினா: திரு. செனவிரத்தினவுக்கு எதிரான முறையீட்டை அப்பொழுது அங்கிருந்த டி. ஐ. ஜீ. யிடம் தெரிவித்தீரா? விடை: மறு நாள் டி. ஐ. ஜீ. வந்தபொழுது எனது மகன் தாக்கப் பட்டது பற்றியும் பொலிசாரின் அட்டூழியம் பற்றியும் எஸ். பி. யின் முன்னிலையிற் கூறினேன். அதுப்ற்றிக் கவனிக்குமாறு எஸ். பி. யிடம் டி. ஐ. ஜீ. கூறினார். வினா: தமிழ்ப் பா. உ. க்களுக்கு எதிராகவும் அரசாங்க அதிபருக்கு எதிராகவும் பொலிசாரின் நடத்தை பற்றி நினைவூட்டவா? அரசர் விடுதிக்கு இணைப்பதிகாரி வந்த அன்று தமிழ்ப் பா. உ. க்கள் கோட்டைக்குள்ளிருந்து வெளியேறிய சமயம் பொலிசார் அவர்களைப் பார்த்துக் கூச்சலிட்டதை, அதுவும் தம் வீடுகளிலிருந்து ஓடிவந்து கூச்சலிட்டதை நான் வீட்டிலிருந்து கண்டேன். 9 அல்லது 9-30 மணியளவில் கோட்டைக்குள்ளிருந்து அரசாங்க அதிபர் வெளியேறிச் சென்றபோதும் இக் கூச்சலைக் கேட்டேன். தொடர்ந்து கூச்சலிட்டார்கள். சத்தம் வாடிவீடுவரை கேட்டிருக்கலாம். வேறொரு நிகழ்வையும் குறிப்பிடவேண்டும்.

இந்நிகழ்வு நடந்தபொழுது நான் காணவில்லை. ஆனுற் கேட்டேன். பொலிசுக்கும், இராணுவத்திற்கும், கடற் படைக்கும் எதிரான முறைப்பாடுகளை விசாரிக்க நிய மிக்கப்பட்ட ஏ. எஸ். பி. திரு. ஐயசூரிய பொலிஸ் வீடு களுக்குச் சென்றபொழுது அவருக்கு எதிராகவும் கூச்ச லிட்டனர். இது தொடர்பாகக் கடிதப் போக்குவரத்து உள்ளதால் இந்நிகழ்வு நடந்தது பற்றி நான் உறுதி கூறமுடியும். வினு: இணைப்பதிகாரிகூட்டிய மாநாட்டில் அரசாங்க அதிபருக்கு எதிராக எஸ். பி. கொண்டிருந்த உணர்வு நினைவில் உள்ளதா? விடை: அரசாங்க அதிப ருக்கு எதிர் உணர்ச்சி உடையவராக எஸ். பி. இருந்தார். அவர்கள் இருவரும் ஒருவருக்கொருவர் ஒத்துப்போவ தில்லை. இணைப்பதிகாரி யாழ்ப்பாணத்தை விட்டுப் புறப் பட்ட அன்று இப்போதைய டி. ஐ. ஜீ. மாநாடு ஒன்றை நடத்தினுர். முதல் மாநாடு காங்கேசன்துறையில் நடந் தது.

அடுத்த மாநாடு யாழ்ப்பாணத்தில் நடந்தது. நாங் கள் அங்கிருந்தோம். பொலிசார் யாழ்ப்பாணத்திற் கஷ்டத்துக்குள்ளாகி இருப்பதாகவும், தான் மனம் வருந்துவதாவும் பதவியுயர்வும், சம்பள உயர்வும் வழங் கத் தான் ஆலோசிப்பதாகவும் அவர் கூறினுர். எனது முறைப்பாட்டைப் பற்றியும், கூச்சலிட்டமை பற்றியும் அவர் குறிப்பிட்டார்.

சட்டத்தரணி ஜி. பி. எஸ். சில்வா: வினு: பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர்களான காரியவாசம், பெரமுன ஆகியவர் களைப் பற்றிச் சாட்சியமளிக்கத் தொடங்குகையிற் கூறி னீர்களா? இவ்வலுவலர்கள் தொடர்பான நிகழ்வுபற்றி யும் கூறினீர்களா? இந்நிகழ்வுகள் பற்றிப் பிறரிடமிருந்து கேட்ட விபரங்களையே கூறினீர்கள்? விடை: ஆம். வினு: களியாட்டுவிழா நடந்தபொழுது நீர் அங்கு இல்லையா? விடை: அங்கு இல்லை. இரண்டாவது நிகழ்வுபற்றி விசா ரிக்குமாறு கேட்கப்பட்டிருந்தேன். வினு: ஆகஸ்ட் 16-ம் நாள் அன்றைய சில பாதுகாப்பு உத்தியோகத்தர்களைப்

பற்றிக் கூறினீர்கள்? விடை: ஆம். அவர்கள் தனியார் ஒருவருக்கு ஊழியம் செய்யும் சாதாரண ஆட்களே. பொலிசார் அல்லர். வினு: அவர்களின் பணி என்ன? விடை: நகரிற் பாதுகாவல் புரிவது. திரு. சந்திரன் என்பவர் இத்தகைய 30 அல்லது 40 பேரை வைத்திருக்கிருர். முன்பு அவர்கள் நகரப் பாது காவலர் என அழைக்கப்பட்டனர். வினு: நீர் சந்தித்த பாதுகாப்பு அலுவலரின் பெயர் தெரியுமா? விடை: நினைவில் இல்லை. வினு: அவரின் பெயர் தெரியாது ஆனுல் அவர்காட்டிய கடதாசியிற் பொலிஸ் வண்டியின் எண் இருந்ததா? விடை: ஆம். வினு: ஆகஸ்ட் 16-ம் நாள் துப்பாக்கிச் சூடுபற்றிக் கூறினீர்களா? விடை: ஆம். வினு: அதை விசாரித்தீர்களா? விடை: இல்லை. அந்தச் சூட்டு நிகழ்வு யாழ்நகர வட்டத்தினுள் இருக்கும் ஒட்டுமடத்தில் நடந்தது. வினு: என்ன நேரம்? விடை: இரவு 9-30 மணி. வினு: காயமடைந்தவர் யார்? விடை: எனது அலுவலகக் கான்ஸ்டபிள் அல்விசும், யாழ்ப்பாண நிலையத்தைச் சேர்ந்த வேறு ஒருவரும். அவரின் பெயர் எனக்குத் தெரியாது. வினு: அவர்கள் சுடப்பட்டார்களா? விடை: ஆம். வினு: அவர்களை எங்கு சந்தித்தீர்கள். விடை: நான் பொலிஸ் நிலையத்தில் இருந்த பொழுது. வினு: எஸ். பி. திரு. செனவிரத்தின உமக்குக் கொடுத்த கட்டளையிற் கான்ஸ்டபிள்கள் தமது சட்டையில் எண்களை அணியவேண்டும் என்ருரா? விடை: ஆம். வினு: எப்பொழுது? விடை: ஆகஸ்ட் 17-ம் நாள். வினு: என்ன நேரம்? விடை: இரவு 9-30 அல்லது 10மணி. வினு: கான்ஸ்டபிள்கள் எண்களை அணிந்திருக்கவில்லை என்பதை அங்கு சென்று கண்டீரா? விடை: எனது பிரிவைச் சார்ந்த இருவர் அணிந்திருக்கவில்லை, அணியச் சொன்னேன்.

சட்டத்தரணி திரு. சோமசுந்தரம்: வினு: சிவன் கோவில் தாக்கப்பட்டதைப் பற்றிக் கூறினீர்களா? விடை: கேள்விப்பட்டேன். குணசேன புத்தகக் கடை

தாக்கப்பட்டது பற்றியும் கேள்விப்பட்டேன். வினு: பொலிஸ் கான்ஸ்டபிள் ஒவ்வொருவரும் பொலிஸ் சட்டப்படி பொலிஸ் எண்களை அணியவேண்டுமல்லவா? விடை: ஆம். வினு; எண்களை அணியாமல் பொலிசார் இருந்ததைப் 17-ம்நாள் இரவு கண்டீர்களா? விடை: ஆம். வினு: துப்பாக்கிச் சூட்டு நிகழ்வுகள் பல நடைபெற்றன. புத்தூர் நிகழ்வை நினைவூட்டுகிறேன். என்ன விசாரணை செய்தீர்கள்? விடை: எஸ். பி. யிடம் கட்டளை பெற்றேன். இடக்கட்டுப்பாட்டுக் கடமைகளை மாதந்தோறும் செய்வோம். மூன்று நிலையங்கள் சேருமிடத்தில் மேற்பார்வையாளர் அவர்களை அழைத்து வெவ்வேறிடத்தில் விடுத்து ரோந்துக் கடமை செய்யவிடுவார்கள். வினு: என்ன நடந்தது, என்ன காரணம்? விடை: இளைஞர் மூவர் சயிக்கிளில் வந்த பொழுது பொலிசார் மறித்தனர். பொலிசார் அவர்களைத் தேடத்தொடங்கிய பொழுது பொலிசார் மீது அவர்கள் சுட்டனர்.

சட்டத்தரணி திரு. அண்டர்வூட்:

(துப்விட்டு மீள்வதற்குச் சாட்சி அனுமதி கேட்டு, வழங்கப்பட்டு அவ்வாறு செய்து மீண்டார்.)

வினு: ஜெராட் என்பவரைப் பற்றிக் கூறினீர்கள். அவர் தமிழரா? சிங்களவரா? விடை: அவர் தமிழ்க் கிறிஸ்தவர். வினு: எவ்விடத்தவர்? விடை: யாழ்ப்பாணப் பொலிசில் எனது பிரிவில் வேலை செய்தவர். பின்னர் நெடுந்தீவுக்கு மாற்றலாகிச் சென்றவர். வினு: அவர் தொடர்பான நிகழ்வு பற்றிக் கூறினீர்களா? விடை: ஆம். இரண்டு, மூன்று நாட்கழித்துத் தெரிந்துகொண்டேன். வினு: அலுவலரை இடமாற்றுதற்குரிய நடைமுறை என்ன? விடை: அவர்கள் அதைப் பதிவு செய்வார்கள். வினு: அதே இரவு வண்டியிற் சென்றால், அதுவும் பதியப்பட்டு, வண்டியின் இலக்கமும் பதியப்படுமா? விடை: ஆம். வினு: வேலையிலிருந்து இடைநிறுத்திவைக்கப்பட்ட கான்ஸ்டபிள் ஒருவரையும் போகச் சொன்னீர்களா? விடை: போகச் சொன்னர்

களோ தெரியாது. வினா: பொலிசார் ஒருவருக்குத் துவக்குக் கொடுத்தால் அவரின் பெயர் துவக்கு எண் என்பன பதியப்படுமா? யார் எழுதுவது? விடை: ஆர். ஐ. வி. புத்தகத்திற் பதியவேண்டும். சார்ஜன்ட் அல்லது உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் அல்லது ஏ. எஸ். பி. பதிய வேண்டும். வினா: இடைநிறுத்தப்பட்ட பொலிசார் ஒருவருக்கு முறையாகத் துவக்கு வழங்கப்பட்டதா என விசாரித்தீரா? விடை: எனக்குத் தெரியாது. நான் கண்டதுமட்டும்தான். வினா: முனியப்பர் கோவில் நிகழ்வு பற்றித் தெரியுமா? எப்பொழுது தெரியவந்தது. விடை: நடந்த மறுநாள் நிலையத்திற்கு நான் சென்றபொழுது யூனற்றட் கிளப்பும், முனியப்பர் கோவிலும் சேதப் படுத்தப்பட்டதாகப் பொலிசார் கதைத்தார்கள். வினா: அவை எந்த வீதியில் உள்ளன? விடை: கே. கே. எஸ். வீதியில் உள்ளன. ஆணையாளரைப் பார்த்து, திங்களன்று வவுனியாவில் நிற்பேன். எவ்வளவு காலம் நிற்பேன் என்று தெரியாது. ஆணையாளர்: வழக்கு முடிந்தவுடன் வரமுடியுமா? விடை: ஆம். ஐயா. அவ்வாறு செய்கிறேன்

(இடைவேளைக்குப் பின் கூடுகின்றது)

யாழ்ப்பாணக் கச்சேரிப் புள்ளி விபர அலுவலர் வைத்திருக்கும் புள்ளி விபரத் திரட்டின்படி ஒன்றை X 12 என அடையாளமிட்டு திரு. கதிர்காமர் ஆணையாளரைப் பார்த்துக் கூறுகின்றார். யாழ்ப்பாண வட்டத்திற்கும், யாழ். மாவட்டத்திற்கும் உரிய புள்ளி விபரங்கள் இங்குள. யாழ். நகரும், நல்லூரில் ஒரு பகுதியும், யாழ்ப்பாண வட்டத்துள் உளது, பருத்தித்துறை தொடங்கி, ஆணையிறவுக்குக் கீழே வரை யாழ். மாவட்டத்துள் உளது.

சின்னராசா வரதராசா (உறுதிமொழியப்பட்டது) கந்தர் மடம்:

(சாட்சியின் அறிக்கையின் ஆங்கிலமொழி பெயர்ப்பு X 13 எனக் குறியிடப்படுகின்றது.)

க. குகனேந்திரன்
பூநாறி மரத்தடி

திரு. கதிர்காமர்: வினா: என்ன வயது? முகவரி என்ன? விடை: 19 வயது. 150, ஆத்திசூடி ஒழுங்கை, கந்தர் மடம். வினா: 1977 ஆகஸ்ட் 16-ம் நாள் காலை 8-30 மணிக்கு யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி வழியாக வெலிங்டன் தியேட்டர் சந்தியை நோக்கி உமது வேலைத் தலத்திற்குப் போய்க்கொண்டிருந்தீர்களா? விடை: ஆம். வினா: உலோக ஒட்டு வேலைப் பயிற்சி பெறுகிறீர்களா? விடை: ஆம். வினா: வழியிற் கூட்டமாக மக்கள் நின்ற பொழுது என்ன கரைச்சல் என நீங்கள் கேட்க பொலிசார் மக்களை விரட்டித் தாக்குகிறார்கள் என யாரோ கூறினார்களா? விடை: ஆம். வினா: மணிக்கூட்டுச் சந்தியடிக்குப் பொலிஸ் ஜீப் வண்டிவந்தது. 2, 3 தரம் துப்பாக்கியால் ஆகாயத்தை நோக்கிச் சுட்டது. நீர் முனீஸ்வரன் கபேக்குப் பக்கத்திலுள்ள கார் திருத்தகத்தில் ஒதுங்கினீர்களா? விடை: ஆம். வினா: பொலிசார் கார் திருத்தகத்தைத் திறந்த பொழுது அங்கு எத்தனை பேர் இருந்தார்கள்? விடை: எனக்குத் தெரியாது. நான் ஒளித்திருந்தேன். வினா: வேறு பலரும் அங்கு ஒளித்திருந்தார்களா? விடை: ஆம். வினா: பொலிசார் கார்திருத்தகத்தை விட்டு நீங்கியதும் பின்பக்க வேலியாற் பாய்ந்து மணிக்கூட்டு வீதிக்குப் போனீர்களா? விடை: ஆம். வினா: வெலிங்டன் தியேட்டர் சந்தியிலிருந்து மாணவர்களும், மக்களும் ஓடிவந்து கொண்டிருந்தார்களா? விடை: ஆம். வினா: பொலீசார் கலைப்பதால் ஓடுவதாகக் கூறி அவர்களுடன் சேர்ந்து நீங்களும் ஓடினீர்களா? விடை: ஆம். வினா: வெலிங்டன் தியேட்டர் சந்திக்கு வந்த பொலிசார் கூட்டத்தை நோக்கிச் சுடத் தொடங்கியதும் வீடொன்றினுள் நுழைந்து தப்ப முயன்றீர்களா? விடை: ஆம். வினா: உங்களது வலது முழங்காலிற் சூடு விழுந்ததா? உமக்குத் தெரியாத இளைஞர்கள் உம்மை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்களா? அங்கு உமது வலதுகால் முழங்காலிற்குக் கீழே நீக்கப்பட்டதா? விடை: ஆம். வினா: சுட்ட இடத்திற்

பன்னிரண்டு பொலிசார் நின்றிருப்பார்களா? விடை: நான்கு பேர் நின்றார்கள். நான்கு பேர்தான் சுட்டார்கள். வினா: இப்பொழுதும் மதுத்துவமனையில் இருக்கிறீர்களா? விடை: இல்லை, வீடுசென்றுள்ளேன்.

திரு. ஜீ. பி. எஸ். சில்வா: வினா: மருத்துவ மனையில் உங்கள் வாக்கு மூலத்தைப் பொலிசார் பதிவு செய்தார்களா? விடை: ஆம். வினா: எப்பொழுது என்பது நினைவில் உள்ளதா? விடை: இல்லை.

சட்டத்தரணி திரு. அண்டர்வூட்: வினா: பொலிசார் வந்து எவ்வளவு நேரத்தின் பின் சுட்டார்கள்? விடை: வந்தவுடன் சுட்டார்கள். திரு. கதிர்காமர்: இந்தச் சாட்சியிடமிருந்து இவ்வளவுதான் ஐயா. அடுத்துத் திரு. சூரிய குமாரனைச் சாட்சியாக அழைக்கின்றேன்.

தியாகராசா சூரியகுமாரன்: 34, யாழ். வீதி, பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம்.

திரு. கதிர்காமர்: வினா: வயது என்ன? விடை: 17 வயது. வினா: யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதியிலுள்ள அலுமினியத் தொழிற்சாலையிற் பணி புரிகிறீர்களா? விடை: ஆம். வினா: 1977 ஆகஸ்ட் 16-ம் நாள் காலை, 8-15 மணியளவில் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி வழியாக வேலைக்குப் போய்க்கொண்டிருந்த பொழுது மக்கள் பலர் ஓடுவதைக் கண்டீர்களா? விடை: ஆம். வினா: பொலிசார் கலைப்பதால் ஓடுவதாகக் கூறிக்கொண்டு அவர்கள் ஓடிய பொழுது நீங்கள் நடந்து சென்று கொண்டிருந்தீர்களா? விடை: நானும் ஓடினேன். வினா: முதலில் நடந்துகொண்டிருந்தீர்கள். மக்கள் ஓடுவதைக் கண்டதும் நீங்களும் ஓடினீர்கள். ஸ்ரான்லிவீதி வழியாக வீட்டை நோக்கி ஓடினீர்கள். விடை: ஆம். நான் வீட்டிற்கு ஓடினேன். வினா: வெலிங்டன் தியேட்டரருகிற் சென்றுகொண்டிருந்த பொழுது வலது கையிற்

சூடு விழுந்ததா? விடை: வெலிங்டன் தியேட்டரைக் கடந்த பின் வலது கையிற் சூடு விழுந்தது. வினு: பொலிசார் சுட்டுக்கொண்டிருந்தார்களா? விடை: ஆம். பொலிசார் சுட்டுத்தான் தாக்கப்பட்டீர்களா? விடை: ஆம். வினு: காயமடைந்த கையுடன் வீடுநோக்கி ஓடினீர்களா? விடை: ஆம். வினு: அங்கிருந்தவர்கள் ஒரு கடைக்குக் கூட்டிப்போனுர்கள். பின்பு மருத்துவ மனேக்கு அழைத்துச் செல்லப்பட்டீர்கள். அங்கு ஒன்றரை மாதம் இருந்தீர்கள். அறுவைச் சிகிச்சைக்காக மருத்துவர்கள் மீண்டும் வரச்சொன்னுர்கள் அல்லவா? விடை: ஆம். அறுவைச் சிகிச்சை முடியவில்லை. வினு: இப்பொழுதும் மருத்துவமனேயில் இருக்கிறீர்களா? விடை: ஆம். வினு: உங்கள் வலது கை இன்னமும் பத்துப் போடப்பட்டுள்ளது அல்லவா? விடை: ஆம். வினு: இன்று மருத்துவமனேயிலிருந்து வருகிறீர்கள் அல்லவா? விடை: ஆம். வினு: 1977 ஆகஸ்ட் 16-க்குப்பின் வேலைக்குப் போக முடியவில்லைச் சரிதானே? விடை: ஆம். திரு. ஜீ. பி. எஸ். சில்வா: கேள்விகள் இல்லை.

திரு: அண்டர்வூட்: வினு: எங்கு சூடுபட்டது? விடை: தோழுக்குப் பக்கத்தில். வினு: எலும்பு முறிந்ததா? விடை: ஆம். வினு: ஓடிக்கொண்டிருந்த பொழுது சூடு பட்டதா? விடை: ஆம். திரு. கதிர்காமர்: எனது அடுத்த சாட்சி திரு. கைலாசபிள்ளை.

சிவகுரு கைலாசபிள்ளை: (உறுதிமொழியப்பட்டது) 25 வயது. வண்ணுர்பண்ணே லோட்டஸ் வீதியில் வாழ்கின்றேன். திரு. கதிர்காமர்: வினு: 1977 ஆகஸ்ட் 16-ம் நாள் காலே 10 மணியளவில் மோட்டார் உதிரிப்பாகங்கள் வாங்குவதற்காகத் தெருவழியே நடந்துகொண்டிருந்தீர்களா? கார் திருத்தகத்திற் திருத்தப்படும் கார் ஒன்றிற்காக இவற்றை வாங்க வேண்டியிருந்ததல்லவா? விடை: ஆம். வினு: நீங்கள் பூரணலிங்கம் கார் திருத்தகத்தில் யநதிரத்திருத்தகராகப்

பணிபுரிகிறீர்களா? விடை: ஆம். வினா: ஆஸ்பத்திரி வீதிவழி நடந்து வந்து அண்ணாகோப்பி நிலையத்திற்குப் பக்கத்தில் கஸ்தூரியார் வீதிக்குத் திரும்ப முனைந்த பொழுது உங்களது வலது மேற்கையிற் சூடு விழுந்ததா? விடை: ஆம். வினா: எங்கேயென்று காட்டமுடியுமா? விடை: வலது பக்க மேற்கையைச் சாட்சி காட்டுகின்றார். வினா: சன்னம் துளைத்து வெளியேறிய காயம் தானே அது? விடை: ஆம். வினா: சூடு விழுந்த பொழுது அங்கு மக்கள் நின்றனரா? பொலிசார் நின்றனரா? பொலிஸ் கான்ஸ்டபிள்களும், இன்ஸ்பெக்டர்மாரும் நின்றார்களா? விடை: ஆம். வினா: கான்ஸ்டபிள்கள் எத்தனைபேர்? இன்ஸ்பெக்டர்மார் எத்தனை பேர்? விடை: ஐந்தாறு கான்ஸ்டபிள்களும், இரண்டு இன்ஸ்பெக்டர் மாரும். வினா: பொலிசார் சுட்டனரா? எவ்வளவு தூரத்தில் நின்று சுட்டனர்? விடை: பத்து யார் தொலைவில் நின்று சுட்டனர். வினா: பா. உ. திரு. அமிர்தலிங்கம், பா. உ. திரு. யோகேஸ்வரன் ஆகிய இருவரையும் தெரியுமா? விடை: ஆம். வினா: பொலிசார் சுட்டபோது அவர்கள் அங்கு இருந்தார்களா? விடை: ஆம். வினா: பொலிசார் திரு. அமிர்தலிங்கத்தைத் தாக்கினரா? விடை: ஆம். வினா: திரு. அமிர்தலிங்கம் பொலிசாராற் தாக்கப்பட்ட பின்னர் சுடப்பட்டதா? விடை: ஆம். வினா: துப்பாக்கிச் சூட்டின்பின் ஒரு மாத காலம் மருத்துவமனையில் இருந்தீர்களா? உங்கள் வலது கையைப் பயன்படுத்த முடியாததால் மீண்டும் மருத்துவமனையில் இருந்தீர்களா? விடை: ஆம். வினா: சுடவேண்டாமென இரு இன்ஸ்பெக்டர்களும் தடுத்தார்களா? விடை: கான்ஸ்டபிள்கள் சுடப்போனபோது இவர்கள் இருவரும் தடுக்க முயற்சித்தார்கள். வினா: சாதாரண உடையணிந்த பொலிசார் இருந்தனரா? விடை: ஆம். வினா: சாதாரண உடை என்றால் என்ன மாதிரி உடைகள்? விடை: காக்கிக் காற்சட்டையும், பனியனும் அணிந்திருந்தனர். வினா: சீருடையணிந்த பொலிசார் இருந்தனரா? விடை: ஆம். திரு. ஜீ. பி.எஸ். சில்வா: நான் கேள்விகள் எதுவும்

கேட்கவில்லை. திரு. அண்டர்வூட்: உங்களது வலது கையைப் பயன்படுத்த முடிகின்றதா? விடை: பயன் படுத்த முடியவில்லை. திரு: கதிர்காமர்: நான் இப்பொழுது கோபாலகிருஷ்ணனைச் சாட்சியமளிக்க அழைக்கிறேன்.

செல்லத்துரை கோபாலகிருஷ்ணன்: (உறுதிமொழியப் பட்டது) 23 வயதுடைய நான் அல்லைப்பிட்டி 3-ம் தெருவில் வசிக்கிறேன்.

திரு. கதிர்காமர்: வினா: 1977 ஆகஸ்ட் 16-ம் நாள் யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதியில் உள்ள கடையொன் றிற் பணிபுரிகின்ற நீங்கள் காலை 8-30 மணியளவில் வேலைக்காகச் சென்றுகொண்டிருந்தீர்களா? விடை: ஆம். வினா: கடைகளுக்குத் தீவைத்தும், சேதம் விளை வித்தும் பொலிசார் ஏற்படுத்திய குழப்பம் காரணமாகக் கடை பூட்டப்பட்டிருந்ததால் கஸ்தூரியார் வீதி வழியாக நடந்து வீடு திரும்பினீர்களா? விடை: ஆம். வினா: மக்கள் வேகமாக நடந்தமையால் நீங்களும் வேகமாக நடந்தீர்களா? விடை: ஆம். வினா: திடீரென உங்க ளுடைய வலது கை மணிக்கட்டைக் காயப்படுத்தி துப் பாக்கிச் சன்னம் பாய்ந்ததா? விடை: ஆம். வினா: மின் சார நிலைய வீதியிலிருந்து கஸ்தூரியார் வீதிக்குத் திரும் பும்போது இது நடைபெற்றதா? விடை: ஆம். வினா: கையில் எந்த இடத்திற் காயம் பட்டது? விடை: எனது கையைநீட்ட முடியாமல் இருக்கின்றது. (சாட்சி கையைக் காட்டுகிருர்) வினா: கையை விரிக்க முடியாதா? கையைப் பயன்படுத்த முடியாதா? விடை: முடியாது. வினா: ஐந்து, ஆறு பொலிசார் மக்களை நோக்கிச் சுட்டுக் கொண்டிருந்ததைக் கண்டீர்களா? அவ்வாறு சுடப்பட்ட சன்னங்களுள் ஒன்றுதான் உங்களைத் தாக்கியதா? விடை: ஆம். வினா: நீங்கள் கஸ்தூரியார் வீதி வழியாக ஓடினீர் களா? காயம் இருந்ததால் ஓட முடியாமற் போக உங்களை மருத்துவர் கங்காதரனின் மருந்தகத்திற்கு உங்கள் நண்பர்கள் எடுத்துச் சென்றுர்களா? அரசினர் மருத்துவமனைக்குச் செல்லுமாறு மருத்துவர் ஆலோசனை

கூறினாரா? மருத்துவரின் ஜீப்வண்டியில் மருத்துவமனை சென்று அங்கு நாற்பது நாட்கள் இருந்தீர்களா? அங்கு பொலிசார் உங்கள் அறிக்கையைப் பதிவு செய்தார்களா? விடை: ஆம். வினா: மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற பின்பும் வலது கை பயன்படுத்த முடியாமல் உள்ளதா? விடை: ஆம். வினா: உங்கள் வீட்டில் நீங்கள் ஒருவர் தானே உழைப்பாளி. விடை: ஆம். வினா: திருமண மாகிவிட்டதா? விடை: இல்லை. எனது குடும்பத்தில் 58 வயதுடைய தந்தையார், 52 வயதுடைய தாயார் தங்கையர் இருவர் உளர். தந்தையார் வேலை எதுவும் செய்வதில்லை. (சட்டத்தரணிகள் கேள்விகள் கேட்கவில்லை.)

நாகலிங்கம் தியாகராசா: (உறுதி மொழியப்பட்டது)
44 வயது. இ. போ. ச. கோண்டாவில் பணிமனையின் சுப்பிறின்டன்ட்.

திரு. கதிர்காமரினால் விளங்கப்படுகின்றார். திரு. தியாகராசா: என்னிடமுள்ள அறிக்கையை X 17 எனக் குறியிடுகின்றேன். இ. போ. ச. பணிமனையிற் சுப்பிறின்டனாகப் பணிபுரியும் நான் 1-1-1958 தொடக்கம் இ. போ. ச. வில் பணிபுரிகின்றேன். மட்டக்களப்பு, கொழும்பு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிற் பணி புரிந்துள்ளேன். எனது அறிக்கை என்னிடம் உள்ளது.

வினா: உங்களுடைய அறிக்கையை வாசிக்கின்றீர்களா? விடை: ஆம். நான் 1977 ஆகஸ்ட்டில் கோண்டாவில் இ. போ. ச. பணிமனை சுப்பிரிண்டனாக இருந்தேன். 1977 ஆகஸ்ட் 16-ம் நாள் காலை 9 மணியளவில் பணிமனையிலிருந்து காரிற் திரும்பிக் கொண்டிருந்தபொழுது பேருந்துகள் பல பணிமனையை நோக்கிச் செல்வதைக் கண்டேன். அவற்றுள் ஒன்றை நிறுத்திக் கேட்டபொழுது யாழ் நகரில் பொதுமக்கள்

பொலிசாராற் தாக்கப்படுவதாற் குழப்பம் உண்டென்றும், அதனால் அங்கு பணி புரிவதற்கு அஞ்சுவதாகவும், எனவே பணி மனைக்குப் பேருந்துகளைக் கொண்டு செல்வதாகவும் ஊழியர் கூறினர்.

இதைக் கேள்விப்பட்டதும் பலாலி வீதி, ஆஸ்பத்திரி வீதி வழியாக மக்கள் பலர் ஓடுவதைக் கண்டேன். பொலிசார் அவர்களைக் கலைத்துக்கொண்டிருந்தார்கள். யாழ்ப்பாணப் பேருந்து நிலையத்திற்குள் எவரும் இருக்கவில்லை. பேருந்துகளும் இல்லை. பொதுமக்கள் பொலிசாராற் தாக்கப்படுகின்றனர். வாகனங்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளன. எனவே பேருந்துநிலையம் வெறிச்சோடிக் கிடக்கின்றது. என அங்குள்ள இ. போ. ச. ஊழியர் ஒருவர் என்னிடம் கூறினர்.

தொலைபேசி மூலம் கோண்டாவிற் பணிமனைக்குப் பேசி அங்குள்ள நிலைமையை விசாரித்தேன். எழுபதுசதவிகிதமான பேருந்துகள் பணிமனைக்கு வந்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. பாடசாலைக்குச் சென்ற பிள்ளைகளை வீட்டிற்கு அனுப்பவேண்டும் எனவே ஓட்டுநரோ, நடத்துநரோ அங்கிருந்து அகலவேண்டாம் எனப் பணித்தேன். பின்னர் யாழ்ப்பாணத்திலுள்ள பாடசாலைகள் ஒவ்வொன்றிற்கும் சென்றேன். அதிபர்களைச் சந்தித்தேன். பேருந்துகள் அனுப்பும் வரை பிள்ளைகளை வெளியே அனுப்பவேண்டாமெனக் கூறினேன். அவர்கள் ஒப்பினர்கள். கோண்டாவில் பணிமனைக்குச் சென்று ஊழியர்களுடன் பேசினேன். ஊழியர்கள் பணிபுரிய மறுத்தனர். அஞ்சினர். பொலிசார் மக்களைத் தாக்குவது பற்றிக் குறிப்பிட்டனர். பாடசாலை மாணவர்களை அனுப்புவதற்கு மாத்திரம் சில பேருந்துகளை எடுத்துச்செல்லுமாறு நான் பரிந்து கேட்டதற்கமைய இருபது பேருந்துகள் பல்வேறு பாடசாலைகட்கும் அனுப்பப்பட்டன. மாணவர்கள் வீடு சேர்ந்தனர்.

ஆகஸ்ட் 16-ம் நாட் காலை பேருந்து ஒன்று உரும்பிராயில் வைத்துக் கடத்தப்பட்டதாகச் செய்தியறிந்த நான் பொலிசாருடன் தொடர்பு கொள்ள முயன்றேன். பொலிஸ் நிலையத்திலிருந்து தொலைபேசிக்குப் பதில் கிடைக்கவில்லை. அரசாங்க அதிபரிடமிருந்தும் தொலைபேசிக்குப் பதில் கிடைக்கவில்லை. பணிமனையில் இந்த நிகழ்வுபற்றிக் குறிப்பு எழுதினேன். அன்று காலை தொடக்கம் யாழ். மருத்துவமனையில் புகலிடம் தேடிய நூற்றுக்கணக்கான மக்களுக்குப் போக்குவரத்து ஒழுங்கு செய்யுமாறு யாழ்ப்பாணப் பா. உ. வும், அரசாங்க அதிபரும் என்னிடம் கேட்டனர். பேருந்து ஊழியர்களுடன் கதைத்துப் பணிபுரியுமாறு வலியுறுத்திப் பத்துப் பேருந்துகளை ஒன்றுக்குப் பின் ஒன்ருக வரிசையாக மருத்துவமனைக்கு அனுப்பிவிட்டுக் காரில் நான் தொடர்ந்து சென்றேன். விக்டோரியாத் தெருச் சந்திக்குச் சென்றதும் மக்கள் பலர் தமது சயிக்கிள்களை அங்கேயே விட்டு விட்டு ஓடுவதைக் கண்டேன். பொலிசார் மக்களைத் தாக்கியதால் மக்கள் ஓடுவதாகப் பேருந்து ஓட்டுநர்களுள் ஒருவர் என்னிடம் தெரிவித்தார். தெருஓரமிருந்த சயிக்கிள்கள் மீது பேருந்துவை ஓட்ட மறுத்ததற்காக எமது ஓட்டுநர் ஒருவரும் தாக்கப்பட்டார் என அறிந்தேன். பொலிசாரின் கட்டளைக்கமைய எமது ஓட்டுநர்களுள் ஒருவர் சயிக்கிள்கள் மீது பேருந்துவை ஓட்டிஞராம். இதனுற் சேதமடைந்த சயிக்கிள்களையும் கண்டேன். பணிமனைக்குத் திரும்பிச் செல்லுமாறு பேருந்து ஓட்டுநர்கள் அனைவரையும் பணித்தேன். பதினைந்து நிமிடங்களுக்குள் அவை பணிமனைக்கு மீண்டன. ஆகஸ்ட் 17-ம் நாட்காலை அநுராதபுரத்திலிருந்து புகைவண்டி மூலம் அகதிகள் வருவதாகவும், போக்குவரத்து ஒழுங்குகளைச் செய்யுமாறும் யாழ்ப்பாணப் பா. உ. வும், அரசாங்க அதிபரும் எனக்கு அறிவித்தனர். காலை 9 மணிக்குப் புகைவண்டி யாழ்ப்பாணத்திற்கு வருமென்று எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. பேருந்துகள் பத்தினை ஒழுங்கு

செய்து அவற்றை அழைத்துக் கொண்டு யாழ்: புகையிரத நிலையத்திற்குச் சென்றேன். பதட்ட நிலையில் அங்கு மக்கள் நின்றுகொண்டிருந்தனர். காயமடைந்த அகதிகள் புகைவண்டியில் வருவதாக இருந்தமையாற் பதட்ட நிலை மக்களிடையே ஏற்பட்டிருந்தது. அகதிகளை யாழ்ப்பாணப் புகையிரத நிலையத்திலிருந்து பேருந்துகளில் ஏற்றிச்செல்வது ஏற்றதல்ல என்றும், நாவற்குழியில் வைத்து ஏற்றிச் செல்வதே ஏற்ற தென்றும், யாழ்ப்பாணப் பா. உ. விடம் கருத்துத் தெரிவித்தேன். எனது கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டது. பேருந்துகளை நாவற்குழிக்குக் கொண்டு சென்றேன். நாங்கள் போன போது புகைவண்டி வந்திருந்தது. அகதிகளைப் பேருந்துகளில் ஏற்றிப் பல்வேறு பாதைகள் ஊடாக அனுப்பினோம். நான் பணிமனைக்குத் திரும்பினேன். யாழ்ப்பாணக் கச்சேரியில் நடைபெறும் மாநாட்டிற்கு வருமாறு எனது உதவிக் கட்டுப்பாட்டாளர் கேட்டுக்கொண்டார். நானும் எனது உதவிக் கட்டுப்பாட்டாளரும் மாநாட்டிற் கலந்து கொண்டோம். அங்கு பல அலுவலாளர்கள் இருந்தனர். மாநாட்டில் எடுத்துநோக்கப்பட்ட விடயங்களிற் போக்குவரத்தும் ஒன்று. பேருந்துகள் ஏன் ஓடவில்லை என என்னிடம் கேட்கப்பட்டது. பேருந்து நடத்துனர் ஒருவர் பொலிசாராற் தாக்கப்பட்டு ஏரிக்குள் எறியப்பட்டதால், பேருந்துகளை ஓட்டிச் செல்ல ஊழியர்கள் அஞ்சுகின்றார்கள் என்றேன்; நிலைமை மாமூலாகும் வரை ஊழியர்கள் பணிபுரிய மறுக்கின்றார்கள் என்றேன். டி. ஐ. ஜீ. திரு. அன செனிவிரத்தின மாநாட்டில் இருந்தார். பல்கலைக்கழக வளாக மாணவர்களுக்குப் போக்குவரத்து ஒழுங்கு செய்யுமாறு என்னைக் கேட்டார். ஓட்டுநர்களும், நடத்துநர்களும் பேருந்துகளைக் கொண்டு செல்ல அஞ்சுகிறார்கள். யாழ்ப்பாணப் பொலிசாருக்கு அஞ்சுகிறார்கள். எனவே பணிபுரிய விரும்புகின்றார்களில்லை என்றேன். செல்லச் சன்னதி கோவில் திருவிழாவை ஒட்டிப் பருத்தித்துறைப் பணிமனையின் பயன்பாட்டிற்கெனப் பத்துப் பேருந்துகள்

கொழும்புப் பணிமனைகளில் இருந்து அனுப்பப்பட்டன. இந்தப் பத்துப் பேருந்துகளையும் பல்கலைக்கழக வளாக மாணவர்கட்காகப் பயன்படுத்தலாம் எனக் கருத்துத் தெரிவித்தேன். இதை அவர்கள் ஏற்றுக் கொண்டனர். பருத்தித்துறைப் பணிமனைக்குத் தொலைபேசியில் விபரம் கூற அரசாங்க அதிபரின் மேசைக்குச் சென்றேன்.

சாதாரணத் தொலைபேசிகள் வேலைசெய்யவில்லை. மூல அழைப்புகள் மூலம் தொடர்பு கொண்டேன். பருத்தித்துறைப் பணிமனையுடன் தொடர்பு கொண்டேன். நான் பேசிக்கொண்டிருக்கும்பொழுது, திரு. அனு செனிவிரத்தின அவர்களும் மேசைக்கு அண்மையில் வந்தார். என்னுடன் கதைத்தார். "ஒரு சிங்கள மாணவருக்கு இங்கு ஊறு விளைவிக்கப்பட்டால், தெற்கில் உள்ள தமிழ் மக்கள் தொகை அத்தனையும் கொல்லப்படுவர்" என என்னிடம் திரு. அனு செனிவிரத்தின கூறினார். "உமது ஓட்டுநர்களும், நடத்துநர்களும் பேருந்துகளை ஓட்ட மறுத்தால், இராணுவப் படையில் இருந்து ஓட்டுநர்களைக் கொண்டுவந்து உமது பேருந்துகளை ஓட்டுவிப்பேன்" என்றார். இ. போ. ச. வின் யாழ்ப்பாணத்துச் சொத்துக்கள் அனைத்தின் பாதுகாவலனாக நான் உள்ளமை, எனது மேலதிகாரிகளிடம் மட்டுமே நான் பணிப்புரைகளைப் பெறுகின்றமை என்பன பற்றிக் கூறிய நான், பேருந்துகளைக் கையளிப்பதாயின், இ. போ. ச. தலைவரிடம் கட்டளை பெறவேண்டும் என்றேன்.

கச்சேரியில் நடைபெற்ற மாநாட்டில், மருத்துவத் துறைத் தலைவர், சுங்கத்துணைக்கலெக்டர் ஆகியோர் டி. ஐ. ஜீ. யிடமும் ஏனைய உயர்தரப் பொலிஸ் அதிகாரிகளிடமும் முறையிட்டனர். பொலிசாரின் பிழையான நடத்தை பற்றி முறையிட்டனர். பருத்தித் துறைப் பணிமனைக்கு நான் தொலைபேசியில் கதைத்துக் கொண்டிருந்த பொழுது, டி. ஐ. ஜீ. திரு. அனு

செனிவிரத்தின, யாழப்பாணப் பொலிஸ் நிலையத்துடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டார். ஏ. எஸ். பி. திரு. நூர்தீனைக் கேட்டார். ஏ. எஸ். பி. நூர்தீனுடன் கதைத்தாரோ? அல்லது வேறு யாருடன் கதைத்தாரோ தெரியவில்லை. எனினும் அவர் கூறியவற்றைக் கேட்டுக் கொண்டிருந்தேன். ''அடிப்பதைச்சிறிதே நிறுத்துங்கள், பல்கலைக்கழக மாணவர்கட்கு நான் போக்குவரத்து ஒழுங்கு செய்யவேண்டும்'' என அவர் தொலைபேசியில் கூறினர். மாநாடு முடிந்தபின் கச்சேரியில் இருந்து பணிமனைக்குச் சென்றேன்.

நான் பணிமனைக்குத் திரும்பியதும் எனது உதவியாளர் செய்தி ஒன்றைக் கூறினர். குறிகாட்டுவானில் இருந்து வந்துகொண்டிருந்த பேருந்து ஒன்று, நாகவிகாரைக்கு முன்பாக வைத்துப் பொலிசாரால் கடத்தப்பட்டுக் கன்னதிட்டிக்குக் கொண்டு செல்லப்பட்டு, அங்குள்ள இரு நகைக்கடைகளைக் கொள்ளையடிக்கப்பட்டதாகக் கூறினர். பேருந்துவின் எண். 23ஸ்ரீ2227. உடன் யாழ். பொலிஸ் நிலையத்துடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டேன். பதில் இல்லை. அரசாங்க அதிபரின் தொலைபேசியிலும் பதில் இல்லை. டி. ஐ. ஜீ. யுடன் தொடர்பு கொள்ள முயன்றேன் முடியவில்லை. வளாக மாணவர்களைப் பேருந்துகளில் அனுப்புவதில் ஈடுபட்டிருந்த காங்கேயன்துறை ஏ. எஸ். பி. திரு. சில்வாவை எனக்குத் தெரியும். அவர் வளாகத்திலிருந்தார். தொடர்பு கொண்டேன். இத்தகைய செய்தி வந்துள்ளது என அவரிடம் கூறினேன். இத்தகைய வதந்தி தனக்கு வந்து, தான் விசாரித்து உண்மையில்லை எனக் கண்டதாகவும், பொலிசார் பேருந்தைக் கடத்தவேண்டிய தேவை இல்லை எனவும் கூறினர். நான் பதிவேட்டில் எழுதினேன். இ. போ. ச. செயலகத் தலைமை முகாமையாளருக்குக் கடுகதியில் அனுப்ப அறிக்கை எழுதினேன்.

இதற்கிடையில் குறிகாட்டுவானில் இருந்து வந்த பேருந்து, பணிமனைக்கு வந்தது. ஓட்டுநர், நடத்துநர், காவலர் திரு. பரமேஸ்வரன் ஆகியோர் இருந்தனர். நடந்ததை அவர்கள் என்னிடம் கூறினார்கள். குறி காட்டுவானில் இருந்து மீளும்போது, சீருடை அணிந்த பொலிசார் பேருந்துவை மறித்து, அதில் ஏறிக் கன்னு திட்டிக்குச் செல்லுமாறு ஓட்டுநரைப் பணித்து, அங்கு சென்று, இரு நகைக்கடைகளைக் கொள்ளையடித்தனர். அவர்களின் வாய்மூலங்களைப் பதிவுசெய்தேன். அன்று மாலை, மாண்புமிகு கலாச்சார அமைச்சரும், பாது காப்பு வெளிவிவகாரப் பிரதி அமைச்சரும் இ. போ. ச. பணிமனைக்கு வந்து, என்னைத் தேடிவிட்டுப் போனதா கக் கேள்விப்பட்டேன். அவ்வமயம் நான் வீடு சென் றிருந்தேன். நான் பணிமனைக்கு மீண்டதும், யாழ்ப்பாணப் பா. உ. இடம் இருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. அமைச்சர்கள் வந்துள்ளனர். பேருந்துக் கடத்தல் பற்றி அவர்களிடம் கூறவேண்டும். கச்சேரிக்கு வருக என அவர் கூறினார். அரசாங்க அதிபரையோ, டி. ஐ. ஜீ. யையோ, எஸ். பி. யையோ தொடர்புகொள்ள முடியாத நிலையில் நான் யாழ்ப்பாணப் பா. உ. வுக்குத் தொலைபேசியில் விபரம் கூறி உயர் அதிகாரிகளுடன் கதைக்குமாறு முன்னர் கேட்டிருந்தேன். எனவே அவர் என்னை அழைத்தார். கச்சேரிக்குச் சென்றேன். அந்தப்பேருந் தின் ஓட்டுநர், நடத்துநர், காவலர் என்பவர்கள் என்னுடன் வந்தனர். மாண்புமிகு அமைச்சர், பிரதிப் பாதுகாப்பு அமைச்சர், டி. ஐ. ஜீ., எஸ். பி., அர சாங்க அதிபர், அங்கிருந்த பல பா. உ. க்கள் முன்னிலை யில் பேருந்து கடத்தப்பட்டமை குறித்துக் கூறினேன். ஓட்டுநர், நடத்துநர், பாதுகாவலர் ஆகியோரையும் அறிமுகம் செய்தேன். ஓட்டுநருக்குத் தமிழிலும், சிங் களத்திலும் மட்டுமே பேசத் தெரியும். எனவே அமைச் சருக்கு விளங்கக் கூடியதாகச் சிங்களத்தில் முழு நிகழ் வையும் விபரித்தார். பின்னர் இ. போ. ச. செயலகத் தலைமை முகாமையாளருக்கு அறிக்கையை அனுப் பினேன்.

ஆகஸ்ட் 17-ம் நாள் பணிமனையில் இருந்தபொழுது கோண்டாவில் பணிமனையின் இரும்பு ஓட்டுபவரான திரு. கே. பாலசுப்பிரமணியமும், ஓட்டுநரான திரு. ஆர். கந்தையாவும் பொலிசாரால் தாக்கப்பட்டனர். விபரம் எனக்குத் தெரிவிக்கப்பட்டதும் அவர்களைக் கச்சேரிக்கு அழைத்துச் சென்றேன். அவர்களின் வாய் முறைப்பாடு பதியப்பட்டது.

திரு. கதிர்காமர்: வினு: கே. பாலசுப்பிரமணியம், ஆர். கந்தையா இருவரையும் தெரியுமா? விடை: ஆம். வினு: அவர்கள் தாக்கப்பட்டார்களா? அறிவித்தார்களா? யாருக்கு? எந்நாளில்? விடை: ஆம். எனக்கு ஆகஸ்ட் 18-ம் நாள். வினு: அவர்களின் வாய்மூலம் பதியப்பட்டதா? விடை: ஆம். ஏ. எஸ். பி. திரு. ஜயசூரியாவினல் யாழ். கச்சேரியில் பதியப்பட்டது. வினு: ஏன் யாழ். கச்சேரியில் பதியப்பட்டது. விடை: மக்கள் பொலிஸ் நிலையம் செல்ல அஞ்சினர். எனவே இணைப்பு அதிகாரி சிறப்பு ஏற்பாடுகள் செய்திருந்தார். வினு: சிலைகள் உடைக்கப்பட்டதுபற்றி அறிந்தீர்களா? எங்கே அச்சிலைகள் இருந்தன? யார் உங்கட்கு அறிவித்தவர்? விடை: ஆம். யாழ். பேருந்து நிலையம் முன் இருந்த சிலைகள் உடைக்கப்பட்டதாகப் பேருந்து நிலையத்துக்கு எதிரில் இருந்த பாதுகாவலர் என்னிடம் அறிவித்தனர். வினு: யார் சேதம் விளைவித்தனர்? விடை: இராணுவப் படையும் பொலிசாரும் செய்தனர். வினு: உமக்கு அறிவிக்கப்பட்டதா? விடை: ஆம். உடனடியாகத் தொலைபேசிமூலம் அறிவிக்கப்பட்டது. வினு: நீர் என்ன நடவடிக்கை எடுத்தீர்? விடை: இது எனக்குட்பட்ட விஷயமல்ல எனவே திரு. கதிரவேற்பிள்ளைக்கு அறிவித்தேன். வினு: காவலர் பெயர் என்ன? விடை: ஒருவர் நாகராஜா மற்றவர் குணரத்தினம்.

திரு. ஜி. பி. எஸ், டி. சில்வா:

வினு: X17 எனக் குறியிட்ட உங்கள் அறிக்கையில் முக்கியமானவற்றைக் குறிப்பிட்டிருப்பீர்கள் அல்லவா?

விடை : ஆம். வினா: உங்களது சாட்சியத்தின் பொழுது டி. ஐ. ஜி. திரு. அன செனிவிரத்தின சொன்னதாக இரு விடயங்களைக் கூறினீர்கள். ''சிங்கள மாணவர் ஒருவருக்கு ஊறு விளைவிக்கப்பட்டால் தென் இலங்கையில் உள்ள தமிழ் மக்கள் தொகை அத்தனையும் கொலை செய்யப்பட்டு விடும்'' என்பது ஒன்று. மற்றது பொலிசாரைத் தொலைபேசியில் அழைத்து, ''அடிப்பதை சிறிதே நிறுத்துங்கள்'' என்பது இவை இரண்டும் முக்கியமானவையல்லவா? இவற்றை உங்கள் அறிக்கை × 17-ல் குறிப்பிட்டுள்ளீர்களா? விடை : (சாட்சி தனது அறிக்கை × 17-ப் பார்க்கிறார்) நான் அவ்விடயங்கள் முக்கியமானவை எனக் கருதுகிறேன். ஆனால் அதை அறிக்கையில் உள்ளடக்கவில்லை.

திரு. கதிர்காமர் :

வினா: உங்களால் தயாரிக்கப்பட்டுக் கையெழுத்திட்ட அறிக்கையை ஆணைக்குழுவிடம் கொடுத்தீர்கள். எப்பொழுது இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டது? விடை : நேற்று வினா: இதற்கு முன்போ, பின்போ அறிக்கை தயாரிக்கப்பட்டதா? விடை : இல்லை.

திரு. மணிவாசகம் அண்டர்வூட் :

முக்கியமான விடயம்பற்றி, அதாவது பேருந்து கடத்தப்பட்டமை, கொள்ளையடிக்கப்பட்டமை பற்றிச் சாட்சி கூறுகின்றார். பெப்ருவரி 13-ம் நாள் திங்களன்று விசாரிக்க விழைகிறேன்.

வேண்டுகோள் ஏற்கப்பட்டது. திங்கள் காலை ஆணைக்குழுமுன் வருமாறு சாட்சி கேட்கப்படுகிறார்.

(பி. ப. 1-45 மணி. ஆணைக்குழு ஒத்திவைக்கப்பட்டது. பெப். 13-ம் நாள் விசாரணை தொடரும்.)

க. குகனேந்திரன்
பூநாறி மரத்தடி
கொக்குவில்

# ஐந்தாம் நாள்

## 1978 பெப். 13 திங்கள் காலை 9-30 மணி

திரு: ஜி. பி. எஸ். சில்வா: விசாரணை தொடங்க முன் பெப். 10-ம் நாள் நிகழ்வுப் பதிவேட்டினைப் பார்க்க வேண்டுகிறேன். 96-ம் பக்கத்தில் நான் ஒரு திருத்தம் செய்ய விரும்புகிறேன். அதில் பின்வரும் வினு உள்ளது; கொள்ளையடித்தவர்களாகச் சந்தேகிக் கப்பட்ட சிலரைப் பொலிசார் கைதுசெய்ததுபற்றிக் கேள்விப்பட்டீர்களா? நான் கேட்டகேள்வி இதுதான்: தெருக்களில் உலாவித்திரிந்தவர்களாகக் கருதப்பட்ட வர்களைப் பொலிசார் கைதுசெய்தார்கள் என்பதைக் கேள்விப்பட்டீர்களா?

திரு: மணிவாசகம் அண்டர்வூட்: 1978 பெப். 8-ம் நாள் விசாரணையின் பொழுது, நிகழ்வுப் பதிவேட்டின் 28-ம், 29-ம் பக்கங்களில் (ஆவணி அமளி 27-ம் பக்கம்) பாதிக் கப்பட்ட தமிழ் ஊழியர் கழகத்தின் சார்பில் உங்கள் முன் தோன்றி' கழகத்தின் செய்தி இதழ்களைத் தந்து, பின்வருமாறு நான் கூறியது எழுதாமல் விடப்பட்டுள் ளது. நான் சொன்னேன் ''இக்கழகம் பல கூட்டங் களை நடாத்தியது. பல தீர்மானங்களை நிறைவேற்றி யது. இருசெய்தி இதழ்களை வெளியிட்டது. அதில் அதன் நோக்கங்கள் உள''. இந்த இரு செய்தி இதழ் களும் அப்பொழுது உங்கட்குத் தரப்பட்டன.

திரு. கதிர்காமர்: யாழ். மாநகராட்சி மன்றச் சிறப் பாணையாளர் திரு. கே. சிவஞானம் உள்ளார். இவர் உங்கள் முன் சாட்சியமளிக்க அழைக்கப்பட்டுள்ளார். உண்மையான விபரங்களை இவரிடம் பெறலாம். நாளை இவர் மருத்துவமனைக்குச் செல்கிறுர். பாரிய அறுவைச் சிகிச்சைக்காகச் செல்கிறுர். இன்று இவர் இங்கு வர ஆயத்தமாக உள்ளார். தொலைபேசிச் செய்தி அனுப் பினுல் இங்கு வருவார்.

ஆணையாளர்: வேறு சாட்சி இருப்பின் இப்பொழுது அழைக்கவும். திரு. சிவஞானத்தை அழைக்கவும் ஒழுங்கு செய்யவும்.

திரு. நாகலிங்கம் தியாகராசா: (மீண்டும் அழைக்கப் பட்டு உறுதிமொழியப்பட்டது.) இ. போ. ச. கோண்டா வில் பணிமனையின் சுப்பிறிண்டன்டன்.

திரு. மணிவாசகம் அண்டர்வூட்: வினு: ஆகஸ்ட் 16-ம் நாள் நிகழ்வுகளைக் கூறத் தொடங்கிய நீங்கள் 15-ம்நாள் நிகழ் வுகளையும் கூறினீர்கள். 15-ம்நாள் நிகழ்வுகள் இ. போ. ச. ஊழியர்கள் பற்றியவை. அன்றைய நிகழ்வுகளைப் பற்றிக் கூறுக. விடை: 1977 ஆகஸ்ட் 15-ம் நாள் அதி காலை 4-28 மணியளவில், பேருந்து நடத்துநர் யேசு தாசன் கடமைக்காகப் பேருந்து நிலையத்திற்குத் தன் வீட்டிலிருந்து வந்து கொண்டிருந்தார். முனியப்பர் கோவில் வீதியில் றீகல் தியேட்டருக்கு அண்மையில் பொலிசாரால் தாக்கப்பட்டு றீகல் தியேட்டருக்கு எதி ரில் உள்ள குளத்திற்குள் வீசப்பட்டார். வினு: பணிமனை யின் சுப்பிரிண்டனுக உள்ள நீங்கள், ஓராயிரம் ஊழி யர்களுக்குப் பொறுப்பாக உள்ளீர்களா? யாழ். குடா நாடு முழுவதற்கும் பொறுப்பாக உள்ளீர்கள். இந் நிகழ்வு நடந்ததும் என்ன நடவடிக்கை எடுத்தீர்கள் விடை: ஆம். ஏறத்தாழ ஓராயிரம் ஊழியருக்குப் பொறுப்பாக உள்ளேன். தாக்குதல் பற்றிக் காலை 6-30 மணியளவில் வீட்டில் இருக்கையில் செய்தி கிடைத் ததும் யாழ். மருத்துவமனைக்கு உடன் சென்றேன். நடத்துநர் யேசுதாசன் படுக்கையிலிருந்தார். அவருடன் கதைத்தேன். என்ன நடந்தது எனச் சொன்ஞர். மருத்துவமனையில் அவரைத்தவிர வேறும் இருவர் படுத் திருந்தனர். 1977 ஆகஸ்ட் 15-ம் நாள் பொலிசாரால் அவர்கள் இருவரும் தாக்கப்பட்டிருந்தனர். வினு: அவர் களுடன் கதைத்தீர்களா? விடை: கதைத்தேன். றீகல் தியேட்டருக்குமுன் சைக்கிளில் செல்கையில் பொலிசா ரால் தாக்கப்பட்டதாகத் தெரிவித்தார். அவரின் பெயர்

தெரியவில்லை: வினா: மருத்துவமனை சென்றமைதவிர வேறென்ன செய்தீர்கள்? விடை: பொலிஸ் நிலையம் சென்றேன். தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டரைச் சந்தித்தேன். தாக்குதல்பற்றிக் கூறினேன். பேருந்து ஊழியரிடை பதட்டநிலை இருப்பதாகக் கூறினேன். உடனடி நடவடிக்கை எடுக்கக் கோரினேன். வினா: வேறு என்ன அலுவலக நடவடிக்கை எடுத்தீர்கள்? விடை: செயலகத் தலைமை முகாமையாளருடன் தொலைபேசியில் கதைத்தேன். ஐ. ஜீ. பி. யுடன் பேசி ஆவன செய்யச் சொன்னேன். பின்னர் அவருக்குச் சிறப்பான கடுகதிக் கடிதம் அனுப்பினேன். அதன் படிகளை இ. போ. ச. தலைவருக்கும், ஏனையோருக்கும் அனுப்பினேன். யாழ்; பொலிஸ் நிலையத் தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டருக்குப் தனியான ஒரு கடிதம் அனுப்பினேன். வினா: இக் கடிதங்களின் படிகள் உங்கள் அலுவலகத்தில் உண்டா? விடை: சிறப்பு அறிக்கைகள் கோவை உண்டு. வினா: அதெங்கே? விடை: கொணர்ந்துள்ளேன். வினா: கொழும்பில் உள்ள செயலகத் தலைமை முகாமையாளருக்கு அனுப்பிய கடுகதி அறிக்கையின் படி உண்டா? அதை ஆணைக்குழுவுக்குத் தந்து X 18 எனக் குறியிடுக. விடை: எப். ஜே. ஏ. 17 என்ற தொடர்பு எண் உள்ள 1978-8-15-ம் நாளிட்ட கடிதமது. வினா: அக்கடிதத்தை வாசிக்கவும்.

விடை: (X 18 எனக்குறியிடப்பட்ட கடிதத்தைச் சாட்சி வாசிக்கின்றார்.) கடமை காரணமாகக் கடிதங்களின் படிகளை வைத்திருப்பதுண்டு. தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டருக்குக் கடிதம் அனுப்பினேன். திரு. அண்டர்வூட்: முதல் கடிதத்தை X 18 எனவும், அடுத்த கடிதத்தை X 19 எனவும் குறியிடுகின்றேன். வினா: தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டருக்குப் 15-8-77 அன்று அனுப்பிய கடிதத்தின் படியை X 19 எனக் குறியிடுகின்றீரா? விடை: ஆம். "முனியப்பர் கோவிலடியில் 15-8-77 அன்று நடத்துநர் யேசுதாசனுக்கு ஏற்

பட்ட தாக்குதல்'' எனக் கடிதம் தொடங்குகின்றது. ''கடமைக்கு வரும்பொழுது மேற்கூறியவரை யாரோ பொல்லால் அடித்தார்கள் என அவர் இன்று எனக்கு அறிவித்தார். நீங்கள் என்ன நடவடிக்கை எடுத்தீர்கள் என எனக்குத் தெரிவித்தால், பணிமனைச் செயலக முகாமையாளருக்கு நான் விரிவான அறிக்கை அனுப்பலாம்''. வினு: மருத்துவமனைக்குப் பத்துப் பேருந்துகளை அனுப்புமாறு அரசாங்க அதிபர் கேட்டிருந்தார்: அவை அனுப்பப்பட்டன எனக் கூறினர். இப்பேருந்துகள் அனுப்பப்பட்டபொழுது எங்கிருந்தீர்? விடை: பணிமனையில் இருந்தேன். பத்துப்பதினைந்து நிமிடங்களின் பின் நானும் பேருந்துகளைத் தொடர்ந்து சென்றேன். விக்டோரியாத்தெருச் சந்திக்கு வந்ததும், அப்பேருந்துகள் அனைத்தும் நின்றிருந்தன. வேம்படி மகளிர் கல்லூரிப் பக்கம் நோக்கி நின்றுகொண்டிருந்தன. யாழ். பா. உ. திரு. யோகேஸ்வரன் வீட்டுக்கு முன் தெருவில் நின்றிருந்தன. நான் விசாரித்தபொழுது, பொலிசார் தம்மை மறித்ததாகவும், மக்களைக் கலைத்ததாகவும் காரணம் தெரியாது எனவும் ஓட்டுநர் ஒருவர் கூறினார். விழுந்திருந்த சைக்கிள்கள் மேல் பேருந்துகளை ஏற்றி ஓட்ட மறுத்தமைக்காகப் பொலிசார் தன்னை அடித்ததாகப் பிறிதொரு ஓட்டுநர் கூறினார். 23ஸ்ரீ4615 பேருந்தினை ஓட்டிய திரு. செல்வராஜா முறையிட்டார். 23ஸ்ரீ4598 எண்ணுடைய பேருந்தினை ஓட்டிய நாகமணியும் முறைப்பட்டார். பொலிசாரின் கட்டளைக்கமையத் தான்பேருந்தினைச் சைக்கிள்கள்மேல் ஓட்டியதாகக் கூறிய அவர், சேதமடைந்த சைக்கிள்களைக் காட்டினார். சேதமடைந்த சைக்கிள்கள் தெருவின் நடுவே கிடந்தன. பேருந்து அதன்மேல் ஓட்டப்பட்டிருந்தது. நான் அரசாங்க அதிபர், டி. ஐ. ஜீ., எஸ். பி. ஆகியோருக்கும் பிறருக்கும் இதுபற்றிப் 17-ம் நாள் நடைபெற்ற மாநாட்டில் அறிவித்தேன். 18-ம் நாளன்று ஏ. எஸ். பி. திரு. ஜயசூரியா இவர்களின் அறிக்கையைப் பதிவுசெய்தார்.

வினா : 17-ம் நாள் பேருந்துகளை எங்காவது அனுப்பினீர்களா? விடை: ஆம். யாழ். புகைவண்டி நிலையத்துக்குப் பத்துப்பேருந்துகளை அரசாங்க அதிபரின் கட்டளைக்கமைய அனுப்பினேன். அநுராதபுரத்தில் இருந்து வருகின்ற, முதல்நாளிரவு அநுராதபுரத்தில் அகதிகளாக்கப்பட்டவர்களுக்கே இந்தப் பேருந்துகள் வேண்டி இருந்தன. யாழ். புகைவண்டி நிலையத்தில் கூட்டமாக நின்ற மக்கள் பதட்டமாக இருந்தனர். எனவே நாவற்குழி புகைவண்டி நிலையத்திலிருந்து அகதிகளை அவரவர் இடத்திற்கு அனுப்பலாம் என யாழ். பா. உ. திரு. யோகேஸ்வரனிடம் கூறி, அங்கு பேருந்துகளைக் கொண்டு சென்றேன்.

வினா : பேருந்து அனுப்பமுன் மேற்கொள்ளும் நடைமுறைகள் என்ன? விடை : பதிவேட்டில், பேருந்தின் எண், நடத்துநர், ஓட்டுநர் ஆகியோரின் பெயர்கள் எழுதப்பட்டபின் விட்டுச் செல்லும் நேரத்தை ஓட்டுநர் குறிப்பார். வினா : பத்துப்பேருந்துகளுக்கும் உரிய பதிவு ஏடு உண்டல்லவா? யார் பதிந்தது? பதிவைத்தவிர வேறு என்ன அங்கு உண்டு? விடை : ஆம். ஓட்டுநர் பதிந்தது. பதிவைத்தவிர வழிச்சிட்டையும், பொதுச்சிட்டையும் உண்டு. வழிச்சிட்டையில் விற்கப்படும் பயணச் சீட்டு விபரங்கள் குறிக்கப்படுகின்றன. வருவாயும் குறிக்கப்படுகின்றது. வினா: கடத்தப்பட்ட பேருந்தும் ஒன்று? அப்பேருந்தின் பதிவு ஏடும் உண்டா? விடை : ஆம். 23ஸ்ரீ2227 எண்ணுடைய அப்பேருந்தின் பதிவேடு இது தான். வினா: இந்தப் பேருந்து அதே ஓட்டுநர், நடத்துநருடன் அகதிகளைக் கொண்டு சென்றது. ஒவ்வொரு பேருந்துவிற்கும் போகுமிடம் கொடுக்கப்பட்டது. இந்தப்பேருந்து குறிகாட்டுவானுக்கு அனுப்பப்பட்டது. அங்கு சென்றது. அதற்கான பதிவு உண்டு. (கடத்தப்பட்ட பேருந்துவின் பதிவேடு X 20 எனக்குறியிடப்படுகின்றது ) குறிகாட்டுவானில் அகதிகளை விட்டபின் பணிமனைக்குத் திரும்பவேண்டும்; எனினும் உரியநேரத்தில்

பணிமனைக்கு வரவில்லை. நாகவிகாரைக்கு முன்வைத்துப் பொலிசாரால் கடத்தப்பட்டுக் கன்னுதிட்டிக்குக்கொண்டு செல்லப்பட்டு நகைக்கடை கொள்ளையடிக்கப்பட்டபின் நாகவிகாரைக்கு வந்தபின் பணிமனைக்கு வந்தது. பதிவேட்டில் இக்குறிப்புகள் ஓட்டுநரால் எழுதப்பட்டன. விபரங்கள் பின்வருமாறு—விட்டுச் செல்லும் நேரம் 8–30 மணி. ஓட்டுநர்: ஜி. ஜேம்ஸ். நடத்துநர்: பீ. எஸ். செல்வராஜா. 8–30 மணிக்குப் பணிமனையை விட்டுச் சென்றது. யாழ். புகைவண்டி நிலையத்தை 8–50 க்குச் சென்றடைந்தது. 9-00 க்கு அங்கிருந்து நீங்கிப் 10-40க்கு நாவற்குழியைச் சென்றடைந்து 10-50 க்கு அங்கிருந்து நீங்கி, 11–35க்குக் குறிகாட்டுவானுக்குச் சென்றடைந்தது. 11–40க்குக் குறிகாட்டுவானை விட்டு நீங்கிப் 14–15க்குப் பணிமனைக்கு வந்தது.

(இந்நிகழ்வு பற்றித் திரு. அமிர்தலிங்கம் ஏற்கனவே கூறியதையும் சட்டத்தரணி குறிப்பிடுகின்றார்.)

வினு: ஓட்டுநர் வேறு ஏதாவது குறிப்புகள் எழுதினரா?
விடை: பிந்தியமைக்குரிய காரணங்கள் எழுதப்பட்டுள்ளன. முந்திய குறிப்புகள் ஆங்கிலத்திலும், தமிழிலும் உள்ளன. இந்தக்குறிப்புத் தமிழில் உள்ளது. எண்கள் ஆங்கிலத்தில், எழுத்துத்தமிழில் உள்ளது. “13-15 மணித்தியாலத்தில் ஆரியகுளத்தடியில் பொலிசார் சிலர் எனது பேருந்தில்ஏறினர். கன்னுதிட்டிக்குக்கொண்டுசென்றனர். நகைக்கடையைக் கொள்ளையடித்தனர். நாகவிகாரைக்குக் கொணர்ந்தனர். பின்னர் நான் விடப்பட்டேன். ஒப்பம் ஓட்டுநர் ஜேம்ஸ்’’ (வழிச்சிட்டை X 21 எனக் குறியிடப்பட்டுள்ளது.) 23ஸ்ரீ 2227 தொடர்பான பதிவு ஏடு என்னிடம் உண்டு. நாவற்குழியில் இருந்து குறிகாட்டுவானுக்கு 78 பயணிகள் கொண்டு சென்றமை. பயணச் சீட்டு வழங்கியமை, பண வருவாய் என்பன எழுதப்பட்டுள்ளது. அகதிகள் பயணக் கட்டணம் தந்தனர்; வேறு கட்டளை இல்லாமையால் பயணக்கட்டணம்

பெற்ரேம். அநுராதபுரத்தில், தம் உடைமைகளை இழந்துவந்த இவர்களிடம் இப்பேருந்துவில் ரூ 71/30 சேர்க்கப்பட்டது. பத்துப் பேருந்துகளிலுமாக ரூ. 600/ அளவில் சேர்ந்தது. 17-ம் நாளுக்குப் பின் அகதிகளிடம் பயணக் கட்டணம் அறவிடவில்லை. அரசாங்க அதிபர் இதற்கான கட்டளையை வழங்கினுர். வினு: பின்பு அகதிகளை எங்கிருந்து எங்கு கொண்டு சென்றீர்கள்? விடை: நாகவிகாரையில் இருந்து 400—500 அகதிகளைப் 18-ம் நாள் அநுராதபுரம் கொண்டு சென்ரேம். கடனுக்கு ஓடும்படி அரசாங்க அதிபர் கூறியிருந்தார். நாவற்குழியில் இருந்து அகதிகளைக் காலை 10-20 க்கும் 10-40க்கும் இடையில் அகற்றினேம். பின்னர் நான் பணிமனைக்குச் சென்றேன். இதன்பின்னர் எனது பிராந்திய உதவிக் கட்டுப்பாட்டாளர் யாழ். கச்சேரியில் நடைபெற்ற மாநாட்டுக்குச் செல்லுமாறு அழைத்திருந்தார். காலை 11 மணிக்கு மாநாடு நடைபெற்றது. நாம் போனபோது மாநாடு தொடங்கியிருந்தது. 12-30 மணிக்கு மாநாடு முடிந்ததும் நேரே பணிமனைக்கு வந்தேன். பி. ப. 1 மணிக்குப் பணிமனைக்கு வந்திருப்பேன். வந்தவுடன் ஊழியர்கள் அனைவரும் என்னைச் சூழ்ந்து கொண்டு கடத்தப்பட்ட பேருந்துபற்றிக் கூறினர். அதுவரை இதுபற்றி எனக்குத் தெரியாது. நாவற்குழியில் பணி முடிந்து, மாநாடு சென்று பின் பணிமனை வந்தேன். வந்த உடன் பேருந்து கடத்தல் பற்றிக் கூறப்பட்டது.

நாவற்குழியில் உள்ள பணி முடிவடைந்ததும், அங்கு சென்ற ஓட்டுநர்களும், நடத்துநர்களும் பணிமனை மீண்டனர். பேருந்து ஒன்று வரவில்லை எனக் கூறினர். அப்பொழுதுதான் பேருந்துக் கடத்தல் பற்றி முதல் முதல் எனக்குத் தெரியும். பணிமனை சென்றதும், செயலியக்க உதவியாளரின் அறைக்குச்சென்றேன். அவரின் பெயர். திரு. சொக்கலிங்கம். என்னைக் கண்டதும் எழுந்தார். 23ஸ்ரீ 2227-ம் எண்பேருந்து பொலிசாரால் கடத்தப்பட்டதாகக் கூறினுர். நகைக்கடைக் கொள்ளைக்குப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறினுர்.

அதைப்பற்றிப் பதிவேட்டில் எழுதிக்கொண்டிருந்தார். எனக்கு விபரம் சொன்னபின், பதிவு எழுதி முடித்தார். எனது கடமையின்பொழுது பதியும் பதிவேட்டில் எழுதினூர். இங்கு அஃது உண்டு: திரு. சொக்கலிங்கத்தின் பதிவின் கீழ் எனது பதிவையும் எழுதினேன். வேலை திறுத்தம் போன்ற முக்கிய விடயங்களை அப்பதிவேட்டில் எழுதுவோம். அங்கு அவை பதியப்பட்டு அலுவலகப் பயன்பாட்டிற்காக பணிமனை அலுவலகத்தில் வைக்கப் படும். திரு. சொக்கலிங்கத்தின் பதிவு அதில் உண்டு. 1-4-76 தொடக்கம் அதில் பதிவுகள் உண்டு. அந்நாள் பதிவு முதலாம் பக்கத்தில் உண்டு. கடைசிப் பதிவு, 77-ம் பக்கத்தில் 11-2-1978-ல் செய்யப்பட்டுள்ளது. திரு. சொக்கலிங்கத்தின் பதிவு 54-ம்பக்கத்தில் 17-8-77-ல் 12-40 மணிக்குச் செய்யப்பட்டது. அதை வாசிக்கிறேன். (அப்பதிவின் உறுதி செய்த படி X 22 எனக் குறியிடப் படுகின்றது.)

"12-40 மணி. இன்று 12-30 மணியளவில் காவலர் திரு. பரமேஸ்வரன் தொலைபேசியில் பின்வரும் விபரம் கூறினூர். 23ஸ்ரீ 2227 எண்ணுள்ள பேருந்தினைச் சீருடை அணிந்த 12 பொலிசாரும், சிங்களம் பேசிய ஆட்கள் இருவரும் கடத்திக் கன்னதிட்டி வீதிக்குப் போகுமாறு பணித்து ......"

வினு: கன்னதிட்டி வீதி, நாகவிகாரையில் இருந்து எவ்வளவு தொலைவு? விடை: அரை மைல் இருக்கும். சில நகைக் கடைகளைக் கொள்ளையடித்தனர். பேருந்தில் இருந்து இறங்கிய அவர் ஒருவாறு யாழ். பேருந்து நிலையம் வந்தார். கொள்ளையடிக்கப்பட்டமை பற்றி வேறு சிலரும் உறுதிப்படுத்தினர். நாகவிகாரைக்குப் பக்கத்தில் பேருந்து கடத்தப்பட்டது: யாழ். பொலிஸ் நிலையத்துடன் தொலைபேசியில் தொடர்பு கொள்ள முயன்றேன். முடியவில்லை: கச்சேரியில் இருந்து வந்த பணிமனை சுப்பிரிண்டனிடம் இதைக் கூறினூர்:- மாநாட்டில்

கலந்து கொண்டபின் அவர் வந்திருந்தார். அவர் முயன்று, இந் நிகழ்வு பற்றி யாழ். வளாகத்தில் இருந்த ஏ. எஸ். பி. (காங்கேசன் துறை) க்குக் கூறினூர்.

காவலர் பரமேஸ்வரன் குறிகாட்டுவானில் இருந்து பேருந்துவில் வந்தார். வெலிங்டன் சந்தியில் பேருந்து வில் இருந்து இறங்கினூர். யாழ். பேருந்து நிலையத்தில் இருந்து தொலைபேசியில் பணிமனைக்கு விபரம் தெரி வித்த அவர் பின்பு பணிமனைக்கு வந்தார். நானும் உடன் பதிவேட்டில் எழுதினேன். அப்பொழுது 01-10 மணி இருக்கலாம். நான் எழுதியது இதுதான். (வாசிக் கிறூர்).

"கச்சேரியில் நடைபெற்ற மாநாட்டின் பின் பணி மனை திரும்பியதும், செயலாக்க உதவியாளர் பின்வரும் விபரத்தைக்கூறினூர்". 23ஸ்ரீ2227-ம் எண்ணுள்ள பேருந் தினை நாகவிகாரைக்கு எதிரில் உள்ள ஆரியகுளம் சந் தியில் வைத்துப் பொலிசார் கடத்தி, நகைக்கடைகளைக் கொள்ளையடிக்கப்பயன்படுத்தினர். டி. ஐ. ஜீ., அரசாங்க அதிபர் ஆகியோருடன் கச்சேரியிலும், அரசர் விடுதி யிலும் தொலைபேசியில் தொடர்பு கொள்ள முயன்று முடியாமல், யாழ். வளாகத்தில் இருந்து காங்கேயன் துறை ஏ. எஸ். பி. யைத் தொடர்புகொண்டு நிகழ்வை விளக்கினேன். தான் விசாரித்ததாகவும் பொலிசார் செய்திருக்க முடியாது எனவும் அவர் கூறினூர், ஊழிய ரிடையே பதட்டநிலை இருந்தது. 23ஸ்ரீ2227 பேருந்து வராமையால் அதன் ஊழியரின் நிலைபற்றி அறிய ஆவ லாக இருந்தனர். பொலிசாருடன் தொடர்பு கொள்ள எல்லா நடவடிக்கைகளும் எடுத்தேன். 14-15 மணித்தி யாலமளவில் பணிமனைக்குப் பேருந்து வந்தது. பேருந்து கடத்தப்பட்டு நகைக் கடைகள் கொள்ளையடிக்கப்பட் டதுபற்றிப் பேருந்து ஓட்டுநரும், நடத்துநரும் அறிவித் தனர்.

திரு. சொக்கலிங்கம் பதிந்த உடன் நானும் பதிந்தேன். (இப்பதிவு X 23 எனக் குறியிடப்படுகின்றது.) கடத்தப்பட்ட பேருந்து ஊழியர்களின் நிலைபற்றி ஏனைய ஊழியர் கவலையுற்றனர். கடத்தப்பட்ட பேருந்து ஊழியர்கள் பி.ப. 2-15 மணிக்கு வந்தனர். அரைமணி நேரத்துக்கு முன் ஏனைய ஊழியர் வந்திருந்தனர். அவர்களிடமும் விசாரித்தேன். காவலர் திரு. பரமேஸ்வரனும் வந்தார். பணிமனையில் அறிக்கைகள் பதியப்பட்டன. தவிர அடுத்தநாள், 18-ம் நாள் என நினைக்கிறேன். டி. ஐ. ஜீ. திரு. அனு செனிவிரத்தினவும் இவ்வூழியர்களின் அறிக்கையைப் பதிவு செய்தார். இதற்கிடையில் அவரையும் தொலைபேசியில் அழைத்தேன். தவிரச் செயலகத்தலைமை முகாமையாளருக்கும் சிறப்பு அறிக்கை அனுப்பினேன். (அறிக்கையின் உறுதி செய்யப்பட்ட படி X 24 எனக் குறியிடப்படுகிறது.) அன்று மாலை 5 மணியளவில் பணிமனையை விட்டு நீங்கினேன். இந் நிகழ்வுபற்றிப் பணிமனையில் இருக்கும்பொழுது யாழ். பா. உ. க்குக் கூறினேன்.

திரு. அண்டர்வூட்: (ஆணையாளரைப்பார்த்து) ஐயா, யாழ். கச்சேரி மாநாட்டில், டி. ஐ. ஜீ. கூறியவை பற்றி நேற்றுக் குறிப்பிடப்பட்டது. இம்மாநாடு பற்றிச் சாட்சியிடம் விளக்கமாகக் கேட்க அனுமதி தருக. ஆணையாளர்: தந்தேன். திரு. அண்டர்வூட்: வினா: நாவற்குழிப் புகை வண்டி நிலையத்துக்குச் சென்று, பின் மாநாட்டுக்குச் சென்று, பின் பணிமனை திரும்பியதாகக் கூறினீர்கள். எங்கே மாநாடு நடைபெற்றது? யார் யார் மாநாட்டில் கலந்து கொண்டார்கள்? விடை: அரசாங்க அதிபர் மாநாட்டுக்குத் தலைமை தாங்கினார். டி. ஐ. ஜீ. திரு. அனு செனிவிரத்தின, யாழ். எஸ். பி. திரு. ஏ. எஸ். செனிவிரத்தின, எஸ். பி. திரு. லியனகே, திணைக்களத் தலைவர்கள், மருத்துவ அத்தியட்சகர், யாழ். மாநகராட்சி மன்றச் சிறப்பு ஆணையாளர் திரு. சிவஞானம், உதவி

சுங்கக் கலெக்டர் திரு.சேனரட்ண ஆகியோர் இருந்தனர். மருத்துவ அத்தியட்சகரின் பெயர் தெரியாது. அவர் மருத்துவர். தவிர, உதவி அரசாங்க அதிபர்கள், தொலைபேசிப் பகுதியினர், அஞ்சற் பகுதியினர் ஆகியோரும் இருந்தனர். பல விடயங்கள் பேசப்பட்டன. உணவுப் பொருட்கள் கொண்டு வருவது பற்றிப் பேசப்பட்டது. வினா: போக்குவரத்துத் தொடர்பாகக் கஷ்டம் இருந்ததா? விடை: எட்டு அல்லது ஒன்பது உதவி அரசாங்க அதிபர்கள் இருந்தனர். பொலிசார் பொதுமக்களைத் தாக்குவதால் உணவு கொண்டு செல்ல அவர்களின் ஓட்டுநர்கள் கஷ்டப் படுவதாகக் கூறினார்கள். தவிர பேருந்துப் போக்குவரத்து, தொலைபேசித் தொடர்பு என்பனபற்றியும் பேசப்பட்டது. வளாக மாணவர் பற்றியும் பேசப்பட்டது. வளாக மாணவரை அனுப்ப எமது உதவி கோரப்பட்டது. பொலிசார் பற்றி மருத்துவ அத்தியட்சகர் முறையிட்டார். அவர் ஒரு சிங்களவர். பொலிசார் பிழையாக நடந்து மக்களைத் தாக்குவதாகக் கூறினார். மாநகராட்சி ஆணையாளர் திரு. சிவஞானமும் பேசினார். உதவி சுங்கக் கலெக்டர் திரு. சேனரத்தினவும் பேசினார். பொதுமக்கள் மீது பொலிசார் தாக்கியமைபற்றி முறையிட்டார்.

பொதுமக்கள் பலர் பொலிஸ்நிலையம் செல்ல அஞ்சுவதால் கச்சேரியில் முறைப்பாடுகளை ஏற்பது என ஏற்றுக் கொள்ளப்பட்டது. பொலிசாருக்கு எதிரான குற்றச்சாட்டுகளை எழுத விசேட அலுவலர் நியமிக்கப் பட்டுள்ளதாக டி. ஐ. ஜீ. கூறினார்.

வினா: நேற்றைய உங்களின் அறிக்கையில் உங்களுக்குத் தெரிந்த அத்தனையும் தெரிவித்தீர்களா? விடை: இல்லை. எனக்குத் தெரிந்த எல்லாவற்றையும் கூறமுடியவில்லை. வினா: டி. ஐ. ஜீ. தொலைபேசியில் கூறிய அனைத்தையும் உங்கட்கு நினைவுள்ளவரை கூறமுடியுமா? விடை: அரசாங்க அதிபரின் மேசையில் இருந்த தொலைபேசியை

அவர் எடுத்தார். வளாக மாணவர்களின் போக்கு வரத்தை ஒழுங்குசெய்ய, டி.ஐ.ஜீ. திரு. அனு செனிவிரத்தினவின் அருகில் நின்றேன். பருத்தித்துறைப் பேருந்து நிலையத்துடன் தொடர்பு கொள்ளவேண்டும். எனவே தொலைபேசிக்குச் சென்றேன். டி. ஐ. ஜீ. என்னுடன் கதைத்தார். அவர் சொன்னதை அறிக்கையில் கூறினேன். "ஒரு சிங்கள மாணவனுக்கு ஊறுவிளையுமாயின் தென்னிலங்கையில் உள்ள தமிழ் மக்கள் தொகை அத்தனையும் அழிக்கப்பட்டுவிடும்'' என்றார். பின்பு தொலைபேசியில் கதைக்கத் தொடங்கினார். ஏ. எஸ். பி. நூர்தீன் இருக்கிறாரா எனக் கேட்டார். "அவர் எங்கே'' எனப் பின்னர் கேட்டார். தொடர்ந்து "பொலிசாரின் பிழையான நடத்தைபற்றி முறைப்பாடுகள் உண்டு'' என்றவர், அடிப்பதை நிறுத்துமாறு கூறினார். நூர்தீன் வந்தவுடன் தன்னுடன் கதைக்கச் சொன்னார்.

மாநாடு முடிந்து பணிமனை சென்றதும் பேருந்து கடத்தியமை பற்றி அறிந்தேன். பணிமனை உயர் அதிகாரிகளைச் சந்திக்கவில்லை. கலாச்சார அமைச்சர், பிரதிப் பாதுகாப்பு அமைச்சர், டி. ஐ. ஜீ. ஆகியோர் கலந்துகொள்ளும் மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு யாழ். பா. உ. தொலைபேசியில் செய்தி அனுப்பியிருந்தார். என்னுடன் அவர் கதைக்கவில்லை.

பேருந்துகள் அன்று ஓட்டப்பட்டனவா என இரவுக் கடமை அலுவலரிடம் திரு. அனு செனிவிரத்தின டி. ஐ. ஜீ. கேட்டிருந்தார். அவர் அப்பொழுதுதான் கடமைக்கு வந்திருந்தமையால் விபரம் தனக்குத் தெரியாது என்றார். வினா: நடந்தமைபற்றி அவரிடம் கூறினீர்களா? விடை: ஆம். அன்று பேருந்துகள் ஓடவில்லை. 15-ம் நாள் ஓடின. 16-ம் நாள் காலை 9 மணி வரை ஓடின. அதன் பின்பு இல்லை. 16, 17, 18-ம் நாட்களில் ஒரு பேருந்து கூட ஓடவில்லை. 23-ம் நாள் ஆகக் குறைந்த பேருந்துகளை ஓட்டினோம். 1977 அக்டோபர் 1-ம் நாள் தொடக்கம்தான் வழமையான சேவை நடைபெற்றது.

வினு: அரசாங்க அதிபரின் இல்லத்திற்கு நீங்கள் சென்ற பொழுது யார் யார் இருந்தனர்? விடை: மாண்புமிகு ஹுருல்லே, திரு. வேரப்பிட்டியா, டி. ஐ. ஜீ. திரு. அனு செனிவிரத்தின, எஸ்.பி. திரு. செனிவிரத்தின, அரசாங்க அதிபர், யாழ். பா. உ., சாவகச்சேரி பா. உ., உடுப்பிட்டி பா. உ., கோப்பாய் பா. உ. ஆகியோர் இருந்தனர். அன்று 17-ம் நாள், பின்னிரவு, நான் கலந்துகொண்ட இரண்டாவது மாநாடு இதுதான். கடத்தப்பட்ட பேருந் தான, 23ஸ்ரீ2227-ன் ஓட்டுநர் ஜேம்ஸ், நடத்துநர் செல்வராஜா, காவலர் பரமேஸ்வரன் ஆகியோருடன் வருமாறு அழைக்கப்பட்டேன். என்ன நடந்ததென அமைச்சரும், பிரதி அமைச்சரும் என்னைக் கேட்டனர். நான் விபரம் கூறினேன். எனது அறிக்கை பதியப்பட வில்லை. என்ன நடந்தது என்பதை ஓட்டுநர் விபரமாக அமைச்சருக்குச் சிங்களத்தில் கூறினுர். இவர்களின் வாய் மூலங்கள் பதியப்பட வேண்டுமென டி.ஐ.ஜீ. க்குப் பிரதி அமைச்சர் கட்டளை இட்டார். மறுநாள் இவர்களின் வாய்மூலங்கள் பதியப்பட்டன.

தெற்கில் இருந்து புகைவண்டி, விமானம், கப்பல் என்பன மூலம் வடக்கு வருகின்ற அகதிகளை அவரவர் இடங்களுக்கு அனுப்பும்பணி இ. போ. ச. யாழ். பணி மனை சுப்பிரிண்டன் என்ற முறையில் என்னுடைய பொறுப்பு. வடக்கிலிருந்து தெற்கேயும் அகதிகளை அனுப்பவேண்டியிருந்தது. கண்டி, குருணுகலே, கிளி நொச்சி ஆகிய இடங்களிலிருந்து வந்த பேருந்துகளை யும் உள்ளடக்கின், ஏறத்தாழ 50,000 அகதிகள் ஏற்றி இறக்கப்பட்டனர். இதைப்பற்றிய குறிப்புகள் பதியப் பட்டுள்ளன. கப்பலில் வந்த அகதிகள் ஏற்றியமை பற்றிய குறிப்பு உண்டு. அகதிகளை ஏற்றவே நாவற்குழிப் புகை வண்டி நிலயத்துக்குப் பேருந்துகளை அனுப்பினேன். 1977 ஆகஸ்ட் 26-ல் காங்கேசன்துறைக்குக் கப்பல்கள் வந்தன. இதற்கான போக்குவரத்து ஒழுங்கு செய்யு மாறு 25-ம் நாள் எனக்கு அறிவிக்கப்பட்டது. இதுபற்றி

25-8-77 அன்று 60-ம் பக்கத்தில் குறிப்பு எழுதினேன். (அக்குறிப்பு ×25 எனக் குறியிடப்பட்டது.)

எனது உதவியாளர் திரு. பி. தர்மலிங்கம் இந்தக் குறிப்பை எழுதினர். எஸ். பி. திரு. தருமராசா என்னுடன் தொலைபேசியில் பேசினர். 26-ம் நாள் காலை 9 மணிக்கு மூன்று கப்பல்கள் 1900 அகதிகளுடன் காங்கேசன்துறைக்கு வருவதாகவும், அவர்களை அனுப்பப் பேருந்துகள் ஒழுங்கு செய்யுமாறும் கூறினர். காங்கேசன்துறைக்கு மருத்துவர்கள், தாதியர், முதலுதவிக்கருவி என்பனவற்றை மறுநாள் காலை கொண்டுசெல்ல 8–30 மணிக்கு மருத்துவ அத்தியட்சகருக்குச் சிறிய பேருந்து ஒன்று தேவை எனவும் கூறினர். செய்தியைப் பிராந்தியக் கட்டுப்பாட்டாளர் எழுதினர். இதை உறுதிப்படுத்தி எஸ். பி. பின்னர் 25-8-77-ல் எழுதினர். கப்பலில் 2000, விமானத்தில் 2000, புகைவண்டியில் 500 என வந்த அகதிகளைப் பேருந்துகள் ஏற்றி இறக்கின. நாகவிகாரையில் இருந்து அநுராதபுரத்துக்குச் சிங்களவர் 5000 பல நாட்களினூடாக அனுப்பப்பட்டனர். கொழும்பு பணிமனைப் பேருந்துகள் வளாக மாணவர்களை ஏற்றி இறக்கின. செல்வச்சந்நிதிக் கோவிலுக்காகப் பருத்தித்துறைப் பணிமனைக்கு இப்பேருந்துகள் அனுப்பப்பட்டன. உதவிப் பிராந்தியக் கட்டுப்பாட்டாளர் இதை ஒழுங்கு செய்திருந்தார். பருத்தித்துறைப் பணிமனை சுப்பிறின்டன் பொறுப்பாக இருந்தார்.

எமது பணிமனையில் 12 சிங்கள ஊழியர் உளர். அவர்கட்கு எதுவும் நடக்கவில்லை. இவர்களுள் நால்வர் அஞ்சினர். என்னிடம் முறைப்பட்டனர். தாக்கப்பட்டதாக முறையிடவில்லை. எனது வீட்டில் இரண்டு நாட்கள் அவர்களை வைத்திருந்தேன். கொழும்புக்குப் பேருந்தில் அனுப்பினேன். ஒருவரைத்தவிர ஏனையோர் 17-ம் நாளன்று நாகவிகாரை சென்றனர். காரில் அவர்களை

அங்கு அனுப்பினேம். ஒருவர் மட்டும் பணிமனைக்கு முன்பாக இருந்தார். போகவில்லை.

18-ம் நாள் இரு மாநாடுகள் நடைபெற்றன. அன்று தான் நாவற்குழிப் புகைவண்டி நிலையத்துக்குப் பேருந்து களை அனுப்பினேன். அன்றுதான் பேருந்தும் கடத்தப் பட்டது. சிங்கள அகதிகளை நாகவிகாரையில் இருந்து அனுப்புவதற்கான மாநாடு அன்று காலை 10 மணிக்கு நடைபெற்றது. இதற்கு முன் காலை 8 மணிக்கு ஆரிய குளச் சந்தியில் வைத்து எமது ஊழியர்கள் இருவர் தாக்கப்பட்டனர். இரும்பு ஓட்டுநர் திரு. ஏ. பாலசுப் பிரமணியம், ஓட்டுநர் ஆர். கந்தையா ஆகிய இருவரும் தாக்கப்பட்டனர். அவர்களின் வாய் முறைப்பாடு பதி யப்பட்டது. எனது உதவியாளர் இதுபற்றிப் பதிவேட் டில் எழுதினர். 18-8-77-ல் 55, 56-ம் பக்கங்களில் இதுண்டு. (இது × 26 எனக் குறியிடப்படுகின்றது. சாட்சி அதனை வாசிக்கின்றார்.)

திரு. கந்தையா மீதான தாக்குதல் பற்றியும் பதி யப்பட்டது. திரு. சொக்கலிங்கம் முறைப்பாட்டை எழு தினர். வெவ்வேறு நேரத்தில் இவர்கள் ஆரியகுளம் சந்தியில் வைத்துத் தாக்கப்பட்டனர். (திரு. கந்தையா தொடர்பான குறிப்பு × 27 எனக் குறியிடப்படுகின் றது. 18-8-77 நாளன்று 56-ம் பக்கத்திலுள்ள குறிப்பு.) வினு: பணிமனை சுப்பிறின்டன் யார்? விடை: நான்தான். (சாட்சி தொடர்ந்து வாசிக்கிறார்) வினு: முறைப்பாடு செய்தீர்களா? விடை: டி. ஐ. ஜீ. க்கு இதுபற்றி அறிவித் தேன். ஏ. எஸ். பி. திரு. ஜயசூரியா இதற்குரிய வாய் முறைப்பாட்டைப் பதிவுசெய்தார். A 951 எனக் கூறப் பட்டது. A 851 என்பதே சரியான எண்.

**திரு: ஜீ. பி. எஸ். டி. சில்வா: வினு:** உங்கள் பேருந்து ஊழி யரிடமிருந்து பெற்ற விபரங்கள் தான் பேருந்து கடத்தல் பற்றிக் கூறிய சாட்சியங்கள்? **விடை:** பேருந்து ஊழியர்,

உதவி இயக்க அலுவலர், காவலர் ஆகியோரிடம் இருந்து பெற்ற தகவல்களே. வினு: 17-8-77 அன்று நடைபெற்ற மாநாட்டில் திரு. அனு செனிவிரத்தினு பற்றிக் கூறிய அறிக்கை பற்றிக் குறிப்பிட்டீர்கள். விடை: ஆம். (இந்த அறிக்கைகளின் உறுதி செய்யப் பட்ட படிகளைத் தருமாறு கேட்கப்பட சாட்சியும் தரு வதாக ஒத்துக்கொள்கிறுர்.)

பிற சட்டத்தரணிகள்: கேள்விகள் இல்லை.

கந்தையா சிவஞானம்: (உறுதிமொழியப்பட்டது) 39வயது. யாழ். மாநகராட்சிமன்ற சிறப்பாணையாளர்.

அழைப்பாணை அனுப்பப்பட்டபின், சாட்சி தன்னி டம் வந்தமை, கோவையைக் காட்டியமை, தான் பார்த் தமை, சாட்சி உடல்நல மற்றுள்ளமை, அறுவைச் சிகிச் சைக்காக மருத்துவமனை செல்ல உள்ளமை என்பனபற் றித் திரு. கதிர்காமர் கூறியதும், உட்கார்ந்த வண்ணம் சாட்சியமளிக்க அனுமதி வழங்கப்பட்டது.

திரு. கதிர்காமர்: வினு: நீங்கள் உள்ளூராட்சிச் சேவை உறுப்பினரா? எப்பொழுது சேர்ந்தீர்கள்? என்னவாகச் சேர்ந்தீர்கள்?என்னவாக உள்ளீர்கள்? விடை: ஆம்.1960-ல் கணக்கப்பிள்ளையாகச் சேர்ந்தநான், 1972-ல் இருந்து கணக்காளராகிப் பின் இப்பொழுது 28-7-77-ல் இருந்து யாழ். மாநகராட்சி மன்றச் சிறப்பாணையாளராக உள் ளேன். ஆகஸ்ட் 1975-ல் மாநகராட்சிமன்றம் கலைக்கப் பட்டது. 1977 ஆகஸ்டில் நான் யாழ். மாநகராட்சிச் சிறப்பாணையாளராக, அதன் நிர்வாகத்திற்குப் பொறுப் புடையவனுக இருந்தேன். உள்ளூராட்சி அமைச்சுக்கு எனது கடமைகள் பற்றி அறிவிப்பேன். அவர்கட்குப் பொறுப்பாக உள்ளேன். ஆகஸ்ட் 16-ம் நாள், காலை 7 மணிக்கு மாநகராட்சி மன்றத்திற்குச் சொந்தமான சந்தைக் கடைகள் சேதப்படுத்தப் படுவதாக, மாதிரிச்

சந்தை மேற்பார்வையாளர் திரு. சின்னத்தம்பி எனக்கு அறிவித்தார். பொலிசார் பொதுமக்களுக்குச் சேதம் விளைவித்தபடியால், எதிர்ப்புத் தெரிவிக்க மக்கள் கூடியுள்ளதாக மேற்பார்வையாளர் திரு. கிறிஸ்ரியும் கூறினார். கடைகளைப் பூட்டுமாறு மக்கள் கூறுவதாகவும் ஆலோசனை கூறுமாறும் திரு. கிறிஸ்ரி கேட்டார். அங்கு 100கடைகள் இருந்தன. கடை வைத்திருப்பவர்கள் விரும்பியவாறு செல்யலாமெனக் கூறிய நான் பிரதான வாயிலைத் திறந்து வைத்திருக்குமாறும் கூறினேன். அவைமூடப்படின் சந்தை மூடப்பட்டதாகிவிடும்.

மாதிரிச் சந்தையின் தரைத்தட்டில் 102 கடைகள் உள. முதல் மாடியில் 30 கடைகள் உள. இவை யாழ். மாநகராட்சி மன்றத்திற்குச் சொந்தமானவை. வர்த்தகர்கள் எம்மிடம் வாடகைக்கு எடுத்து வியாபாரம் செய்கின்றனர்.

திரு. கிறிஸ்ரிக்குச் செய்தி கூறியபின் காலை 7-50 மணிக்கு வீட்டிலிருந்து அங்கு சென்றேன். மாநகராட்சிக்குச் சொந்தமான மின்சக்தி நிலையம் சென்று அங்குள்ள ஊழியர்கள் 15 பேருடன் கதைத்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது ஆண்களும், பெண்களுமாகப் பதட்ட நிலையில் உள்ளமக்கள் பாதுகாப்புத்தேடி மின்சக்திநிலைய வளவிற்குள் வந்தனர். சிலர் நிலையத்தினுள்ளும் வந்தனர். பொலிசாருக்கும், பொது மக்களுக்கும் இடையே அமர் நடந்தமையால் அங்கு புகலிடம் தேடி வந்ததாகக் கூறினர். காலை 8-30 மணியளவில் அங்கிருந்து மாநகராட்சி அலுவலகம் சென்றேன். அலுவலர்கள் வெளியே செல்லாது இருக்கைகளில் இருக்குமாறு கேட்டுக்கொண்டேன்.

மேற்பார்வையாளரிடமிருந்து மீண்டும் செய்தி வந்தது. காய்கறிச் சந்தையின் பின்பகுதி எரிவதாகவும், உள்ளிருப்போர் தீயை அணைக்க முயல்வதாகவும்,

பொலிசார் தடைசெய்வதாகவும், வெளியார் அங்கு வரமுடியாது பொலிசார் தடைசெய்துள்ளதால், என்னை அங்கு வரவேண்டாமெனவும், பாதுகாப்பில்லை எனவும் கூறினர். தீயணைக்கப்படுவதைப் பொலிசார் தடைசெய் வதாக அவர் கூறினர். பொலிஸ் நிலையத்தில் எஸ். பி., ஏ. எஸ். பி., தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டர் ஆகியோரைத் தொலைபேசியில் அழைக்க முடியவில்லை. அவர்கள் அங்கு இல்லை. வினு: எந்த ஏ. எஸ். பி. யைக் கேட்டீர்கள்? பெயர் என்ன? விடை: பெயர் சொல்லிக் கேட்கவில்லை. எஸ். பிக்கு மட்டும் அவரின் நேரடித் தொலைபேசியில் அழைக்க முயன்றேன். பின்னர் அரசாங்க அதிபர் லால் விஜயபாலாவைத் தொலைபேசியில் அழைத்தேன். அவர் அங்கு இல்லை. மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஏ. ஏ. ஜோசெப் அவர்களைத் தொலைபேசியில் அழைத்தேன். தகவலைக் கூறினேன். தகவலைக் கூறுவதுடன், மாதிரிச் சந்தையின் தீயை அணைக்க அவர்களின் உதவி பெறுவதும் நோக்கமாக இருந்தது. நெருக்கமான அவ்விடத்திற் தீ பரவினுல் ஆபத்து. மாதிரிச் சந்தையிற் தீயெனில் ஆபத்து. எனவே கொழும்பில், சிரேட்ட உதவிச் செயலாளருடன், தொலைபேசியில் தொடர்புகொண்டு கிடைத்த தகவலைத் தெரிவித்தேன். முதலிற் சந்தைத் தீயெனத் தகவல் கிடைத்தது. பின்னர் பொலிசார்தான் தீ வைத்ததாக மக்கள் கூறியதாகத் தகவல் தந்தவர் சொன்னர். இவ்வாறு தகவல் கிடைத்தது எனவும், உண்மை பொய் தெரியாது எனவும் கூறினேன். காலை பத்து மணியளவில் திரு. சின்னத்தம்பி "மாதிரிச் சந்தையில் உள்ள கடை ஒன்று எரிகிறது" எனச் சொன்னர். உடனே பலாலியில் உள்ள இராணுவத்தினருடன் தொலைபேசியிற் தொடர்புகொண்டு, நீர்த்தாங்கி லாறிகளை விமான நிலையத்திலிருந்து அனுப்புமாறு கேட்டேன்.

திரு: சின்னத்தம்பி தீயைப் பற்றிக் கூறிய பின்னர் நான் அங்கு செல்லவில்லை. சிறிது நேரத்தின் பின் சென்றேன். காய்கறிக் கடையிற் தீயென முதலிற் கூறினர்;

இராணுவத்தினரின் உதவி கேட்டேன். வர இயலவில்லை என்றனர். பின்னர் மாதிரிச் சந்தையிற் தீயெனச் சின்னத்தம்பி செய்தி கூறினார். உதவி அரசாங்க அதிபருடன் கதைத்தேன். காய்கறிச் சந்தை எரிந்து இறங்கி விட்டது; மாதிரிச் சந்தையைக் கட்ட 20 இலட்சம் மாநகராட்சி மன்றத்திற்குச் செலவாயிற்று. அங்கு தீ எனில் எமக்கும், வர்த்தகருக்கும் நஷ்டம்; எனவே தீயை அணைக்க அவரின் உதவி கேட்டேன். அரசாங்க அதிபர் அங்கில்லை என்றார். பலாலி செல்வதாகக் கூறினார். அங்கு ஐ. ஜீ. பி., படைத்தளபதி, உயர் அதிகாரிகள் வருவதாகக் கூறினார்.

மத்தியானம் 12 மணியளவில் இடம் வெறிச்சோடி விட்டது. பாதுகாப்புக் கருதி எமது அலுவலர் சிலர் நீங்கினார்கள். பி. ப. 1-15 மணியளவிற் கச்சேரிப் பொதுத் தொடர்பு அலுவலர் திரு. பி. எல். பற்றிக் செய்தி அனுப்பினார். "இராணுவ அதிகாரிகள் சந்தைக்கு வருவார்கள்'' எனக் கூறினார். பி. ப. 2-30 மணியளவில் எனது அலுவலர் சிலருடன் நீர் அள்ளப் பயன்படும் உபகரணங்களுடன், நான் அங்கு சென்றேன். அங்கு ஐ. ஜீ. பி., படைத்தளபதி, பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் திரு. ஜயசிங்கா ஆகியோரும் பிறரும் நின்றனர். ஜெனரல் சேபால அட்டிகல இராணுவத் தளபதியாக இருந்தார். அவரிடம் கதைத்தேன். மாடிக்குப் பரவிய தீயையணைக்க உதவக்கேட்டேன்.

அன்று காலை குழாய்களைத் திறந்திருந்தேன். நீர்க் குழாய்களையும் பயன்படுத்தக்கூடியதாக இருந்தது. தீயணைக்க அவற்றைப் பயன்படுத்தினேன். மாலை 4-30 மணி வரை அங்கு இருந்தேன். மேலும் அங்கு நிற்பது பாதுகாப்பு அல்ல என்பதால் நாம் மாநகராட்சி மன்ற அலுவலகம் வந்து அங்கிருந்து அவரவர் இடம் சென்றோம்.

**வினா :** ஐ. ஜீ. பி., படைத்தளபதி, திரு. ஜயசிங்கா ஆகியோர் எப்பொழுது கொழும்பு திரும்பினர். 16-ம் நாளா?

விடை: ஆம். வினு: ஐ. ஜீ. பி., படைத்தளபதி ஆகியோர் தீ ஏற்பட்ட இடத்திற்கு வந்தபொழுது அங்கு எஸ். பி. திரு. ஏ. எஸ். செனிவிரத்தினு நின்ருரா? விடை: எனக்குக் குறிப்பாக நினைவில்லை. அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர் ஆகியோர் நின்றனர். இவர்கள் பத்து நிமிடமளவில் அங்கு நின்று சுற்றிப்பார்த்தனர். அவ்வமயம் சுபாஸ் கபேக்கு அண்மையில் ஆஸ்பத்திரி வீதியில் ஏறத்தாழ 35 பொலிசார் நின்றனர். அங்கு உதவி இன்ஸ்பெக்டர்களோ, இன்ஸ்பெக்டர்களோ நின்றிருக்கலாம்.

17-ம் நாள் காலை அலுவலகம் சென்றேன். யாழ் நகரத்திற்குத் தேவையான வழங்கல்களைத் தொடர வேண்டியிருந்தது. எனக்கு அந்தப் பொறுப்பு உண்டு. முடிந்ததும், அரசாங்க அதிபரால் கூட்டப்பட்ட மாநாட்டுக்கு அழைக்கப்பட்டுச் சென்றேன். அங்கு டி. ஐ. ஜீ. திரு. அனு செனிவிரத்தினு, யாழ். எஸ். பி. திரு. ஏ. எஸ். செனிவிரத்தினு, அநுராதபுர எஸ் பி. திரு. லியனகே மேலதிக அரசாங்க அதிபர், திணைக்களங்களின் உள்ளூர்த் தலைவர்கள் இருந்தார்கள். மருத்துவ அத்தியட்சகர் திரு. தசநாயக்கா ஆகியோர் இருந்தனர். எல்லாச் சேவைகளும் குறைவின்றி, நிறுத்தப்படாது நடை பெறச் செய்வதே மாநாட்டின் நோக்கமாகும். 16-ம் நாள் நிகழ்வுகள் தொடர்பாகச் சேவைகள் நின்று விடக் கூடாதே என்பது தான் நோக்கம்.

டாக்டர். தசநாயக்காவை எனக்குத் தெரியும். எரிந்தமைக்குப் பொலிசார்தான் காரணமா என அவர் அரசாங்க அதிபரிடம் கேட்டார். இன்று காலைதான் அவ்வாறு அறிந்ததாகவும் உண்மை, பொய் தெரியவில்லை எனவும் கூறினுர். தெளிவுபடுத்தக்கோரினுர். இப்பொழுது அவர் யாழ்ப்பாணத்திற் கடமை புரிவதில்லை. மாற்றலாகிச் சென்றுள்ளார். எங்கு எனத்

தெரியாது. இம் மாநாட்டுக் குறிப்பு எனக்குக் கிடைக்க வில்லை. டாக்டர் தசநாயக்காவின் கேள்விக்கு அரசாங்க அதிபர் பதிலளிக்கவில்லை என்றே நினைக்கிறேன்.

மாநாடு முடிந்தபின் அலுவலகம் வந்தேன். எல் லாப் பணிகளும் சரியாக நடைபெறவேண்டும் என விரும்பினேன். பி. ப. 2 மணிவரை அங்கு நின்றேன். அலுவலகத்திலிருந்து 3 மைல் தொலைவில், யாழ். மாநகராட்சி மன்ற எல்லைக்குச் சிறிதே வெளியில் உள்ள, நீர் இறைக்கும் இடம்சென்றேன். பலாலிவீதி வழி சென்றேன். அங்கு அரைமணி நின்றபின் யாழ்ப் பாணம் மீண்டு கொண்டு இருக்கையில், ஆரியகுளம் சந்தியில் வைத்து நாகவிகாரைக்குக் கிழக்குப் புறமாக நிறுத்தப்பட்டேன். வாங்குகள் போட்டு வீதி தடுக்கப் பட்டிருந்தது. 8 அல்லது 10 பொலிசார் என்னைநோக்கி வந்தனர். அவர்களுள் ஒரு பொலிசார் எனது காரின் முன்புறத்தைத் துவக்கின் அடியால் தாக்கினர். யாழ். மாநகராட்சி மன்றச் சிறப்பாணையாளர் நான் என் பதைத் தெரிவித்தேன். எனது காரில் அத்தகைய அறிவிப்புப் பலகையும் இருந்தது. நான் தாக்கப்படு வேன் என அஞ்சினேன். காரில் இருந்து இறங்கினேன். ஆங்கிலத்திற் பேசுவதைவிடச் சிங்களத்தில் பேசுவது காப்புடையது என எண்ணினேன். யாழ். மாநகராட்சி மன்றச் சிறப்பாணையாளர் எனச் சிங்களத்திற் சொன் னேன். ''எங்கே போகிறீர்கள்'' எனப் பொலிசார் ஒரு வர் கேட்டார். ''அலுவலகம் போகிறேன்'' என்றேன். ''காரின் பின் பெட்டகத்தைப் பார்க்க வேண்டும்'' என் றூர். திறந்து காட்டினேன். பூட்டிக் கதவடிக்கு வந் தேன். காரில் ஏறியதும் பொலிசார் ஒருவர் ''லாஸ்ட்ரைம் மேப்பாற என்ட எப்பா'' என்றூர். கடைசிமுறை இது. இனி இப்பாதை வழி வரவேண்டாம் என்றூர். எஞ்சினை இயக்கியதும் வலது பக்கம் நின்ற பொலிசார் எனது பெயரைக் கேட்டனர். எனது பெயர் சிவஞானம் என்று சொல்லிக் காரை நகர்த்தினேன். அலுவலகத்தில்

மின்சாரப் பொறியியலாளர் திரு. ஆனந்த மூர்த்தி நின்றுகொண்டிருந்தார். அன்று காலை 11 மணிக்கு வீதியில் தடுக்கப்பட்டுத் தாக்கப்பட்டதாகவும் மோட்டார் சைக்கிள்சேதப்படுத்தப்பட்டதாகவும் கூறினர். என்னைத் தாக்கிய பொலிசார் சீருடை அணிந்திருந்தனர்.

ஆணையாளர்: அவர்கள் சீருடை அணிந்திருந்தார்களா? ஆயுதம் தரித்திருந்தார்களா? விடை: ஆம்.

திரு. கதிர்காமர்: வினு: அவர்களின் பிரிவு எது? எண் எது? விடை: நினைவில் இல்லை. ஒருவர் மட்டும் உலோக எண் அணிந்திருந்தார். ஏனையோரிடம் உலோக எண் இல்லை. சரியாகத் தெரியவில்லை. நான் மிகவும் வியப்புற்றிருந்தேன். 17-ம் நாள் எனக்கு ஏதும் நடக்கவில்லை.

காலத்திற்குக் காலம் எனது அமைச்சுக்கு அறிய வேண்டும் என்பதற்காக அறிக்கைகள் அனுப்புவேன். 16-ம் நாள் தொடக்கம் நடைபெற்ற நிகழ்வுகள் பற்றியும் அறிக்கை அனுப்பினேன். இவற்றின் படிகள் கோவைகளில் உண்டு. ஆகஸ்ட் 20-ம் நாள் இணைப்பு அதிகாரி திரு. உருத்திரா இராஜசிங்கம் யாழ்ப்பாணம் வந்தார். மாநாடு நடத்தினர். நான் அம்மாநாட்டிற்கு அழைக்கப்பட்டிருந்தேன். அக்கூட்டம் பற்றிய குறிப்பு அவரின் உதவியாளர்களால் எனக்கு அனுப்பப்பட்டது.

(தேனீர் இடைவேளை)

திரு. கதிர்காமர்: வினு: அரசாங்க அதிபருக்கு ஆகஸ்ட் 18-ம் நாள் அனுப்பிய கடிதத்தை X 28 எனக் குறியிடுகின்றீர்கள். அதை வாசியுங்கள். விடை: (சாட்சி X 28ஐ வாசிக்கின்றுர்.) வினு: இக்கடிதத்தை எழுதி எவ்வாறு அவருக்கு அனுப்பினீர்கள்? விடை: நான் நேரடியாகச் சென்று கையளித்தேன். நகரசுத்தித் தொழிலாளரின் மீது தாக்குதல் நடைபெறலாம் என அஞ்சுவதாகவும் அக்கடிதத்தில் எழுதியிருந்தேன். இக்கடிதத்தை அரசாங்க

அதிபரிடம் கொடுத்ததும் அதை அவர் வடபிராந்திய டி. ஐ. ஜீ. திரு. அனு செனிவிரத்தினாவிடம் தனது குறிப்புடன் கொடுத்தார். ஆங்காங்கே தாக்குதல் நடைபெறுவதாகத் தெரிவித்தார். எனது முன்னிலையில் யாழ். எஸ். பி. யுடன் டி. ஐ. ஜீ. தொலைபேசியிற் கதைத்தார். ஐம்பது சதவீதமாக அல்லது அதற்குமேலாகப் பொலிஸ் நடமாட்டங்களைக்குறைக்குமாறு எஸ். பி. யிடம் கூறினார். பொலிஸ் நிலையத்திற்கு வெளியே நடமாட்டத்தைக் குறைக்குமாறும், ஐம்பது சதவீதமானவர்களைப் பொலிஸ் நிலையத்திற்குள் வைத்திருக்குமாறும் கூறினார். எனது முன்னிலையில் அரசாங்க அதிபர் இருக்கையில் கதைத்தார்.

ஆகஸ்ட் 16 தொடக்கம் ஆகஸ்ட் 31 வரை நடைபெற்ற நிகழ்வுகளை, எனக்கு எட்டியவரை அமைச்சுக்கு அறிக்கைகளாக அனுப்பிக்கொண்டிருந்தேன். 16-ம் நாள் தொடக்கம் 26-ம் நாள் வரையிலான நாளாந்த அறிக்கைகள் கொண்டகோவை என்னிடம் உண்டு. அவற்றை X 29 எனக் குறியிட்டு ஆணைக்குழுவிடம் தருகின்றேன். இவ்வறிக்கைகளை இணைத்து அனுப்பி எழுதிய கடிதம் X 29 A எனக்குறியிடுகின்றேன். 21-ம் நாள் தொடக்கம் 25-ம் நாள் வரையிலான நாளாந்த அறிக்கைகளை X 30 எனக் குறியிட்டுத் தருகிறேன். ஆகஸ்ட் 31-ம் நாள் கடிதம் 22-ம் 24-ம் நாட்களைப்பற்றியது. மேலதிக இணைப்புக்கள் X 31B, X 31C, X 31C, X 31C, X 31D, E, F எனக் குறியிடப்படுகின்றன. வினா: X 29 ஐ வாசிக்க முடியுமா? விடை: (சாட்சி வாசிக்கின்றார்.) இது 16-ம் நாள் நிகழ்வுகள் பற்றி அமைச்சுக்கு அனுப்பிய அறிக்கை. (17, 18, 19, 20-ம் நாட்களில் நடைபெற்ற நிகழ்வுகள் பற்றிய அறிக்கைகளையும் சாட்சி வாசிக்கின்றார்.)

யாழ். மாநகராட்சி மன்றத்தின் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த ஊழியர்கள் ஆள்சேதம் பற்றியும்,

போக்குவரத்துத்தடை பற்றியும் அஞ்சினார்கள் என X 29-ல் குறிப்பிட்டுள்ளீர்கள். நகர சுத்தித் தொழிலாளரில் இருந்து மேலே உள்ள அனைவரைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளீர்கள். எல்லா நிலைகளிலுமாக 1100 ஊழியர்கள் யாழ். மாநகராட்சி மன்றத்திற் பணிபுரிகின்றார்கள். அத்தியாவசிய சேவைகளை நடாத்துவது இவர்களின் பொறுப்பு. இவர்கள் அஞ்சினார்கள் என அறிவித்தார்கள். பொலிஸ் தாக்குதல் பற்றி அஞ்சினார்கள்.

ஆகஸ்ட் 20-ம் நாள் இணைப்பு அதிகாரி டி. ஐ. ஜீ. திரு. உருத்திரா இராஜசிங்கம் அவர்களால் கூட்டப்பட்ட மாநாடு பற்றிக் குறிப்பிட்டீர்கள். அம்மாநாட்டில் பல்வேறு திணைக்களங்களின் உள்ளூர்த் தலைவர்கள் இருந்தனர். அம்மாநாட்டுக் குறிப்பு X 32 எனக் குறியிட்டுத் தருகின்றேன், 19-ம் நாள் இரவு வந்த திரு. உருத்திரா இராஜசிங்கம் அக்டோபர் 7-க்கும், 9-க்கும் இடையில் திரும்பினார். மாநாட்டில் 23 பேர்வரை இருந்தனர். படைப்பகுதியினரும் இருந்தனர். யாழ். எஸ். பி. திரு. செனிவிரத்தினவும் இருந்தார். 20-ம் நாள் நடைபெற்ற இம்மாநாட்டிற்குத் திரு. உருத்திரா இராஜசிங்கம் தலைமை தாங்கினார். (X 32 எனக் குறியிடப்பட்ட மாநாட்டுக் குறிப்பு வாசிக்கப்பட்டது.) வினா: குறிப்பில் பல்வேறு தலையங்கங்களில் கூறப்பட்டதை வாசிக்க முடியுமா? விடை: இணைப்பு அதிகாரி கூறினார். (X 32-ல் இருந்து வாசிக்கின்றார்.)

வினா: ஆகஸ்ட் 20-ம் திகதி நாடெங்கிலும் வன்செயல் பரவிவிட்டதா? விடை: ஆம். 20-ம் நாள்மாலை 5 மணி தொடக்கம் யாழ்ப்பாணத்தில் ஊரடங்குச் சட்டம் அமுலில் வந்தது. தீவடங்கிலும் 18-ம், 19-ம் நாட்களில் வன்செயல் தலைவிரித்தாடியதை வானொலி

மூலம் அறிந்து கொண்டேன். 18-ம் நாளை விடப் 19-ம் நாள் வன்செயல்கள் அதிகரித்துக் கொண்டே இருந்தன. திரு. உருத்திரா இராஜசிங்கம் யாழ். இணைப்பதிகாரியாக நியமிக்கப்பட்டபின் ஏனைய இடங்கட்கும், இணைப்பதி காரிகள் நியமிக்கப்பட்டனர். 21-ம் நாள் யாழ்ப்பாண நிலைமை எல்லா வகையிலும் மோசமாக இருந்தது.

தொழிற்சங்கங்கள் சிறப்பாக எழுது வினைஞர் தொழிற்சங்கங்களும், ஏனைய பல தொழிற்சங்கங்களும் கருத்துக்களைத் தெரிவித்தன. பத்திரிகைகளின் செய்தி களைப் பார்த்தால் அவர்கள் அரசாங்க அதிபரையும், ஏ. எஸ். பி. யையும் யாழ்ப்பாணத்தை விட்டு இடமாற் றக் கோரினர். இதற்கான காரணம் தெரியவில்லை. யாழ். மாவட்டத்தின் பதட்ட நிலைக்கு இவர்கள் கார ணமாக இருந்தனர் எனக் கதைக்கப்பட்டது. (சாட்சி X 30-ல் இருந்து வாசிக்கின்றார்.) X 30-ல் உள்ள அறிக்கையில் யாழ். மாவட்டத்தில் நிறுவப்பட்ட அகதி கள் முகாம்களைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஏனைய இடங்களில் அகதிகளாக்கப்பட்டு, யாழ்ப்பாணம் வர விரும்பியவர்கட்கு இங்கு புகலிடம் அளிக்கப்பட்டது. 100 பேர் ஒவ்வொரு முகாமுக்கும் வந்து சென்றுகொண் டிருந்தனர். நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து இவர்கள் யாழ். மாவட்டத்தினுள் வந்தனர். புகை வண்டிகளிலும், பேருந்துகளிலும் வந்தனர்.

எனது சுகாதாரப் பிரிவுத் தலைவரால் அனுப்பப் பட்ட அறிக்கையை X 33 எனக் குறியிடுகின்றேன். (X 33 ஐ சாட்சி வாசிக்கின்றார்) 24-ம், 25-ம், 26-ம், 27-ம் நாட்களிலும் ஊரடங்குச் சட்டம் தொடர்ந்தது. 25-ம் நாளன்று மாலை 7 தொடக்கம் அதிகாலை 5 வரை ஊரடங்கியிருந்தது. 26-ம், 27-ம் நாட்களில் தீவிபத்து நடந்தது. இதுபற்றிய ஆவணங்கள் என்னிடம் உண்டு.

---

# ஆவணி அமளி

தமிழ்த்தொகுப்பு

க. சச்சிதானந்தன்

தமிழ் அகதிகள் மறுவாழ்வுக் கழகம்